# பொருளியல் நோக்கு

ஜனவரி 1993

## நிகாராகுவா இன்று

*பிராங்கோயிஸ் ஹௌடார்ட்*

## ஐரோப்பா, மூன்றாவது உலகம், இலங்கை

*சமன் கலேகம*

## இலங்கையில் ஜப்பானிய முதலீடு

*பியதாஸ ரத்னாயக*

## சனசக்தி திட்டத்தின் செயற்பாடு

பட்ரிக் மெண்டிஸ்

மக்கள் வங்கி வெளியீடு

# முன்னோட்டம்

இலத்தீன் அமெரிக்காவை (கரிபிய பிரதேசத்தையும்) பொறுத்தவரையில், 1979ம் வருடம் கொந்தளிப்புகளும் மாற்றமும் இடம்பெற்ற ஒரு வருடமாக இருந்தது. பிடல் கஸ்த்ரோவின் "ஜுலை 26 இயக்கம்" வெற்றி கண்டு 30 வருடங்களின் பின்னர், புரட்சிக்கு முன்னர் கியூபாவில் சர்வாதிகார ஆட்சி நடத்திவந்த பெடிஸ்டாவுக்கு இணையான வேறும் இரண்டு சர்வாதிகாரிகள் மக்கள் எழுச்சியினால் தோற்கடிக்கப்பட்டனர். நிகாராகுவாவின் அனஸ்டாசியோ சமோஸா மற்றும் கிரனாடாவின் எரிக் கெய்ரி ஆகிய இருவருமே இவ்வாறு கவிழ்க்கப்பட்ட சர்வாதிகாரிளாவர். தமது சமூகங்களை பொருளாதார ரீதியாவும், அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் துரிதமாக நிலைமாற்றம் செய்யும் பணிக்கெனத் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட நிகாராகுவாவின் சார்டினிஸ்டா புரட்சிகர இயக்கமும், கிரனாடாவின் நியூ ஜுவெல் புரட்சிகர இயக்கமும் அதிகாரத்துக்கு வந்தன.

சுமார் 10 ஆண்டுகளின் பின்னர், இந்த இரு நாடுகளினதும் அரசியல் தேசப்படம் நம்பமுடியாத அளவுக்கு மாற்றமடைந்து விட்டது. கிரனாடாவின் புரட்சி தற்கொலை செய்து கொண்டுள்ளது என்று கூறுவது ஒரு மிகைப்படுத்தப்பட்ட கூற்றாக இருக்கமாட்டாது; உள்ளகப் புரட்சிச் சதியொன்றின் விளைவாக, ஜனரஞ்சக கவர்ச்சி பெற்றிருந்த தலைவரான மொரிஸ் பிஷப் படுகொலை செய்யப்பட்டதனையடுத்து, அங்கு புரட்சிகர நிகழ்வுப் போக்கின் குரல்வளை நசுக்கப்பட்டது. இது மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியதுடன் பழைய ஒழுங்கினை மீள ஸ்தாபிக்கும் பொருட்டு, ஐக்கிய அமெரிக்காவின் ஆயுதம் தாங்கிய தலையீடு மேற்கொள்ளப்படுவதற்கு வழிகோலியது. நிகராகுவாவின் (அமெரிக்கர்களினால் நிதிப்படுத்தப்பட்ட) கொன்ராஸ்ட்களுடனான 10 ஆண்டுப் போர் பொருளாதாரத்தை முற்றிலும் ஒழித்துவிட்டது. இளம் சார்டினிஸ்டா அரசாங்கம் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் கணிசமான அளவில் முன்னேற்றங்களை சாதித்துக் கொண்டிருந்தபோதிலும், வெகுசனங்களை மிகக்கடுமையான முறையில் பாதித்துவந்த பொருளாதார பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எடுத்து வருவது தொடர்பான வாக்குறுதி நிறைவேற்றப்படாததாகவே இருந்தது. நாசகாரக் கும்பலான கொண்ட்ராஸ்ட்களிடமிருந்து மக்களையும் நாட்டையும் பாதுகாத்துக்கொள்வதற்காக கணிசமான அளவில் மூலவளங்களை ஒதுக்க வேண்டியிருந்ததே இதற்கான காரணமாகும். 1980 களின் தசாப்தம் முடிவுக்கு வந்தபொழுது, கட்டுக்கடங்காத பணவீக்கம், தட்டுப்பாடுகள், வேலையில்லாத்திண்டாட்டம் போன்ற பொருளாதாரப் பிரச்சினைகள் அங்கு ஒன்று குவிந்திருந்தன. ஐக்கிய அமெரிக்காவின் நிர்ப்பந்தங்கள் காரணமாக, சார்டினிஸ்டா அரசாங்கம் அதிக அளவிலான சர்வதேச பொருளாதார மற்றும் நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்தது. நிகாராகுவாவின் ஜனரஞ்சகமான தலைவரும், உயிர்த்தியாகியுமான பெட்ரோ ஜோகிட் கமரோவின் விதவையின் தலைமையிலான யூ. என். ஓ. கூட்டணி ஒரு சிறு தேர்தல் பெரும்பான்மை மூலம் 1989ல் சார்டினிஸ்டாக்களைத் தோற்கடித்த பொழுது இதற்கான முடிவு வந்தது.

ஆனால், நிகாராகுவாவின் பிரச்சினைகள் எந்த வகையிலும் தீர்க்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. யூ. என். ஓ. கூட்டணியின் வெற்றி ஓரளவுக்கு நிவாரணங்களை எடுத்து வந்துள்ளது என்பது உண்மைதான். (கொன்ரா போர் முடிவுற்றதனையடுத்துப் பற்றாக்குறைகள் நீங்கின). ஆனால், இது மேலும் பல சிக்கல்களுக்கு வழிகோலியுள்ளது. புதிய அரசாங்கம் எதிர்பார்க்கப்பட்ட விதத்தில், அதிகளவிலான அமெரிக்க உதவிகளைப் பெற முடியவில்லை. இதன் விளைவாக, ஏற்கனவே வாக்களிக்கப்பட்டிருந்த பொருளாதார அற்புதம் சாத்தியமாகவில்லை. கமரோவின் அரசாங்கம் மிகவும் சிக்கலான சமப்படுத்தும் பணியொன்றில் தன்னை ஈடுபத்திக் கொண்டுள்ளது. ஒருபுறம், அடிமட்டத்தில் நின்று ஆட்சி நடத்தும் கொள்கையொன்றைப் பின்பற்றிவரும் சார்டினிஸ்டாக்களையும், மறுபுறம், அரசாங்கம் இடதுசாரிகளுடன் மென்மையான முறையில் நடந்துகொண்டு வருகின்றதென்ற விமர்சனத்தை கடும் நிர்ப்பந்தங்களுடன் முன்வைத்து வரும் முன்னைய கொன்ராஸ் சக்திகளையும் அது சமாளிக்க வேண்டியுள்ளது. இதேவேளையில், சாதாரண பொது மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் இடையறாது தீவிரமடைந்து வருகின்றன.

நிகார்ராகுவாவின் நீண்ட நாள் நண்பராகவும் அந்நாட்டு விவகாரங்கள் தொடர்பான மாணவராகவும் இருந்துவரும் பிராங்கோயிஸ் ஹௌடார்ட் இந்த இதழில் எழுதியுள்ள சிறப்புக் கட்டுரை, அந்நாட்டின் இன்றைய நிலவரம் குறித்த ஒரு விரிவான பகுப்பாய்வினைத் தருகிறது. குறிப்பாக, கமரோ அரசாங்கத்தினால் தற்பொழுது அமுல் செய்யப்பட்டுவரும் புதிய தாராளவாத பொருளாதார கொள்கைகள், பொருளாதாரத்தின் மீதும் மக்கள்மீதும் எத்தகைய மோசமான விளைவுகளை எடுத்து வருகின்றன என்பதனை அது எடுத்துக் காட்டுகிறது. ஒரு புரட்சியை நடத்தி, அதன் பின்னர், தனது பயணத்தை புதிய லிபரல்வாத கொள்கையின் வழியில் மேற்கொண்டுவரும் ஒரு நாடான நிகாராகுவா, புதிய லிபரல்வாதிகளுக்கு முக்கியத்துவமிகுந்த ஒரு களமாக இருந்து வருகின்றது என்பதனை ஹௌடர்ட் சுட்டிக்காட்டுகிறார். மக்கள் 1990ல் சார்டினிஸ்டாஸ்களுக்கு தண்டனை அளித்தார்கள் என்பதனை ஏற்றுக்கொள்ளும் அவர், சமூகத்தில் மிக ஆழமான முறையில் வேரூன்றிச் சென்ற புரட்சிகர நிகழ்வுப்போக்கு இன்னமும் முற்றாக ஒழிக்கப்படவில்லையென்பதனையும் ஆணித்தாமாக எடுத்துக் காட்டுகிறார். நிகாராகுவாவின் நிகழ்வுகள், மூன்றாவது வழிமுறையொன்றுக்கான தேடலை மேற்கொண்டிருக்கும் அனைவருக்கும் தொடர்ந்தும் மிகுந்த அக்கறைக்குரியவையாக இருந்துவரும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இந்த இதழில் தரப்பட்டுள்ள சமன் கலேகமவின் கட்டுரை, ஐரோப்பிய சமூகத்தின் பொருளாதார ஒருங்கிணைப்பு வளர்முக உலகுடனான – குறிப்பாக இலங்கையுடனான – வர்த்தகத்தை எவ்விதம் பாதிக்கமுடியுமென்ற மிக முக்கியமான, இன்றைய காலத்துக்குரிய ஒரு பிரச்சினையை தொட்டுக் காட்டுகிறது. மேலும், இத்தகைய ஒரு சூழ்நிலையில், இலங்கைக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கும் பல்வேறு கொள்கைத் தெரிவுகளையும் அவர் முன்வைக்கிறார்.

நீர்ப்பிரிநிலங்களின் முகாமை தொடர்பான நிஹால் பெர்னான்டோவின் கட்டுரை, எமது அபிவிருத்தி நிகழ்வுப்போக்கின் மிக முக்கியமான ஒரு பிரிவினை பரிசீலனை செய்வதாக உள்ளது. நீர்ப்பிரி நிலங்கள் சீரழிந்து வருவதனையடுத்து, நில மற்றும் நீர் மூலளங்கள் எதிர்நோக்கிவரும் பாரிய அச்சுறுத்தல்களை அவர் இங்கு எடுத்துக்காட்டுகிறார். சில தீர்வுகளையும் முன்வைக்கிறார்.

ஆசியாவின் பொருளாதார அபிவிருத்தியில் ஜப்பானின் நேரடி வெளிநாட்டு முதலீடு வகித்துவரும் பங்கினை பியதாஸ ரத்நாயக்க எழுதியுள்ள கட்டுரை ஆராய்கிறது. இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் பொருளாதாரங்களில் ஜப்பானின் நேரடி முதலீடு எடுத்துவந்துள்ள தாக்கங்களை அவர் குறிப்பாக பகுப்பாய்வு செய்கிறார்.

# பொருளியல் நோக்கு

இதழ் 18 மலர் 10 ஜனவரி 1993

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு 2,
இலங்கை.

உள்ளே

கலா மகேஸ்வரன் 14 கொள்கை ஆக்கமும் எதிர்காலமும்

பட்ரிக் மெண்டிஸ் 16 வறுமை ஒழிப்பு: இலங்கையின் சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்பாடும் தாக்கங்களும்

சுமித் பத்திரன 31 புவியியல் தகவல் தொகுப்பு தரவு அடித்தளங்கள்

விசேஷ அறிக்கை

## நிகராகுவா இன்று

பிராங்கோயிஸ் ஹௌடார்ட் 2 500 ஆவது ஆண்டு விடியலில் நிக்கராகுவா: புதிய தாராளவாதத்தை நோக்கிய ஒரு பயணம்

சமன் கலேகம 7 ஐரோப்பிய சமூகமும் வளர்முக நாடுகளுடனான வர்த்தகத்தில் அதன் தாக்கமும்: இலங்கை தொடர்பான ஒரு நோக்கு

பியதாஸ ரத்னாயக 21 ஆசியாவில் ஜப்பானின் நேரடி முதலீடு: இலங்கை மற்றும் தாய்லாந்து குறித்த ஓர் ஆய்வு

வாசகர் கவனத்திற்கு

சென்ற இதழில் இடம்பெற்ற ரிஸால் புயென்டியா எழுதிய "பிலிப்பைன்சில் நிலவி வரும் சித்தாந்தங்கள்" என்ற கட்டுரையின் இரண்டாம் பகுதி அடுத்த இதழில் வெளியாகும்.

*அடுத்த இதழில்*

- இலங்கையில் பணவீக்கமும் ஏற்றுமதித்துறையின் செயற்பாட்டுடனான அதன் தொடர்பும்
- இலங்கையில் குடித்தொகை வளர்ச்சி: எதிர்கால போக்குகள் குறித்த ஒரு பகுப்பாய்வு
- வறுமைக்கு எதிரான கடப்பாடு

பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளிவிவரத்தரவு-களையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.

பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் முழு ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதி-பலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்-களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.

# 500 ஆவது ஆண்டின் விடியலில் நிக்காராகுவா: புதிய — தாராள வாதத்தை நோக்கி கடினமாக ஆனால் உறுதியாக முன்னெடுக்கப்படும் ஒரு பயணம்

பிராங்கோயிஸ் ஹௌடார்ட்

ஜனாதிபதி வயலெட்டா பாரியோஸ் டி சமோர்ரா தனது நத்தார் செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார்: ''பொருளாதாரத்துறையில் இவ்வருடம் நாம் பெரும் அடியை முன்னெடுத்து வைத்துள்ளோம். அதியுயர் பணவீக்கத்தை நிக்காராகுவா கட்டுப்படுத்திய விந்தையைப்பற்றி ஒருசில சர்வதேச வெளியீடுகள் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளன. எமது பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளது.... முழு உலகினதும் கண்கள் நிக்கராகுவாவை நோக்கியுள்ளன. அமெரிக்காவில், புதிய ஜனநாயகத்துக்கான பதாகையை ஏந்திச் செல்பவர்களாக நாம் உள்ளோம்.''

வறுமையை ஒழித்தல், மக்களின் சேமநலனை உயர்த்துதல் மற்றும் 1992ல் உற்பத்திப் பெருக்கம் என வாக்குறுதியளித்து ஒருசில பக்கங்களில் சுயதம்பட்டம் அடித்துக்கொண்டுள்ள இந்த அறிக்கையை பொருள் கொள்வது எப்படி? நிகாராகுவா குறித்த முடிவு ஒன்றினை எடுப்பதற்கும், அந்நாட்டின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் உலகளாவிய சூழ்நிலையில் அதனைப் பொருத்திப் பார்ப்பதற்கும் என இந்த நிலைமையின் அனைத்துக் கூறுகளையும் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது.

குடித்தொகையைப் பொறுத்தவரையில் 40 இலட்சம் மக்கள் மட்டுமே கொண்டதாக இருக்கும் நிகாராகுவா ஒரு நாடு என்ற வகையில் நோக்கும்பொழுது பொருட்படுத்தக்கூடியதொன்றாக இருக்கவில்லை. ஆனால், மேலைய நாடுகளின் நடத்தையை கவனத்தில் எடுக்கும் பொழுது, அது பாரிய அரசியல் முக்கியத்துவத்தை கொண்டுள்ளன என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. உண்மையில் கியுபாவுடன் சோசலிஸ மாற்றுப் பாதையை மேற்கொண்ட ஒரே ஒரு இலத்தீன் அமெரிக்க நாடு நிகாராகுவாவாகும். 1990ன் முழுமையான தோல்வி இம்முயற்சிக்கு முடிவுகட்டியதுடன், அது சந்தைப் பொருளாதார முகாமுடன் நாட்டை ஒருங்கிணைப்பு செய்தது.

## 1. அரசின் பொருளாதாரக் கொள்கை

ஒரு சில மகத்தான கோட்பாடுகள் கடந்த இரு வருடங்களாக நிக்கரகுவா அரசின் நடவடிக்கைகளை நெறிப்படுத்தியுள்ளன. முதலாவதாக, நாணயத்தை ஸ்திரப்படுத்தல் முதல் 12 மாத வேலையாக இருந்தது. வருடம் முழுவதும் தொடர்ச்சியான வாராந்த மதிப்பிறக்கம் செய்வதன்மூலம் இது பெறப்பட்டது. 1991 மார்ச்சில் 400% புதிய மதிப்பிறக்கத்துடன் நாணய மாற்றம் செய்யப்பட்டது. வருடத்தில் 50% வெளிநாட்டு நாணய சேமிப்பு மூலம் நாணயம் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது.

விலைகள் மற்றும் இறக்குமதிகள் என்பனவற்றின் மீதான தாராளமயம் இரண்டாவது கொள்கையாக இருந்தது. சாண்டினிஸ்டா காலத்திலிருந்து இருந்துவரும் கொடைகள் ரத்துச் செய்யப்பட்டன. இறக்குமதி மீதான ஒருசில வரிகள் பாரியளவில் குறைக்கப்பட்டன. இவ்வாறு பல நுகர்வுப் பொருட்களின் நுழைவுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

மூன்றாவதாக, கால்வாசிக்கு அதிகமான வரவுசெலவு மற்றும் அரச செலவின குறைப்பு, தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்களை தனியார்மயப்படுத்தியமை என்பன குறிப்பிடத்தக்கவையாகும். இந்த நடவடிக்கைகள் வரி பற்றாக்குறையை பாரிய அளவில் குறைக்க வாய்ப்பளித்தது. இறுதியாக, வெளிநாட்டுக்கடன் தொடர்பாக மீள் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது 1080 கோடி டொலர்களாக அல்லது ஒருவருக்கு 2,700 டொலராக அதிகரித்துக் காணப்பட்டது. சோமோசா ஆட்சி 130 கோடி டொலர் கடனையும் வெற்றுத் திறைசேரியையும் விட்டுச் சென்றுள்ளது. சார்டினிஸ்டா ஆட்சியின் சமூகக் கொள்கை, யுத்தம் மற்றும் நாட்டின் புனரமைப்பு என்பன மேலும் சுமைகளாக்கின.

இதேவேளையில், நிக்கராகுவா அதன் ஆற்றலை மீளப்பெறுவதற்காக 36 கோடி அமெரிக்க டொலர்களை அமெரிக்காவுக்கிடையிலான அபிவிருத்தி வங்கிக்கும் உலக வங்கிக்கும் அளித்துள்ளது. ஒப்பீட்டளவில் 1991-92 க்கான கோப்பி ஏற்றுமதி 7 கோடி அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொடுக்க வேண்டும். 13.5 கோடி நிதியுதவியையும், 19.3 கோடி கடன்களையும் கொலம்பியா, ஸ்பெயின், மெச்சிக்கோ, வெனிசூலா போன்ற நாடுகள் வழங்கின. 1991 டிசம்பரில் பாரிஸ் கிளப் (15 செல்வந்த நாடுகள்) 83 கோடி டொலர் கடனை 29 கோடி டொலராக குறைந்ததுடன், ஏனைய பிற விடயங்களுக்காக இருதரப்பு பேச்சுவார்த்தை மேற்கொள்ள சுதந்திரமளித்தது. இவ்வாறு நிக்கரகுவா தென்னக நாடுகளுடன் மீள் பேச்சுவார்த்தை மேற்கொள்ளும் தன்மையை பெற்றது.

முன்னாள் சோஷலிஸ நாடுகளின் கடன் 425 கோடி டொலர்களாக இருப்பதுடன், அதில் 300 கோடி முன்னாள் சோவியத் யூனியனுடனானதாகும். இந்த பல்வேறுபட்ட பொருளாதார வழிமுறைகள் தெளிவாகவே, இன்றைய உலக பொருளாதாரத்தின் முக்கிமான கோட்பாடுகளின் பின்புலத்திலேயே இடம் பெற்று வருகின்றன. உதவி வழங்கும் நாடுகளின் நிபந்தனைகளின் மீது இவை பரந்த ரீதியில் தங்க வேண்டியுள்ளது. அமெரிக்க அரசின் வெளிநாட்டு ஒத்துழைப்பு அமைப்பான சர்வதேச அபிவிருத்திக்கான முகவரகம். அமெரிக்காவிலிருந்து உதவி பெற வேண்டுமாயின் தனியார்மயப்படுத்தலுக்கான இணக்கத்தை ஒப்பந்தம் மூலம் வேண்டியுள்ளது. இத்துறையில் கொள்கைகள் சரியாக அமுல் செய்யப்படவில்லை

என அவர்கள் கருதியமையால் கொடுப்பனவுகளை தாமதப்படுத்தினர். அரச செலவினங்களைக் குறைத்தல் மற்றும் கடும் சிக்கன நடவடிக்கைகள் என்பவற்றின் ஊடாக சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் நிபந்தனைகளை விதித்தன. பாரிஸ் கிளப் புதிய ஜனநாயகத்திற்கான பிரயோகத்துடன் கடன் வழிமுறைகளை ஒப்பீடு செய்தது. அமெரிக்க கடன் கழிப்பிற்கு, தமது துறைமுகங்களுக்கு கண்ணிவெடி வைத்தல், யுத்தத்தை மேற்கொள்ள கொன்ட்ராஸ்சிற்கு நிதியுதவி அளித்தல் என்பவற்றிற்கு எதிராக நிக்கராகுவா அரசு ஹேக்கிலுள்ள சர்வதேச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கை வாபஸ்பெற கோரும்.

வேறுவார்த்தைகளில் கூறுவதெனில் தேசிய இறைமையை மீளப்பெறுவதற்காக சார்டினிஸ்டா அரசு மேற்கொண்ட முயற்சி மற்றும் அதேபோல் செல்வத்தை சமூக விநியோகம் செய்ய மேற்கொண்ட முயற்சி என்பன உலக சந்தைப் பொருளாதாரத்துடன் மீள் ஒருங்கிணைப்பு செய்வதற்காக விலையாக கொடுக்கப்பட்டுள்ளது.

## 2. குறுகிய கால பொருளாதார விளைவுகள்

பல்வேறு துறைகளின் நலனுக்காக தனியார்மயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சோமோசாக்கள் உட்பட முன்னாள் உரிமையாளர்கள், தேசியமயமாக்கப்பட்ட தமது சொத்துக்களை மீண்டும் கோருகின்றனர். பெரும்பாலும் அவர்களது நிறுவனங்களின் பெறுமதி, சார்டினிஸ்டா அரசின் முதலீடு மற்றும் தொழிலாளர்களின் முயற்சி என்பவற்றினால் உயர்ந்துள்ளது. அத்துடன் புதிய அரசியல் சக்தியுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ, பிணைப்புக்களைக் கொண்டுள்ள புதிய முதலீட்டாளர்கள், கடுமையான விதிமுறைகளின் கீழ் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் பொறுப்பேற்றுள்ளனர். இறுதியாக, இலத்தீன் அமெரிக்கா, ஐக்கிய அமெரிக்கா, ஆசியா போன்ற பிராந்தியங்களைச் சார்ந்த விவசாய ஏற்றுமதி அல்லது கைத்தொழில் துறையைச் சார்ந்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உள்ளனர். சுதந்திர வர்த்தக வலயம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், ஆசிய மூலதனம், அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதியை உற்பத்தி செய்யும். அந்நாடுகளுக்கான ஏற்றுமதிக் கோட்டா ஏற்கனவே முடிவடைந்துள்ளது.

பெருமளவு பொது நிதியின் மூலம் ஐரோப்பாவில் நடந்த தொழிற்றுறை மீள்மாற்றத்திற்கு ஆதரவளிக்கப்பட்டது. பொது சர்வதேச அமைப்புகளினால் தனியார்மய கொள்கைக்கும் நிதிவழங்கப்பட்டது. சுமார் நூறு நிறுவனங்களை தனியார்மயப்படுத்தும் திட்டத்திற்கு அமெரிக்க அபிவிருத்தி வங்கி 380 கோடி டொலர் நிதியுதவி அளித்துள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய சம்பவமொன்று யாதெனில் 30 வருட சலுகையின்கீழ், புதுப்பிக்கக்கூடிய வகையில், நிக்கரகுவாவின் காடுகளைச் சுரண்டக் கூடிய ஒப்பந்தம் ஒன்றினை தாய்வானைச் சார்ந்த ஜீ கூ. போயோ என்ற இரு கம்பனிகள் நிக்கரகுவா அரசுடன் கைச்சாத்திட்டுள்ளதாகும். அத்திலாந்திக் கரையில் 470,000 ஹெக்டயர் விஸ்தீரணத்தில் 218,000 பாரம்பரிய மரங்களை இக்காடுகள் கொண்டுள்ளது. இது நிலப்பரப்பின் 25% ஐ உள்ளடக்கியுள்ளது. ஆரம்ப முதலீடு 2.5 கோடி டொலர்களாகும். இரண்டாம் வருடத்தில் ஏற்றுமதி பெறுமானம் 4.5 கோடியை அண்மிக்கும்.

இதற்கெதிரான பல எதிர்விளைவுகள் காட்டப்பட்டுள்ளன. பாதுகாப்பு அபிவிருத்தி மன்றம் (பன்கொட்) அமைப்பு 1991 ஆகஸ்ட் 15 ந்திகதி, சூழல் அழிவினைத் தவிர்ப்பதற்காக உருவாக்கப்பட்டது. 1960 ல் நிலப்பரப்பின் 60% காடுகளால் சூழப்பட்டிருந்தது. 1990ல் 23 சதவீதமாக இது காணப்பட்டது. மத்திய அமெரிக்கா உலகின் ஆகக்கூடிய காடழிப்பு வீதத்தைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் தீ குறிப்பிட்டளவு ஹெக்டயர்களை அழிக்கின்றது. 1991 ல் 500,000 ஹெக்டயர்களுக்கதிகமான காடுகள் அழிக்கப்பட்டன. இவ்வாறான காட்டுச் சுரண்டல் அத்திலாந்திக் கரையின் சூழல் அமைப்பினை மாற்றிவிடும் என பன்கொட் நிறுவனம் கூறுகின்றது.

இதனை செயற்படுத்துவோர் அப்பிராந்தியத்தில் இதனால் 4,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமெனக் கூறுகின்றனர். செயலூக்கமிக்க மக்கட் தொகையில் வேலையில்லாப் பிரச்சினை 85% ஐ அண்மித்துள்ளது. 150,000 ஹெக்டயார்களில் மீள் காடுவளர்ப்பு மற்றும் தீ விபத்துக்கெதிரான திட்டத்தை மேற்கொள்வதாக அவர்கள் உறுதியளித்துள்ளனர்; ஆயினும் உள்ளூர் அதிகாரிகள் சந்தேகத்துடன் உள்ளனர். வட அத்திலாந்திக் பிராந்திய சபை இவ் ஒப்பந்தம் சுயாட்சி சட்டத்துக்கு முரணானது எனக் கருதுகின்றது. மத்திய அரசினால் தம்மிடம் ஆலோசனை கேட்கப்படவில்லை என இச்சபை கூறுகிறது.

இறக்குமதிக்கு ஆதரவான கொள்கை பல்வேறு பொருட்களும் வர்த்தக காட்சிகளும் பெருகுவதற்கு வாய்ப்பளித்துள்ளது. 1991 நத்தாரின்போது பலவித உற்பத்திப் பொருட்கள் கடைகளிலும் சந்தைகளிலும் அபரிமிதமாக காணப்பட்டன. வீட்டு மின்சாரப் பொருட்கள், கட்புல-செவிப்புல சாதனங்கள், கம்ப்யூட்டர் என்பன அனைவரையும் கவர்ந்துள்ளன. வீட்டு மின்சார நுகர்வு இப்பொழுது விரிவடைந்துள்ளதுடன், தற்போதைய மின்சார வலு உற்பத்தி, இதற்கு ஈடுசெய்ய முடியாதுள்ளது. பல மின்சார உற்பத்தி நிலையங்கள் இப்பொழுது கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஒருவர் மின்சாரத்தை கோஸ்டாரிக்காவிலிருந்து இறக்குமதி செய்ய விரும்புகிறார். 1990ல் காணப்பட்ட வாகனங்களைப்போல் தற்போது இருமடங்கு வாகனங்கள் காணப்படுகின்றன. இதனால் ஒருசில வேளைகளில் மனாகுவாவில் போக்குவரத்து நெரிசல் எற்படுகிறது. ஒரு வருடத்தில் பாதை விபத்துகளினால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 57% மாக அதிகரித்துள்ளது. வெளிநாட்டு உணவுப் பொருட்கள் எல்லா இடங்களிலும் விற்கப்படுகின்றன.

1992 ல் 45 நிறுவனங்கள் அவற்றின் பழைய உரிமையாளர்களுக்கே அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் நகர சேவைகள் மற்றும் சுற்றுலாத் துறையைச் சார்ந்த 30 நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தப்படவுள்ளன. பொதுச் சேவையைச் சார்ந்த உத்தியோகத்தர்கள் 10% மாக குறைக்கப்படுவர்.

## 3. நீண்டகால பொருளாதாரப் பிரச்சினைகள்

பணவீக்கத்தின் உண்மையான பிரச்சினை நீண்டகாலத்திலேயே உள்ளது. உண்மையில் நிக்கராக்குவா, மத்திய அமெரிக்காவின் பெரும் செலவுமிக்க நாடாக உருவாகுமாயின், அது கொர்டோபாவை (நிக்கராகுவா நாணயம்) மேலதிகமாக மதிப்பீடு செய்கின்றமையினாலேயாகும். ஆனால், அதனோடிணைந்துவரும் வழிமுறைகளைக்கொண்டிராக மதிப்பிறக்கம் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்க்காது.

எல்லாவற்றினையும்விட, உண்மையில் உற்பத்தி தொடர்பான பிரச்சினை

கேள்விக்குரியதாகவுள்ளது. நாடு தற்போது வெளிநாட்டு உதவியைக் கொண்டுள்ளதுடன், ஒப்பீட்டளவில், வர்த்தக நடவடிக்கைகளில் விருத்தி ஏற்பட்டுள்ளது. எல்லாத்துறைகளிலும் உற்பத்தி குறைந்துள்ளது. கடந்த இரண்டு சுழல்முறைகளில் கோப்பி உற்பத்தி 36% குறைக்கப்பட்டுள்ளதுடன் பெறுமதி 41% மாக குறைந்துள்ளது. பருத்தி உற்பத்தி பெரும்பாலும் மாறாது இருக்கின்றது. வாழைப்பழ விற்பனை மட்டும் இரு மடங்காக உயர்ந்துள்ளது.

ஒவ்வொரு துறைக்கேற்ப காரணிகள் பலவாகவும் பல்விதமாகவும் இருக்கின்றன. ஆயினும், குறைவான கடன் ஒரு பக்கமும் மறுபுறம் உள்ளூர் சந்தைகளை இறக்குமதி நுகர்வுப் பொருட்களுக்குத் திறந்துவிடுவதும் முக்கிய காரணிகளாக இருக்கின்றன. சுமார் 300 நிறுவனங்கள் தமது கதவுகளை மூடியுள்ளன. ஆடை மற்றும் உலோகத் தொழிற்துறைகளே பெரும் தாக்கத்திற்குள்ளாகியுள்ளன. இதன் விளைவு யாதெனில், வர்த்தகப் பற்றாக்குறை 29.5 கோடி அமெரிக்க டொலரிலிருந்து 40.2 கோடி டொலர்களாக 1990 க்கும் 1991 க்கும் இடைப்பட்ட காலத்தில் அதிகரித்துள்ளது. உற்பத்தியை உயிர்ப்பிப்பதற்கு முதலீடுகள் அத்தியாவசியமாகும். ஒரு பிரச்சினை யாதெனில், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்கும் அதனோடு இணைந்த நிபந்தனைகளுமாகும்.

## சமூக விளைவுகள்

''சரிக்கட்டலி''ன் முதலாவது சமூக விளைவு வேலையின்மையின் பெருக்கமாகும். இது அனைத்து பொருளாதார துறைகளுக்கும் பரவியுள்ளது. 1991 ல் வேதனம் பெறும் தொழிலாளர் மத்தியில் 10% மாக அதிகரித்தது. சொலூக்க மக்கட் தொகையினரில் இது 46% ஐ எட்டியது. இது 20% கீழுழைப்பினை கணிப்பிடாத தொகையாகும். பொதுச் சேவைகள் துறையே கடுமையான தாக்கத்திற்குள்ளாகியுள்ளது. இது 30.7% மாகக் குறைக்கப்பட்டுள்ளது. தொழிற்றுறை 12% மாகவும், விவசாயம் 11% மாகவும் வர்த்தகம் 7% மாகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. வருட இறுதியில் மனாகுவாவில் மட்டும் 115,672 பேர் வேலையற்றோராகக் காணப்பட்டனர்.

முழு நாட்டிலும் 747,000 பேர் வேலையற்றோராக—அதாவது 53.5% — காணப்படுவதாக ஓர் கணிப்பு. இவ் எண்ணிக்கை 1992ல் சுமார் ஒரு மில்லியனாக உயரும். ஒவ்வொரு வருடமும் 40,000 இளைஞர்கள் வேலைவாய்ப்பு சந்தையை வந்தடைகின்றனர். தொழிலாளர்களின் வருமானமும் தொடர்ச்சியாக குறைந்து செல்கின்றது. 1992 மார்ச் மதிப்பிறக்கத்தின்போது 400% ஐ எட்டியது. வேதனம் 200% மாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. 1991 ஜனவரியில் சராசரி வேதனம் 165 அமெரிக்க டொலராகவும் டிசம்பரில் 20.2 ஆகவும் இருந்தது. விவசாயத் துறையில் 35 அமெரிக்க டொலராகும். ஒரு சராசரி குடும்பத்தின் வாழ்க்கைக்கு தேவையான அடிப்படை பொருட்களை பெறுவதில் 1991 ஜனவரி வேதனம் 83.3% த்தையே பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளதுடன், வருட இறுதியில் 73.5% ஐ பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளது. விவசாயத் தொழிலாளரைப் பொறுத்த மட்டில் அது 23.6% த்தையே பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளது. மக்கட் தொகையின் 70% தத்தினர் தமது அடிப்படைத்தேவைகளை பெறமுடியாதுள்ளதுடன், 20% தத்தினர் முழுமையான துன்ப நிலையில் உள்ளனர் என இதே ஆதாரங்கள் கூறுகின்றன.

சுகாதாரத்துறையில் குறிகாட்டிகள் பெருமளவுக்கு திருப்தியற்ற நிலையிலேயே உள்ளன. 1991 ல் மருத்துவ ஆலோசனைகள் 26% மாக குறைந்து சென்றுள்ளது. வைத்தியசாலையில் அனுமதித்தல் 13% மாக குறைந்துள்ளது. குழந்தைகளுக்கான ஆலோசனைகள் 25.6% மாகக் குறைந்துள்ளது. பிரசவத்திற்கு முன்னைய ஆலோசனைகள் 10.3% மாகவுள்ளது. சுகாதார ஊழியர் சங்கத்தின் செயலாளர் டாக்டர் பொர்ராவின் தகவலின்படி, 1991 ன் சிசு மரணம் முன்னைய வருடத்தைவிட 2,000 அதிகமாக இருந்தது. இது 'சரிக்கட்டல்' கொள்கையின் பலனாகும். சுகாதார வரவுசெலவு 30 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. 1990 ல் சிசு மரணம் ஆயிரம் பிறப்பிற்கு 71.8 வீதத்தை அடைந்துள்ளது.

வீட்டுப் பிரச்சினை ஓரளவு நல்ல நிலையில் உள்ளது. 1985 ல் வீட்டுப் பற்றாக்குறை 350,000 அலகுகளாகக் கருதப்பட்டது. இன்று அரசு 400,000 எனக் கூறுகிறது. நிக்கராகுவா எப்போதும் கூடிய குடிசன வளர்ச்சியினைக் கொண்டுள்ளது. 1980 — 85 க்கும் இடையிலான சராசரி வளர்ச்சி 3.3% மாகும். 1990-95 க்கு இடையிலான வளர்ச்சி 3.2 ஆக இருக்குமெனக் கருதப்படுகின்றது. குடிசன வளர்ச்சியினைக் கருத்திற் கொள்ளாது, இன்றைய வீதத்தின்படி பற்றாக்குறையை நீக்க 33 வருடங்கள் செல்லும். தற்போதைய வீட்டு நிர்மாணத்திட்டத்தின்படி 12,000 அலகுகளே கட்டப்படவுள்ளதுடன் அவற்றை மாதாந்தம் 40 டொலர் வாடகைக்கே விடமுடியும். பெரும்பான்மையான வறியவர்களுக்கு இதனை கொடுக்க முடியாது.

கல்வியைப் பொறுத்தமட்டில் குறைப்பு மிக அதிகம். எழுத்தறிவூட்டும் திட்டம் கைவிடப்பட்டது அல்லது ''தனியார்மய'' மாக்கப்பட்டது. எழுத்தறிவு விகிதம் 1982 ல் 12% மாக குறைந்திருந்ததுடன் 1991 ல் அது 25% மாக உயர்ந்துள்ளது. சுமார் பத்து லட்சம் மக்கள் இதிலடங்குகின்றனர். பாடசாலைக்குச் செல்லாத சிறார்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. 1992 முதல் பெற்றோர்கள் மாதமொருமுறை ஆரம்ப பிரிவு கல்வி கட்டணமாக 5 கொரடோபாக்களையும் (1 டொலர்) இடைநிலைக் கல்விக்கு 10 (2 அ. டொலர்) கொரடோபாக்களையும் கொடுக்க வேண்டும். இன்று 34% பள்ளி செல்லும் மாணவர்கள் தமது கல்வியைத் தொடரமுடியாதுள்ளனர். சர்வகலாசாலைக்கான ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது.

சுருங்கக்கூறின், மனாகுவாவின் அதிமேற்றிராணியார் கார்டினல் ஒபன்டோ ப்ராவோ, பணக்காரர்கள் பெரும் பணக்காரர்களாகவும், வறியவர் மிக வறியவர்களாகவும் மாறும் பொருளாதார அமைப்பு முறையினுள் நாடு மூழ்குகின்றது என ஏற்றுக்கொண்டுள்ளார். ஆச்சரியப்படத்தக்க வகையில், 1982 முதல் 1990 வரை சட்டவிரோத செயல்கள் 10,000 திற்கு 36 முதல் 75 ஆக அதிகரித்துள்ளன. 1990 ஏப்ரல் 15ந் திகதி புதிய அரசாங்கம் அதிகாரத்தைப் பெற்றபின் நிச்சயமாக இந்த எதிர்மறை குறிகாட்டிகள் இடம்பெறவில்லை. முன் நடந்த யுத்தம் மற்றும் செல்லரித்துச் செல்லும் பொருளாதாரம் ஏலவே இக்காரணிகளின்பால் செல்வாக்குச் செலுத்தின. சமாதானம், வெளிநாட்டு உதவி போன்ற மிகவும் சாதகமான சூழலில் ஆரம்பிக்கப்பட்ட இக்கொள்கைகளின் பாரதூரமான விடயம் யாதெனில், இவை சமூக நிலைமைகளை அபிவிருத்தி செய்வதை நோக்கியதாக இருக்கவில்லை என்பதாகும்; மாறாக, சமூகத்தின் மிகவும் செல்வாக்குமிக்க பகுதிகளுக்கே சாதகமானதாக இருந்தது.

யுத்தத்தைப்பற்றி பேசும்போது அது, பல எதிர்விளையுகளை இன்றும் கொண்டுள்ளது என்பதை ஒருவர் ஞாபகப்படுத்

திக்கொள்ள வேண்டும். யுத்தத்தினால் பாதிப்புற்ற ஆயிரக்கணக்கானோருக்கு சரீர மற்றும் சமூக புனரமைப்பு தேவைப் படுகின்றது. அநாதைகளாக்கப்பட்டோர் ஆயிரக்கணக்கில் உள்ளனர். இராணுவ நடவடிக்கைகளின் எச்சங்கள் அப்படியே காணப்படுகின்றன. உதாரணத்திற்கு 130,000 கண்ணிவெடிகளை அழிக்க வேண்டியுள்ளது. வளைகுடாவில் காணப்படும் 600,000 வெடிபொருட் களை அகற்றுவதைவிட இக்கண்ணி வெடிகளை அகற்றுவது கடினம் என நிபுணர்கள் கூறுகின்றனர். உண்மையில் இவை நிக்கராகுவாவின் மலை மற்றும் மழைப் பிராந்தியங்களிலேயே காணப் படுகின்றன. அடுத்துவரும் மூன்று அல்லது நான்கு வருடங்களில் இவற்றிற் காக 40 இலட்சம் அமெரிக்க டொலர் களை செலவிட வேண்டியுள்ளது.

### 5. சிவில் சமூகத்தை மீளமைத்தல்

பின்தங்கிய மக்கள்மீது பேரழிவைக் கொண்ட பொருளாதார 'சரிக்கட்டல்' மட்டுமே பிரச்சினையல்ல; மாறாக, முழு சமூகமும் ஆழமான மாற்றத்திற்குள்ளா கின்றது. யுத்தம் மற்றும் பாரிய பொரு ளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் சார்டினிஸ்டா அரசு சமூக கொள்கையை ஊக்குவிப்பதிலும் தொழிலாளர்களை ஒன்று திரட்டுவதிலும் வெற்றி கண்டது. பொருளாதாரத்தையும்—குறிப்பாக உற்பத்தியையும்—அதிகரிக்கச் செய்வதற் கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், வளர்ச்சியை ஊக்குவிக்குமென தற்போதைய அரசு அறிவித்துள்ளது. நிதி அமைச்சர் தமது தொலைக்காட்சி செய்தியில், வளமான நாட்களை கொண்டுவரவுள்ள அரசின் கடுமையான கொள்கையை வரவேற்றமைக்காக நிக்கர குவா மக்களுக்கு நன்றி தெரிவித்துள் ளனர். ஆனால், இக்கடுமையான கொள்கையின் விலையை யார் கொடுப்பது என்பதனைப்பற்றி அவர் ஒன்றும் குறிப்பிடவில்லை.

கல்வியின் உள்ளடக்கம் மேலிருந்து கீழ்வரை மாற்றப்பட்டது. 1991 கற்கை ஆண்டுக்கான புதிய கைநூல் வழங்கப் பட்டுள்ளது. இவற்றிற்கு அமெரிக்கா வின் ச.அ.மு. நிதியுதவியளித்ததுடன் ''புதிய'' சிந்தனையை இது உள்ளடக்க மாகக் கொண்டுள்ளது. சார்டினிஸ்டா ஆட்சியின்போது பின்லாந்து உதவியுடன் காலத்துக்காலம் தயாரிக்கப்பட்ட 70 இலட்சம் கைநூல்கள் அழிக்கப்பட்டன. தொழிலாளர் வர்க்கத்திற்கென ஆரம்பிக் கப்பட்ட பல்கலைக்கழகம் நிர்ப்பந்தங் களுக்குள்ளாக்கப்பட்டுள்ளதுடன் அது மீண்டும் உயர்குழாத்தினர்களுடையதாக மாறிவருகின்றது. அதிர்ஷ்டவசமாக பல்கலைக்கழகங்கள் அதனை எதிர்த் துள்ளன. ஆனால், தனியார் பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 1991 ல் சுமார் 7,000 இளைஞர்கள் கல்வியை இடவசதியின்மையினால் தமது உயர் கல்வியைத் தொடர முடியாதுள் ளனர்.

கார்டினல் ஒபேன்டோ வைப்ராவோ பாப்பாண்டவரின் அதிகாரத்துடன் கொண்ட புதிய கத்தோலிக்க பல்கலைக் கழகத்தை திறப்பதாக அறிவித்துள்ளார். மனாகுவாவிற்கு அண்மையிலுள்ள பழைய இராணுவ கட்டடங்களை இதற் கென அரசிடம் கார்டினல் கேட்டுள்ளார். கடற்துறைவியல், கட்டிட நிர்மாணம், விவசாய உற்பத்தி முகாமைத்துவம், விஞ்ஞானக் கல்வி, சமூகவியல், இறையியல் முதலிய துறைகளை இப் பல்கலைக்கழகம் கொண்டிருக்கும்-மத்திய அமெரிக்க பல்கலைக்கழகத்தை நிர்வகிக் கும் ஜேசுவிட்களே (கிறிஸ்தவ மதகுருகள்) இப்புரட்சிகரத் திட்டத்திற்கு ஆதரவளித்துள்ளதை மனதிலிருத்திக் கொள்ளவேண்டும்.

மக்கள் தொடர்புசாதன முறைகளும் மாற்றத்திற்கள்ளாகியுள்ளது. இரண்டு தொலைக்காட்சி சேவைகளில் ஒன்று தனியார்மயமாக்கப்பட்டுள்ளதுடன், அத்தியாவசியமான நிகழ்ச்சிகள் மியாமி யிலிருந்து அல்லது மெச்சிக்கோவிலுள்ள கியூபா அகதிகளினால் பரிவர்த்தனை செய்யப்படுகின்றது. வர்த்தக விளம்பரங் கள் அமெரிக்க பாணியில் அடுத்த சேவையை ஆக்கிரமித்துள்ளன. பல புதிய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள துடன், 1992 ஜனவரி முதல் அவை சேவையை ஆரம்பிக்கும். அமெரிக்க தொலைக்காட்சி சேவைகளை பெறுவ தற்கு புதிய பரிவர்த்தனை அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

சிவில் சமூகத்தில் கத்தோலிக்க திருச் சபை தனது இடத்தை படிப்படியாக மீண்டும் பெற்றுவருகின்றது. கல்வி அமைச்சரின் பெயரை கார்டினல் பிரேரித்துள்ளார். நாம் முன்னரே கத்தோலிக்க பல்கலைக்கழகத்தினைப் பற்றி கூறியுள்ளோம். மறைக்கல்வி நிலையமொன்று கட்டப்பட்டுவருவதுடன் அமெரிக்காவை ''கண்டுபிடித்து'' மற்றும் அமெரிக்காவை கிறிஸ்தவமயமாக்கி. 500 வருடங்களாகும் நாளை கொண் டாடும் தினத்தில் கலந்துகொள்ளவுள்ள பாப்பாண்டவர் போல் இந்நிலை யத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளார். இதற்கான நிதியில் 90%ஐ சங்கிலிக்கோர்வையான விரைவு உணவகங்களை வைத்திருக்கும் அமெரிக்க வர்த்தகர் ஒருவர் அளித் துள்ளார்.

### தொழிலாளர்வர்க்க எதிர்ப்பு

முழுமையாக நோக்கின் பல்வேறு எதிர்ப்புகள் நடந்தேறியுள்ளன. 1990 ல் இரண்டு சந்தர்ப்பங்களில் இரண்டு பொது வேலைநிறுத்தங்கள் நடைபெற் றுள்ளன. சார்டினிஸ்டா முன்னணி தலையிட்டு மக்களை சமாதானப்படுத்தா விட்டால் ஒரு பொது வேலைநிறுத்தம் கிளர்ச்சியாக மாறும் அளவிற்கு மோச மடைந்தது. அரச நடவடிக்கைகள் பாதிக் கப்பட்டதுடன், நகர தொழிலாளர்கள் ஊடாக விவசாயிகள் முதல் மாணவர் கள் வரை அனைத்து சமூக துறைகளும் பாதிக்கப்பட்டன. 1991ல் பொதுத் துறைகளான சுகாதார மற்றும் கல்வித் துறையில் இருபெரும் வேலைநிறுத்தங் கள் நடந்தன. ஏனைய பல பிணக்குகள் தொழிற்றுறையில் குறிப்பாக சீனி சுத்தி கரிப்பு தொழிற்சாலைகளில் ஏற்பட்டன. ஒரு உயிர்ப்பலியும் ஏற்பட்டது. பழைய உரிமையாளருக்கு இத்துறைகளை மீள ஒப்படைத்தமையே இதற்கான காரண மாகும். 1991 ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலான கால இடைவெளிக்குள் 38 தொழில் பிணக்குகள் பதியப்பட் டுள்ளன.

அரசு, நாட்டின் பொருளாதார சக்தி களுக்கிடையில் ''கலந்துரையாடலை'' ஏற்படுத்தியுள்ளது. வேலைகொள்வோர், தொழிலாளர்கள் மற்றும் அரசு என்பன ஆறுமாதத்திற்கு ஒரு முறை சந்திக்க வேண்டுமென கொள்கைளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அரச நிறுவனங் களை தனியார்மயமாக்கும் நடவடிக்கை யின்போது வேலைவாய்ப்பு மற்றும் 25% கோட்டா பெற்றுக்கொடுக்கப்படும் என அரசு அளித்த வாக்குறுதிகள் நீண்ட துன்பமான விளைவுகளையே கொடுத் தன. ஒவ்வொரு நிறுவனமும் அல்லது தனியார்மயமாக்கப்பட்ட வரைறுக்கப் பட்ட கம்பனிகள் 25% மூலதனத்தை கொண்டிருப்பதுடன், தொழிலாளர்கள் அதன் உரிமையாளர்களாக இருக்க வேண்டும் எனும் தீர்வை தொழிற்சங்கங் கள் முன்வைத்தன. பங்குகள் நிறுவனத் தொழிலாளர்களைத்தவிர ஏனையோ ருக்கு வழங்கப்பட்டக்கூடாது என்பது பிரச்சினையிலுள்ளது.

இக்கலந்துரையாடல் பல்வேறு விதங் களில் விளக்கங்கொள்ளப்பட்டது. சிலர் இதனை தொழிலாளர்களின் வெற்றி

யாகக் கருதினர். வேறு சிலருக்கு, இது நிலவும் பொருளாதார முறைக்கு வழங்கப்பட்ட சலுகையாக தெரிந்தது. முன்னைய சூழ்நிலையில், பலவீனமான நிலையில் ஓர் தற்காப்பு பொறிமுறையை இது கொண்டுள்ளது என நாம் கூற முடியும். எவ்வாறாயினும், இது ஒருசில வேலைகளில் தொழிலாளர்களுக்கு கட்புலனாகாத அதிகாரத்தைக் கொடுக்கின்றது. எண்பத்தைந்து (85%) வீத சங்க அங்கத்தினர்களைக் கொண்ட நிக்கராகுவா தொழிலாளர் முன்னணியினால் உருவாக்கப்பட்ட தொழிற்சங்க மூல உபாயம்-குறிப்பாக முன்னாள் சார்டினிஸ்டா தொழிற்றுறை சங்கங்கள், மற்றும் கிராம அல்லது சேவைத் தொழிலாளர்களின் மூலஉபாயம்—தற்பாதுகாப்பானது. ஆகக்கூடிய வேலை வாய்ப்பை அளிப்பது அதன் மையக் கருத்தாகியது. ஆதிக்கமிக்க பொருளாதார அமைப்பு முறையின் முன் செயற்படுத்தல் மிகவும் கடினமான காரியமாகியது. எந்தவொரு சார்டினிஸ்டா தொழிற்சங்கமும் வேலை வழங்குநர்களின் நலன்களுடன் மிகநெருங்கி இருக்கவில்லை. அத்துடன் சார்டினிஸ்டா அரசியல் எதிரணி இதுவரை எந்தவொரு மாற்று திட்டத்தையும் உருவாக்க முடியாதுள்ளது.

உள்ளூர் அமைப்புகளை ஒன்றிணைக்கும் மிகெல் டி எஸ்கோடோவினால் வழிநடாத்தப்படும் கம்யூனிஸ்ட் இயக்கம் நகர மற்றும் கிராம சொத்துக்களை குறைக்கும் புதிய சட்டங்களை பாராளுமன்றம் கொண்டுவந்த சந்தர்ப்பத்தை கடும்நடவடிக்கைக்கான சந்தர்ப்பமென கருதியது. இச்சட்டங்கள் விவசாய சீர்திருத்தம் மற்றும் நகர சொத்துக்களை மீள்பகிர்வு செய்தலின் ஒரு பகுதியை கேள்விக்குரியதாக்கியது. இச்சட்டங்களுக்கெதிரான தொழிலாளர் வர்க்க அணிதிரளல் தோன்றியதுடன், இறுதியாக இவர்கள் ஜனாதிபதியின் வீட்டோ அதிகாரத்திற்கு எதிராகவும் கிளர்ந்தெழுந்தனர். இது அரசியற்றுறையில் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு கிடைத்த வெற்றியாகும்.

சுகாதாரம் மற்றும் கல்வித்துறைகளிலும் எதிர்ப்பு கடுமையானதாக உள்ளது. சிறப்பாக வேலைவாய்ப்புக் கோரிக்கைகளில் இது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உயர்கல்வியைப்பாது காத்துக்கொள்வதற்காக பல்கலைக்கழகங்கள் ஓர் பொது முன்னணியை அமைத்துக் கொண்டுள்ளதுடன் அரசிடமிருந்து ஒரு சில சலுகைகளையும் பெற்றுக் கொண்டுள்ளன. பொதுவாக நோக்குமிடத்து, தொழிலாளர் வர்க்க சக்திகள் தற்பாதுகாப்பு நிலையில் உள்ளன. அவற்றின் நடவடிக்கைகளுக்கான தன்மைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

## மேலாதிக்க வர்க்க உபகரணமாக அரசியல் மேல் கட்டுமானம்

நியதிரீதியில், புதிய தாராளவாத முறையின் தர்க்கவியல் அரசின் குறைந்த பங்கினை வேண்டுகிறது. தனியார்மயமும், நிதி நடவடிக்களும் உண்மையில் முதலாளித்துவத்தின் பல பகுதிகளுக்கு சார்பாக உள்ளது. கலாச்சார மேல்கட்டுமானத்தின் மாற்றம் ''புதிய ஜனநாயகத்''தின் மறு உற்பத்தியை உறுதிப்படுத்தும் பெறுமானங்களுக்கு ஆதரவான செல்நெறிகையுடன் ஒன்றிணைகிறது.

முதலாளித்துவத்தின் மீளமைப்பிற்கான மூலப்பொருள் அடிப்படைகள் துரிதகதியில் செய்யப்பட்டுள்ளது. ஒரு சிலர் விரைவாக செல்வந்தர்களாவதற்கு சட்டநிலைமைகள் அனுமதியளித்தது. சில அரசாங்க உறுப்பினர்கள் பாரிய அளவில் பலனடைந்தனர். ஏனையோர் ஊழலை நாடினர். வெளிநாட்டில் வைக்கப்பட்டுள்ள மூலதனம் நாட்டிற்கு திரும்ப, சூழ்நிலை இன்னும் போதியளவு மீள்உறுதி செய்யப்படவில்லை. உண்மையில் இவ்வர்க்க செழிப்பின் அடித்தளங்கள் குறைவான ஸ்திரதன்மையை கொண்டுள்ளது. ஏனெனில், உற்பத்தி மற்றும் பாரம்பரிய விவசாய-ஏற்றுமதி பொருளாதாரத்தின் மூலமான இலாபம் எதிர்பார்த்தவாறு இல்லை.

புதிய தாராளவாத திட்டத்திற்குள் தோன்றியுள்ள தீவிர போராட்டத்தினால் அரசியல் சூழ்நிலை இருளடைந்துள்ளது. விரைவான சார்டினிஸ்டா அகற்றலின் அடிப்படையில் யு.என்.ஓ. வைச் சார்ந்த ஒருசில அரசியல்வாதிகள் அமைப்பினை தீவிரமாக்கும் போராட்டத்தினை தொடுத்துள்ளனர். உபஜனாதிபதி வெஜிலியோ கொடோ, பாராளுமன்ற சபாநாயகர் அல்பிரடோ சீசர், மனாகுவா நகர முதல்வர் ஆர்நோல்டா அலிமன் என்போர் இதன் பிரதான தலைவர்களாவர். யு.என்.ஓ. வுடன் இணைந்துள்ள பாரம்பரிய கட்சிகளை ஒன்றிணைப்பதில் அவர்கள் வெற்றிகண்டுள்ளனர். அத்துடன், இவர்கள் மீண்டும் ஆயுதத்தை கையிலேந்தி சிறுபான்மைக் குழுவுடன் தொடர்பினை வைத்துக் கொண்டனர். அமெரிக்க தூதரகத்தினால் இவர்களுக்கு (அமைதியாக) ஆதரவளிக்கப்பட்டது.

1991 ஜூலையில் சார்டினிஸ்டா முன்னணி அதன் காங்கிரசை நடாத்தியது. பிராந்திய காங்கிரஸிற்கு முன்பதாக இது நடாத்தப்பட்டது. ''நடைமுறைவாதிகள்'' என்றும் ''புரட்சிகரபாதையில் நம்பிக்கை'' உள்ளோர் எனவும் இருவிதமாக இவர்கள் அழைக்கப்பட்டனர். இச்சார்டினிஸ்டா கூட்டத்தில் தொழிலாளர் வர்க்க இயக்கம் நன்கு கலந்து கொண்டது. தேசிய தலைமைத்துவம் மாற்றப்பட்டது; ஆயினும், தொழிலாளர் வர்க்கத்திற்கு சார்பில்லாத உலக நிலைமைகளின் கீழ் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான அடித்தளத்தை உறுதிப்படுத்தலுக்கும் மற்றும் உண்மையில் சமூகத்தை மாற்றும் தொடர்ச்சியான புரட்சிகரத் திட்டத்திற்கும் இடையில் சமப்படுத்தும் நிலையினை உருவாக்குவது கடினம். வித்தியாசமான நிலைமைகளைக் கொண்டுள்ள இரு ஓர்டேகா சகோதரர்களின் தெரிவுகள் இதனை வெளிப்படுத்தியுள்ளது. இராணுவத் தளபதியான ஹம்பேர்டோ நாட்டின் பொருளாதார மீட்சிக்காக நாட்டின் ஒழுங்குவிதியை மாதுகாக்கின்றார். அதேவேளை, டேனியல் தொழிலாளர் வர்க்கத்தின் குரலை உறுதிப்படுத்தியதுடன், அதன் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைகள் மற்றும் விழிப்புடனான சமூக போராட்டத்தின் தேவையையும் உறுதிப்படுத்துகின்றார்.

முழு தென்னக நாடுகளும் புதிய தாராளவாததன்மையை மேற்கொண்டு புதிய முதலாளித்துவ திரட்சியில் பங்கு கொள்கையில் நிக்கரகுவா தனித்துவமானது என ஒருவர் கூறலாம். சிலவழிகளில் பின்பற்றப்படும் கொள்கைகள் ஆர்ஜன்டீனா, பிரேசில், கோஸ்டா ரிக்கா, கௌதமாலா, பேரு அல்லது குறைந்தது பாகிஸ்தான், இந்தோனேசியா, இந்தியா, பிலிப்பைன்ஸ், மொரொக்கோ, கென்யா அல்லது ஐவரி கோஸ்ட் போன்ற நாடுகள் பின்பற்றும் கொள்கைக்கு ஒப்பானவை. ஆயினும், எது நிக்கராகுவாவை ஏனைய சமூகங்களிடமிருந்து சிறப்பித்துக் காட்டுகின்றதெனில், இந்நாடு ஓர் புரட்சியை கண்டுள்ளது என்பதாகும். யுத்தம் தோற்றுவிக்கசெய்த நெருக்கடிகள், பொருளாதாரத் தடை மற்றும் சில அரசியல் பிழைகள் காரணமாக பெரும்பான்மையான வாக்குகள் சார்டினிஸ்டாக்களை 1990 ல் தண்டித்தது உண்மை ஆயினும், புரட்சிகர செல்நெறிகை முழுமையாக சமூகத்தில் ஊடுருவியுள்ளது. சாதாரண கட்டளைகள் மூலம் இதனை அழிக்க முடியாது.

# ஐரோப்பிய சமூகமும் வளர்முக நாடுகளுடனான வர்த்தகத்தின் மீது அதன் தாக்கமும்: விசேஷமாக இலங்கை குறித்த ஒரு நோக்கு

சமன் கலேகம
(கொள்கை ஆய்வுகள் நிறுவனம், கொழும்பு)

*ஐரோப்பிய சமூகம், 1993ல் உலகின் மிகப்பெரிய சந்தையை (உலக வர்த்தகத்தில் சுமார் 40 சதவீதம்) உருவாக்கும். இந்தப் புதிய சந்தை உள்நாட்டு எல்லைகள் அற்றதாக இருப்பதுடன், பொருட்கள், சேவைகள், மூலதனம் மற்றும் ஊழியம் என்பன சுதந்திரமாக நகர்ந்து செல்லக் கூடிய தாகவும் இருக்கும். ஐரோப்பிய சமூகத்தில் அங்கத்துவம் பெறாத நாடுகள், இந்தப் புதிய நிலைமை குறித்து அச்சங்களைக் கொண்டுள்ளன. ஐரோப்பிய சமூகம், அதிகளவுக்கு பாதுகாப்புவாத கொள்கைகளைப் பின்பற்ற முடியும் என்றும், "கோட்டையொன்றால் சூழப்பட்ட ஐரோப்பா" உருவாக்கப்பட முடியும் என்றும் அவை கருதி வருகின்றன. இந்த ஆய்வுக் கட்டுரை, எழுச்சி கண்டுவரும் ஐரோப்பிய சந்தையையும், இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் மீதான அதன் தாக்கத்தையும் பரிசீலனை செய்கிறது.*

## 1. அறிமுகம்

ஐரோப்பிய ஒருங்கிணைப்பினை தீவிரப்படுத்துவதற்கான பிரதான ஊக்கி, ஐரோப்பா, ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் வெகுதூரம் பின்னால் இருந்து வருகின்றது என்ற கருத்திலிருந்தே தோன்றியது. மேலும், ஐரோப்பா, தொழில்நுட்ப அபிவிருத்தி, உயர்தொழில்நுட்ப உற்பத்திப் பொருட்கள் என்பவற்றில் உலகச் சந்தையில் வகித்துவரும் பங்கினைப் பொறுத்தவரையில் அது ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் வெகுதூரம் பின்தங்கியிருப்பதாகக் கருதப்பட்டது. குறிப்பாக, ஐரோப்பிய சந்தை துண்டுதுண்டாகச் சிதறுண்டு காணப்படும் நிலை, புதிய உற்பத்திப் பொருட்களையும், புதிய தொழில்நுட்பங்களையும் அபிவிருத்தி செய்வதற்கான முக்கியமான தடைக்கல்லாக இருந்து வருவதாக நோக்கப்படுகிறது. மேலும், ஐரோப்பா, சர்வதேச வர்த்தக உறவுகளில் — குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பா ஆகியவற்றை உள்ளடக்கிய முக்கோணத்தில் — மிகச்சக்தி வாய்ந்த செல்வாக்கு மிக்க பங்கொன்றினை வகித்து வர வேண்டுமென்பதும் ஐரோப்பிய தலைவர்களின் விருப்பமாக இருந்தது.

ஐரோப்பிய சமூக உள்ளக சந்தையின் உருவாக்கமானது, போட்டியிடும் திறனைப் பலப்படுத்துவதற்கும் பொருளாதார வளர்ச்சிகளைத் துரிதப்படுத்துவதற்கும், விரிவான ஒரு மட்டத்தில் தொழில்நுட்ப அபிவிருத்தியை மேம்படுத்துவதற்குமென வகுக்கப்பட்டுள்ள பாரிய வழங்கல் பக்கத்தைச் சேர்ந்த பொருளாதார நிகழ்ச்சித்திட்டமொன்றாக கருதப்படுகிறது. இந்த உள்ளகச் சந்தை பன்முகப்பட்ட உறுதியான அனுகூலங்களை எடுத்துவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அது ஐரோப்பிய சமூகத்தின் பொருளாதாரத்துக்கு (மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சுமார் 6 சதவிகிதத்தினை சேர்ப்பதன் மூலம்) ஒரு செழிப்பு நிலையை எடுத்துவரும். அத்துடன், இச்செழிப்பு நிலையின் பின் விளைவொன்றாக உலகளாவிய ரீதியில் பொருளாதார வளர்ச்சி ஊக்குவிக்கப்படும். அது பணவீக்கத்தை குறைத்து (நுகர் பொருள் விலைகள் 6 சதவிகிதம் குறைவாக இருக்கும்), புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி (18 இலட்சம் புதிய தொழில்கள்), மிக விரிவான அளவிலான மீளமைப்பு நிகழ்வுப்போக்கொன்றினை தூண்டிவிடுவதுடன், புதிய தொழில்நுட்பங்களின் அபிவிருத்தியையும் எடுத்துவரும்.

1993ல் 38 கோடி நுகர்வோரைக் கொண்ட ஒரு பாரிய வர்த்தகக் கூட்டு ஐரோப்பாவில் எழுச்சியடையும். இது ஐரோப்பிய பொருளாதாரப் பிரதேசம் என்று (European Economic Area) என்று அழைக்கப்படும். ஐரோப்பிய பொருளாதார அபிவிருத்தி நீரோட்டத்தில் கிழக்கு ஐரோப்பிய பொருளாதாரங்களும் படிப்படியாக ஒருங்கிணைந்து கொள்ளும் போக்கு 1992 க்கு பிற்பட்ட காலப்பிரிவில் இடம்பெற முடியும். இவற்றின் விளைவாக, அடுத்துவரும் சில வருடங்களில் ஐரோப்பிய சந்தையின் வியாபார நிலைமைகள் மிகவும் தீவிரமான முறையில் மாற்றமடையும். அத்தகைய மாற்றத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் சில காரணிகள்: உற்பத்தியில் காணப்படும் அளவுச் சிக்கனங்கள், உள்ளகச் சந்தையின் அளவு, வரிகள் மற்றும் சுங்கத் தீர்வைகள் என்பவற்றுக்கான பொது உடன்பாட்டு அமைப்பின் பேச்சுவார்த்தைகளின் விளைவுகள், கிழக்கு ஐரோப்பாவுடனான மிக நெருக்கமா ஒத்துழைப்பு. இத்தகைய அபிவிருத்திகள் ஐரோப்பாவுக்கு வெளியே இருக்கும்- குறிப்பாக வளர்முக நாடுகளைச் சேர்ந்த — பொருள் வழங்குவோர் மீது மிகக் கடுமையான பின்விளைவுகளை எடுத்து வரமுடியும்.

வளர்முக நாடுகளுடனான பொருளாதார உறவுகள் மீது ஐரோப்பிய சமூகத்தின் சந்தை எடுத்துவரக்கூடிய தாக்கங்களையும், எதிரொலிகளையும் மிகவும் நுணுக்கமாக பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. அவ்வாறு செய்தால் மட்டுமே இந்தப் பொருளாதாரங்கள், சர்வதேச பொருளாதார சூழ்நிலையில்

நிகழக்கூடிய மாற்றங்களுக்கு சாதகமான முறையில் எதிர்விளைவு காட்டி, அவற்றுக்கு ஏற்றவிதத்தில் தம்மைச் சீராக்கம் செய்துகொள்ளக்கூடிய ஆற்றலைப்பெற முடியும். ஐரோப்பிய சமூகம், இந்த விஷயம் தொடர்பாக ஏனைய நாடுகளில் பொதுவில் நிலவிவரும் அச்ச உணர்வுகளைப் போக்குவதற்கு முயன்றுள்ளது. ஐரோப்பிய சமூகம் தானே உலகளாவிய வர்த்தகத்தில் தங்கியிருப்பதனால், 'ஐரோப்பிய அரண்' என்ற கருத்தில் எவ்வித உண்மையும் இல்லை என்று எடுத்துக் கூறியுள்ளது. எனினும், வளர்முக நாடுகளுடனான ஐரோப்பிய சமூகத்தின் வர்த்தகம் தொடர்பாக எவ்விதமான உத்தியோக பூர்வமான கொள்கை ஆவணங்களும் காணப்படவில்லை. எவ்வாறிருப்பினும், மூன்றாவது மண்டல நாடுகளுடனான ஐரோப்பிய சமூகத்தின் வர்த்தக உறவுகள் தொடர்பான பரந்த அடிப்படையிலான கோட்பாடுகளையும் வழிகாட்டு நெறி முறைகளையும் பின்வரும் விதத்தில் சுட்டிக்காட்ட முடியும்:

அ. தனியொரு சந்தையை உருவாக்கிக் கொள்ளும் சாதனை, ஐரோப்பிய தொழில் முயற்சிகளுக்கும் அதே போல ஏனைய நாடுகளின் தொழில் முயற்சிகளுக்கும் பயனுள்ளதாக அமையும்.

ஆ. தாராளமயப்படுத்தப்பட்ட, தளைகள் அற்ற சர்வதேச வர்த்தகம் ஐரோப்பிய சமூகத்தைப் பொறுத்த வரையில் மிக முக்கியமான ஒரு தேவையாக இருந்து வருகின்றது. அதன் காரணமாக அது பாதுகாப்பு வாதத்தைப் பின்பற்றமாட்டாது.

இ. வர்த்தக கூட்டாளிகளுடனான அனைத்து இருதரப்பு, பல்தரப்பு கடப்பாடுகளையும் ஐரோப்பிய சமூகம் மதித்துப் பேணிவரும்.

ஈ. தனியொரு சந்தையின் உருவாக்கத்தினையடுத்து, தேசிய சட்டவாக்க வழிமுறைகளின் இடத்தில் ஐரோப்பியசமூகவழிமுறைகள் இருந்து வரும்.

உ. ஏனைய நாடுகளைச் சேர்ந்த வர்த்தகக் கூட்டாளிகள் தனியொரு சந்தை வழங்கும் பொருளாதார அனுகூலங்களிலிருந்து பயனைப் பெறுவார்கள். இந்த வகையில், ஏனைய நாடுகளுடனான உறவுகள் தொடர்பாக சமநிலையுடன் கூடிய பரஸ்பர அனுகூலங்களைக் கொண்ட ஒரு நிலையை எடுத்து வருவதற்கே ஐரோப்பிய சமூகம் விரும்புகின்றது.

சுமார் 38 கோடி நுகர்வோரைக் கொண்ட பொது நியமங்கள் மற்றும் விதிமுறைகள் என்பவற்றைக் கொண்டுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு சந்தை வர்த்தகக் கூட்டாளிகளுக்கு அதிகளவு வாய்ப்புக்களை அளிக்க முடியும் என்று கருதப்பட்டு வந்தபோதிலும், நடைமுறையில் இது இவ்விதமே இருந்துவிட மாட்டாது. ''எமது வர்த்தகக் கூட்டாளிகள் பாதுகாப்புவாதத்தை பின்பற்றாத வரையில், நாங்கள் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கமாட்டாது. எமது செல்வச்செழிப்பு, ஐரோப்பிய சமூகத்தின் பொருளாதாரத்தின் திறந்த தன்மையுடன் பிணைக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தக் திறந்த தன்மை ஒரு பலவீனமாக எடுத்துக்கொள்ளப்படக்கூடாது'' என ஒருமுறை ஐரோப்பிய சமூகத்தின் தலைவரான ஜக்குவஸ் டெலர்ஸ் குறிப்பிட்டிருந்தார். இந்தவகையில், வளர்முக நாடுகள் மீதான ஐரோப்பிய பொதுச் சந்தையின் தாக்கம் மிகத் தெளிவாக இருப்பது போலத் தோன்றவில்லை.

மூன்றாவது நாடுகளுடனான ஐரோப்பிய சமூகத்தின் வர்த்தகக் கொள்கை குறித்த உத்தியோகபூர்வ ஆவணமொன்று இல்லாத நிலையில், மூன்றாவது நாடுகள் தொடர்பாக ஏற்படக்கூடியதாக்கங்கள் குறித்து தெளிவான கூற்றுக்களை முன் வைக்க முடியாதுள்ளது. எவ்வாறிருப்பினும், ஐரோப்பாவின் ஒருங்கிணைப்பு ஐரோப்பிய சந்தையில் பொருட்களை விற்பனை செய்வது எளிதாக இருக்குமென பொருள்படமாட்டாது. அது ஏனையவற்றுடன் சேர்த்து தனியொரு தொகுதி நியமங்கள் மற்றும் தரக் கட்டுப்பாட்டு தேவைப்பாடு கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். பொதிப்படுத்துதல் மற்றும் லேபல்களை ஒட்டுதல் என்பன தொடர்பாக புதிய ஒழுங்குகள் அமுலுக்கு வரும். தடுப்பு முறைகளைக் கொண்ட சுகாதார வழிமுறைகளும் சுற்றுச்சூழல் தொடர்பான அக்கறைகளும் அதிகளவுக்குக் கவனத்தைப்பெறும். ஐரோப்பிய சமூகத்துடனான வர்த்தகக் கூட்டாளிகள் சந்தையில் தமது போட்டித் திறனை தக்கவைத்துக்கொள்வதற்காக நிலைமைகளுக்கு ஏற்றவிதத்தில் அனுசரித்துச் செல்லும் ஒரு போக்கினை பின்பற்ற வேண்டியிருக்கும் என்பதனையே இது காட்டுகின்றது.

ஐரோப்பிய பொருளாதார சமூகம் மூன்றாவது மண்டல நாடுகள் மீது ஏற்படுத்தக்கூடிய சரியான தாக்கம் குறித்து பொருளியலாளர்கள் நிச்சய மற்ற நிலையிலேயே இருந்து வருகின்றார்கள். சில பொருளியலாளர்கள், வளர்முக நாடுகளிலிருந்து ஐரோப்பிய சமூகத்துக்குள் வரும் இறக்குமதிகள் 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடையும் எனக் கூறிவருகிறார்கள். தனியொரு சந்தையின் நீண்டகால அனுகூலங்களின் விளைவாகவே இந்த வீழ்ச்சி ஏற்படுமென்று அவர்கள் கருதுகிறார்கள். மறுபுறத்தில், வேறுசில பொருளியலாளர்கள், ஐரோப்பிய சமூகத்தில் ஏற்படக்கூடிய உயர்வருமானங்களின் விளைவாக (வருமானங்கள் ஆகக் குறைந்தது 5 சதவீதத்திலாகினும் அதிகரிக்க முடியும் என்று கருதுமிடத்து) வளர்முக நாடுகளிலிருந்து ஐரோப்பிய சமூகத்துக்குள் வரும் இறக்குமதிகள் சமார் 15 சதவீதத்தினால் அதிகரிக்க முடியுமென்று வாதிட்டு வருகின்றனர். இந்த வகையில் நோக்கும் பொழுது, வளர்முக நாடுகள், ஐரோப்பிய சமூகத்திலிருந்து அச்சுறுத்தல்களையும், அதேவேளையில் வாய்ப்புக்களையும் எதிர்நோக்கி வருகின்றன என்று கூற வேண்டியுள்ளது. எவ்வாறிருப்பினும், இன்றைய போக்குகள், வாய்ப்புக்களிலும் பார்க்க அச்சுறுத்தல்களையே அதிகளவுக்குக் கோடிட்டுக் காட்டிக்கொண்டிருக்கின்றன என்பதனை எடுத்துக்காட்டுதற்கு இக்கட்டுரையில் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. மூன்றாவது மண்டல நாடுகளைப் பொறுத்தவரையில் அவை இந்த அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருகின்றன.

## II. வளர்முக நாடுகளுடனான ஐரோப்பிய சமூகத்தின் வர்த்தகம்

### (அ) பின்னணி

வளர்முக நாடுகளுடனான அதன் வர்த்தகத்தில், ஐரோப்பிய சமூகம், வர்த்தக முன்னுரிமைகள் மற்றும் இறக்குமதிக்கட்டுப்பாடுகள் என்பவற்றைக் கொண்ட மிகச் சிக்கலான ஒரு முறையைப் பின்பற்றி வருகின்றது. 'லோம்' (LOME) உடன்படிக்கையின் பிரகாரம், ஆபிரிக்க, கரிபியன் மற்றும் பசுபிக் பிராந்தியத்தை சேர்ந்த 68 நாடுகளுக்கு, அவற்றின் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் மற்றும் பெரும்பாலான வேளாண்மை உற்பத்திப் பொருட்கள் என்பவற்றின் ஏற்றுமதிகள் தொடர்பாக தீர்வையற்ற பிரவேச அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது. மத்திய தரைக்கடல் பிராந்தியத்தைச் சேர்ந்த 12 வளர்முக நாடுகள், பெரும்பாலான தயார் செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்கள் மற்றும் ஓரள

வுக்குத் தயார் செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்கள் என்பவற்றைப் பொறுத்த வரையில் ஐரோப்பிய பொதுச் சந்தைக் குள் சுதந்திரமாகப் பிரவேசிக்கக்கூடிய நிலையில் இருந்து வருகின்றன. புடவை கள் மற்றும் ஆடைவகைகள் என்பவற்றின் இறக்குமதிகள் தொடர்பாக மட்டுமே கட்டுப்பாடுகள் நிலவிவருகின்றன. பொது வேளாண்மைக் கொள்கையின் கீழ் உள்ளடக்கப்படாத வேளாண்மை உற்பத்திப் பொருட்கள் தீர்வை குறைப் புக்களிலிருந்து அனுகூலங்களைப் பெறுகின்றன. இதற்கு மாறாக, ஆசிய வளர்முக நாடுகள் ஐரோப்பிய பொதுச் சந்தையில் குறைந்த அளவிலான முன்னுரிமை அந்தஸ்தினையே பெற்றுள்ளன. ஐரோப்பிய சமூகத்தின் பொதுமைப்படுத்தப்பட்ட முன்னுரிமை கள் திட்டத்தின் கீழ், ஆசிய வளர்முக நாடுகள் பயனடைந்து வருகின்றன. ஆனால், கடந்த சில வருடங்களில் இந்த முன்னுரிமைகள் படிப்படியாக குறை வடைந்துகொண்டு வந்துள்ளன. மிகத் தெளிவான சில அச்சுறுத்தல்களை இங்கு நாம் பரிசீலனை செய்வோம்.

### (ஆ) அச்சுறுத்தல்கள்

#### (1) முன்னுரிமையுடன்கூடிய வர்த்தகம்

பொதுச் சந்தையின் உதயத்துடன் முன்னுரிமையுடன்கூடிய வர்த்தகக் கொள்கைகள் அகற்றப்பட்டபோதிலும், ஐரோப்பிய ஒருங்கிணைப்புக்குப் பின்னரும்கூட வளர்முக நாடுகள் தொடர்பான பாரபட்ச நிலை தொடர்ந்தும் நிலவிவரும் என்று சில வல்லுனர்கள் வாதிட்டு வந்துள்ளனர். ஆபிரிக்க, பசுபிக் மற்றும் கரிபியன் தொகுதி நாடுகள் மத்தியதரைக்கடல் பிராந்திய நாடுகள் என்பவற்றைப் பொறுத்தவரையில், ஸ்பெயின், போர்த் துக்கல் ஆகிய நாடுகள் ஐரோப்பிய சமூகத்துடன் ஒருங்கிணைவதன் விளை வாக எதிர்கொள்ளக்கூடிய மோசமான தாக்கங்களை சமன்செய்து கொள்வ தற்காக இந்நாடுகளுக்கென ஏதோ ஒரு வகையைச் சேர்ந்த முன்னுரிமைத் திட்டமொன்று நிலவிவர முடியுமென்று பலர் வாதிட்டு வருகின்றனர்.

#### (2) தீர்வையல்லாத தடைகள்

கடந்த பத்தாண்டு காலத்தின் போது ஐரோப்பிய சமூகத்தின் வர்த்தக கொள்கை யில் தீர்வையல்லாத வகையைச் சேர்ந்த தடைகள் பெருமளவுக்குச் செயலில் விடப்பட்டு வந்துள்ளன. இவை பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்:

i. சுயவிருப்பிலான ஏற்றுமதிக் கட்டுப்பாடு
ii. வேளாண்மைத்துறை இறக்குமதி களை ஒழுங்குபடுத்தும் மானியங் களும் வேளாண்மைதுறைக்கொள் கையும்.
iii. பொருட்களைப் பெருவாரியாக கொட்டி ஒழிப்பதற்கு எதிரான கொள்கை.
iv. பொருட்கொள்ளல் கொள்கைகளும் தொழில்நுட்பம் தொடர்பான தர நிர்ணயங்களும்.

ஐரோப்பிய சமூகத்தில், 1988ன் நடுப்பகுதியில் தாமே விரும்பி ஏற்றுமதி களைக் கட்டுப்படுத்திக்கொண்ட 138 நாடுகள் இருந்துவந்தன. இவற்றில் சுமார் அரைவாசிப்பகுதி தொழில் வளர்ச்சி கண்ட நாடுகளினால் பராமரிக்கப்பட்டு வந்தது. தாமே விரும்பி ஏற்றுமதிகளைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் முறை இப்பொழுது ஐரோப்பிய சமூகத்தில் துரிதமாக அதிகரித்து வருகின்றது. இந்த முறை, வளர்முக நாடுகளிலிருந்து வரும் இறக்குமதிகள் மீது அதிகரித்தளவுக்கு பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. இது வேளாண்மைதுறை உற்பத்திப் பொருட் கள், புடவை மற்றும் ஆடை வகைகள், இயந்திர கருவிகள், போக்குவரத்து உபகரணங்கள், பாதணிகள் என்பவற் றின்மீது தாக்கங்களை எடுத்து வருகின் றன.

மானியங்களைப் பொருத்தவரையில், வளர்முக நாடுகளிலிருந்து வரும் இறக்குமதிகளைப் பாதித்துவரும் ஐரோப்பிய சமூகத்தின் முக்கியமான ஒரு மானிய வடிவம், பொது வேளாண் மைக் கொள்கையின் பின்னணியில் வேளாண்மை தொடர்பாக பின்பற்றப் பட்டுவரும் அணுகுமுறையாகும். மேலும், கைத்தொழில்கள் தொடர்பாக மறைமுக மான சில மானிய வடிவங்களும் உள்ளன. ஐரோப்பிய சமூகத்தில் தாக்கமான போட்டியினை ஊக்குவிக்கும் பொருட்டு, எதிர்காலத்தில் அரச மானியங்கள் மீது பெருமளவுக்கு வரையறைகள் விதிக்கப் படுமென்று கூறப்பட்டு வருகின்றது. ஐரோப்பிய சமூகம், தற்பொழுது உறுப் புரை 115 கீழ் உள்நாட்டுக் கைத்தொழி லுக்கு ஓர் அச்சுறுத்தல் இருந்துவரும் சந்தர்ப்பத்தில், உறுப்பு நாடுகள் இறக்கு மதிகள் மீது கட்டுப்பாடுகளை விதிப் பதனை அனுமதிக்க முடியும். 1992ன் பின்னர் எல்லைக் கட்டுப்பாடுகள் நீக்கப் பட்டதனையடுத்து, உறுப்புரை 115ஐ செயற்படுத்துவது இனியும் சாத்தியமாக இருக்கமாட்டாது. இந்த வழிமுறைகள் அனைத்தும் பிரகடனப்படுத்தப்பட்ட விதத்தில் செயலில் விடப்படுமா என்ப தனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டி யுள்ளது. தொழில்நுட்ப தர நிர்ணயங் கள் தொடர்பான விடயம் இக்கட்டுரை யில் பிறிதொரு இடத்தில் கவனத்தி லெடுக்கப்படுகின்றது.

ஐரோப்பிய சமூகத்தின் உருவாக்கத் தின்போது போர்த்துக்கல், ஸ்பெயின், கிரீஸ் போன்ற ஐரோப்பிய சமூகத்தின் குறைவிருத்தி நாடுகளில் கணிசமான அளவில் பொருளாதாரச் சீராக்கங்கள் இடம்பெறும். இந்தச் சீராக்கல் செலவு கள், கட்டுப்பாடுகளைக் கொண்ட தீர்வையல்லாத தடைகளின் வடிவில் வளர்முக நாடுகளின்மீது திணிக்கப்பட்டு விடும் என அவதானிகள் கருதி வருகின் றனர்.

ஐரோப்பிய சமூகம் எந்த அளவுக்குப் பலம்பெற்று வருகின்றதோ அந்த அளவுக்கு அது பாதுகாப்புவாதக் கொள்கைகளையும் அதிகளவுக்குப் பின் பற்றத் தொடங்கிவிடுகின்றது என்பதனை இதுவரைகால அனுபவம் காட்டியுள்ளது. ஐரோப்பிய சமூகத்தின் சந்தை அதிகரித் தளவுக்கு சுயதேவைப்பூர்த்தியடைந்த சந்தையொன்றாக மாறி வருகின்றது என்பது கவனத்திலெடுக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். உதாரண மாக, ஐரோப்பிய சமூகம் புடவை வகைகள் மற்றும் ஆடைகள் என்பவற்றை பொருத்தவரையில் மிகப்பெரிய இறக்கு மதியாளராகவும், மிகப்பெரிய ஏற்றுமதி யாளராவும் இருந்துவந்தபோதிலும், இந்தத்துறை குறித்த பெரும்பாலான வியாபாரம் ஐரோப்பிய சமூகத்தின் சந்தைக்குள்ளேயே இடம்பெற்று வருகின் றது. மேலும், 1975ல் மொத்த ஐரோப் பிய சமூக வர்த்தகத்தில் 51.4 வீதம் ஐரோப்பிய சமூகத்துக்குள்ளேயே இடம் பெற்று வந்ததுடன், இது 1990ல் 59.2 சதவீதமாக அதிகரித்து இருந்தது.

#### (3) வருமானம் தொடர்பான தாக்கம்

ஐரோப்பிய சமூகத்தின் சாதகமான வருமானத் தாக்கம் வளர்முக நாடுகளில் எதிர்பார்க்கப்படும் சாதகமான வர்த்தக தாக்கத்தினை எடுத்துவராமல் இருக்கக் கூடும். அதிகரித்தளவிலான போட்டி மற்றும் அளவுச் சிக்கனங்கள் என்பவற் றிலிருந்து தோன்றும் முனைப்பான வர்த்தக உருவாக்கத் தாக்கங்கள், வர்த்தக திசைமாற்றத் தாக்கங்களிலிருந்து வரும் அனுகூலங்களை ஈடுசெய்வனவாக இருக்கக்கூடும். இந்த வகையில் ஐரோப் பிய கைத்தொழில்கள் திறமைமிக்கவை யாக மாற்றமடையும்பொழுது இறக்கு

அட்டவணை 1

**ஐரோப்பாவுடன் இலங்கையின் பொருளாதார, அரசியல் மற்றும் சமூக துறைகளுடனான தொடர்புகள்**
**(தரவுகள் அனைத்தும் 1991 ஆம் ஆண்டு தொடர்பானவை)**

| காரணி | மேற்கைரோப்பா | கிழக்கு ஐரோப்பா |
|---|---|---|
| 1. ஏற்றுமதிகள் (பொருட்கள்+சேவைகள்) :ntage) ரூ. பத்து இலட்சம் (சதவீதம்) | 24,730 (31%) | 546 (1%) |
| 2. இறக்குமதிகள் (பொருட்கள்+சேவைகள்) :entage) ரூ. பத்து இலட்சம் (சதவீதம்) | 23,535 (18%) | 380 (0%) |
| 3. உதவிப் பெறுகைகள் । ரூ. பத்து இலட்சம் (சதவீதம்) | 1,772 (7%) | 0 (0%) |
| மீளச்செலுத்துகைகள் ' ரூ. பத்து இலட்சம் (சதவீதம்) | 1,740 (36%) | 45 (1%) |
| 4. முதலீடுகள்* – ரூ. பத்து இலட்சம் (சதவீதம்) | 1,617 (17%) | 4 (0%) |
| செய்திட்டங்கள் 1991ல் ஒப்புதல் பெற்றவை ரூ. பத்து இலட்சம் (சதவீதம்) | 2,157 (14%) | 11 (0%) |
| செய்திட்டங்களின் எண்ணிக்கை | 70 | 1 |
| 5. சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கை (சதவீதம்) | 192,054 (60%) | 4,755 (1%) |
| 6. வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட பணம் – ரூ. பத்து இலட்சம் (சதவீதம்) | 3,440 (19%) | 15 (0%) |
| 7. தொழில்வாய்ப்புக்கள் (எண்ணிக்கை)** | 295 (0%) | 0 (0%) |
| 8. தஞ்சம் புகுந்தோர் *** | 22,852 (82%) | ? (0%) |
| 9. தொடர்புசாதன ஆளணி | 7 | 0 |

*ஆதாரம்:* டயஸ் பண்டாரநாயக, வெளிநாட்டு விவகாரங்கள் ஆய்வுக்குழு, கொழும்பு, ஆகஸ்ட் 1992

*குறிப்புகள்*

* கூட்டுமுயற்சிகள் முக்கிய முதலீட்டு நாட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன

** இலங்கை வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பணியகம் மற்றும் உரிமம் பெற்ற தொழில் முகவரகங்கள் என்பவற்றின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது (உண்மை அளவின் 40 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது).

*** முற்றுப்பெறாத தரவுகள்.

ஏற்றுமதிகளுக்கு முன்னுரிமை அளிக்கக் கூடிய ஒரு நிலைமை தோன்றுவதற்கு வழிகோலக்கூடும். அத்துடன் ஐரோப்பிய சமூகத்தின் உதவி கிழக்கு ஐரோப்பாவை நோக்கி திசைதிருப்பப்படவும் முடியும். கிழக்கு ஐரோப்பாவிலிருந்து ஐரோப்பிய சமூகத்துக்குள் வரும் செலவு குறைந்த ஏற்றுமதிகள், ஐரோப்பிய சமூகத்தில் வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகளுக்கு—குறிப்பாக ஆடை வகைகள், பாதணிகள், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள், மரக்கறி வகைகள் போன்றவற்றுக்கு—நிலவிவரும் சந்தை வாய்ப்புக்களை பெருமளவுக்கு குறைத்துவிடக் கூடியவையாக இருக்க முடியும்.

வர்த்தகம் திசை திருப்பப்படுவதுடன் இணைந்த வகையில் முதலீடுகளின் திசை திருப்பமும் இடம் பெறும். ஐரோப்பிய சமூகம், இலாபகரமான சந்தர்ப்பங்கள் உருவாகும்பொழுது அதன் முதலீட்டினை கிழக்கு ஐரோப்பாவை நோக்கித் திசை திருப்பும். 1980 களில் ஆபிரிக்காவிலும் இலத்தீன் அமெரிக்காவிலும் ஐரோப்பிய சமூகத்தின் கணிசமான அளவிலான முதலீடுகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன என்பதனையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். வளர்முக நாடுகளுக்கான குறைந்த அளவிலான முதலீடும் குறைந்த அளவிலான உதவியும் அந்நாடுகளின்

மதிகள் ஓரளவுக்கு இடம்பெயர்க்கப்படும் ஒரு நிலைமை தோன்றமுடியும். இது வளர்முக நாடுகள் தொடர்பாக மிக மோசமான பின்விளைவுகளை எடுத்து வரக்கூடியதாக இருக்கும். வளர்முக நாடுகளிலிருந்து ஐரோப்பிய சமூகம் பெற்றுக் கொள்ளும் இறக்குமதிகளில் ஏற்படக் கூடிய வீழ்ச்சிகள் தொடர்பான மதிப்பீடுகள் உயர் அளவில் காணப்படுகின்றன. அலுவலக இயந்திரங்கள் 66–68%, பாதணிகள் 25–35%, புடவை/ஆடை வகைகள் 6%, செயற்கை நார் 48–58%, தரைவிரிப்புக்கள் 20–24%, மின்சார வீட்டுபயோகப் பொருட்கள் 24% என இந்த வீழ்ச்சிகள் காணப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

### (4) கிழக்கு ஐரோப்பாவுடனான நெருக்கமான தொடர்புகள் வளர்முக நாடுகளுக்கு சாதகமாற்றவையாக இருக்கக்கூடும்

கிழக்கு ஐரோப்பாவுடனான நெருக்கமான தொடர்புகள், வளர்முக நாடுகளிலும் பார்க்க கிழக்கு ஐரோப்பாவின்

அட்டவணை 2

**இலங்கை — ஐரோப்பிய சமூக வர்த்தகம் 1985 — 1990**

| வருடம் | இறக்குமதிகள் (ரூ. பத். இலட்.) | % | ஏற்றுமதிகள் (ரூ. பத். இலட்.) | % | வர்த்தக நிலுவை |
|---|---|---|---|---|---|
| 1985 | 7622 | 15.5 | 6474 | 18.9 | -1148 |
| 1986 | 7673 | 15.0 | 7623 | 23.0 | -50 |
| 1987 | 10293 | 17.2 | 8711 | 22.0 | -1583 |
| 1988 | 12165 | 17.3 | 10943 | 23.5 | -1222 |
| 1989 | 12553 | 16.6 | 13996 | 25.6 | +1463 |
| 1990 | 15468 | 14.7 | 19359 | 25.9 | +3891 |

*ஆதாரம்:* வாணிப திணைக்களம், மாதாந்த புள்ளிவிவரங்கள் திரட்டு, டிச. 1990.

அட்டவணை 3

**ஐரோப்பிய சமூகத்துக்கான ஏற்றுமதிகள்: ஒவ்வொரு நாட்டுக்கான சதவீத பங்குகள் (1987-1990)**

| நாடு | 1987 | 1988 | 1989 | 1990 |
|---|---|---|---|---|
| பெல்ஜியம் | 2.0 | 3.6 | 5.5 | 5.1 |
| டென்மார்க் | 0.3 | 0.3 | 0.5 | 0.3 |
| பிரான்ஸ் | 1.9 | 1.9 | 2.6 | 2.3 |
| ஜேர்மனி (ச. கு.) | 7.5 | 7.1 | 6.2 | 6.7 |
| கிரீஸ் | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| அயர்லாந்து | 0.3 | 0.2 | 0.2 | 0.2 |
| இத்தாலி | 1.0 | 1.0 | 1.4 | 1.9 |
| நெதர்லாந்து | 2.9 | 3.4 | 2.9 | 2.6 |
| ஐக்கிய அமெரிக்கா | 5.5 | 5.4 | 5.7 | 5.7 |
| போர்த்துக்கல் | 0.2 | 0.2 | 0.1 | 0.1 |
| ஸ்பெயின் | 0.5 | 0.4 | 0.4 | 0.5 |
| ஐரோப்பிய சமூகம் மொத்தம் | 22.2 | 23.5 | 25.6 | 25.5 |

*ஆதாரம்:* இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

அபிவிருத்தி முயற்சிகளை மிக மோச மான முறையில் பாதித்து, அவற்றின் ஏற்றுமதி வர்த்தகத்தினை குறைத்துவிட முடியும்.

**(5) ஐரோப்பிய சமூகம், ஐரோப்பிய சந்தைகளுக்குள் பிரவேசம் பெறும் பொருட்டு பரஸ்பர அனுகூல முறையை ஓர் கவர்ச்சி உபகரணமாக பயன் படுத்திக்கொள்ளும்**

இந்த பரஸ்பர அனுகூலமுறை வளர் முக நாடுகளைப் பொருத்தவரையில் முக்கியமான ஒரு பின்னடைவாக இருக்கும். வளர்முக நாடுகள் தமது தயார் செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களை ஐரோப்பாவுக்கு விற்பனைசெய்ய விரும் பினால், அவை தம்து பொருளாதாரங் களை ஐரோப்பிய உற்பத்தியாளர்களுக் காக திறந்துவிட வேண்டிய நிர்ப்பந்தம் தோன்றும். இந்தப் பரஸ்பர அனுகூல முறை 'சம அளவிலான பிரவேசம்' என்பதற்குப் பதிலாக 'சம அளவிலான விற்பனை' என வரைவிலக்கணம் செய்யப்பட்டால் அது வளர்முக நாடு களை பொருத்தவரையில் விரும்பத்தகுந்த ஒரு நிலையாக இருக்க முடியும்.

**(6) ஐரோப்பிய தர நிர்ணயங்கள்**

ஐரோப்பிய கைத்தொழில்தர நிர்ண யங்கள், தர நிர்ணயங்களுக்கான ஐரோப் பிய கமிட்டியியாலும், இலத்திரனியல் தொழில்நுட்ப தர நிர்ணய கமிட்டி யினாலும் வகுக்கப்படும். குறிப்பிட்ட ஒரு உற்பத்திப்பொருள், விதிக்கப்பட் டுள்ள தர நிர்ணயங்களுக்கு ஏற்ப உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்ப தனைக்காட்டும் 'CE' என்ற குறியீடு ஐரோப்பிய சந்தைக்கான கடவுச் சீட்டொன்றாகவுள்ளது. உயர் தொழில் நுட்ப உற்பத்திப் பொருட்களுக்கென விதிக்கப்பட்டிருக்கும் தர நிர்ணயங்கள், ஏற்கனவே, ஜப்பானின் உயர்தரம் வாய்ந்த தொலைக் காட்சிப்பெட்டி களைப் பாதித்துள்ளது. மேலும், உணவுப் பொருட்கள் தொடர்பான ஐரோப்பிய தர நிர்ணயங்கள், ஐரோப்பிய சமூகத் தின் உறுப்பு நாடுகளின் பலத்த நிர்ப்பந் தங்களின் விளைவாக தீர்மானிக்கப்படு வதனால், வளர்முக நாடுகளில் உணவு பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டிருப் போர் அதனால் அதிருப்தி அடைந்துள் ளனர். இந்தப் பொருட்கள் தொடர்பாக வளர்முக நாடுகளில் தற்பொழுது நிலவி வரும் தர நிர்ணயங்கள், ஐரோப்பிய தர நிர்ணயங்களுக்குப் பொருத்தமான தாக இருக்கவில்லை.

வளர்முக நாடுகள் தற்பொழுது எதிர் கொண்டுவரும் நிதி, பொதுக் கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப தடங் கல்களின் பின்னணிகளை கவனத்தி லெடுக்கும்பொழுது, இந்நாடுகளினால் தர நிர்ணயம் தொடர்பான இத்தேவைப் பாடுகளை நிறைவுசெய்ய முடியுமா என்பது சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது. மிகக் கடுமையான தர நிர்ணயங் களை விதிப்பதன் மூலம், ஐரோப்பிய சமூகம், வளர்முக நாடுகள் மீது மறை முகமாக பாதுகாப்புவாத வேலிகளை அமைத்து வருவதுபோல் தோன்றுகின் றது.

**(7) புடவை மற்றும் ஆடை வகைகள் தொடர்பான ஐரோப்பிய சமூகத்தின் கோட்டாக்கள் நிறைவு செய்யப்படா திருக்க முடியும்**

ஸ்பெயின், கிரீஸ், போர்த்துக்கல் போன்ற வறிய ஐரோப்பிய நாடுகளின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, ஐரோப்பிய சமூகத்தின் கோட்டாமுறை திருத்தி அமைக்கப்பட முடியும். அளவு அடிப்படையில் இந்தக் கோட்டாக்கள் ஒவ்வொரு வளர்முக நாடுகள் பெற்றிருக் கும் கோட்டா அளவிலும் பார்க்க குறைந்துவிட முடியும். மறுபுறத்தில், இந்த அனுகூலத்தின் அடிப்படையில் சாத்தியமான ஐரோப்பிய கோட்டாக் கள், தற்போது நாடுகள் தொடர்பாக நிலவிவரும் கோட்டாக்களுக்கான பதிலீடு ஒன்றாகக் கருதப்படாதிருக் கலாம். இது ஐரோப்பிய சந்தையை பயன்படுத்திக் கொள்வதனை பெருமள வுக்குக் கட்டுப்படுத்தும்.

**(8) உள்ளூர் ஒழுங்குவிதிகள்**

ஐரோப்பிய சமூகத்துக்குள் உள்ள குறைந்த அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ள நாடுகளின் தொழில்முயற்சிகள், உயர் மட்டத்தில் உள்ளூர் உள்ளீடுகளை பயன்படுத்துதல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படலாம். கோட்டா அல்லாத வர்த்தகத்துக்குத் தகைமை பெறும் பொருட்டு அவை தமது உற்பத்திகளில் 50% ஐரோப்பிய மூலப் பொருட்களை பயன்படுத்த வேண்டியிருக்கும். இத்தகைய அச்சுறுத்தல்கள் காரணமாக ஆசிய தொழில் முயற்சிகள் — குறிப்பாக ஜப்பான், ஹொங்கொங், சிங்கப்பூர் போன்ற நாடுகளைச் சேர்ந்த தொழில் முயற்சிகள் — ஐரோப்பிய சமூகத்துக் குள் பிரவேசிப்பது 1992ன் பின்னர் முற்றிலும் சாத்தியமற்றதாக இருக்குமென கருதப்படுவதனால் அவை இப்பொழுதே ஐரோப்பிய சந்தைக்குள் ஊடுருவ முயன்றுகொண்டிருக்கின்றன. ஏற் கனவே, செல்வவளம் மிக்க சில கம்பெனி கள் ஆடை மற்றும் வாகன உற்பத்தித் தொழிற்சாலைகளை ஸ்தா பித்துக் கொள்ளும்பொருட்டு, பாரிய ஐரோப் பிய கம்பெனிகளை கொள்வனவு செய்வதன்மூலம் இப்பிராந்தியத்தில் பேரளவில் முதலீடுகளை முடக்கி யுள்ளன.

**(இ) வாய்ப்புக்கள்**

1. ஐரோப்பிய சமூகத்தின் ஓர் உறுப்பு அரசின் தேவைப்பாடுகளை நிறைவு செய்யும் ஏற்றுமதியாளர்கள், ஏனைய உறுப்பு அரசுகள் அனைத் தினதும் தேவைப்பாடுகளை நிறைவு செய்தவர்களாவர்க ளாவார்கள். ஒரு நாட்டில் அவர்கள் பரீட்சிப்புக்கு உள்ளாக் கப்பட்டு அது தொடர்பாகப் பெற்றுக்கொள்ளப்படும் சான் றிதழ், ஐரோப்பிய சமூகம் முழுவதிலுமே செல்லுபடியாகும்.
2. வளர்முக நாடுகளின் தனியார் துறைக்கும் ஐரோப்பிய நிறுவனங் களுக்குமிடையில் — குறிப்பாக, கூட்டு தொழில் முயற்சிகளுக்கூடாக ஏற்படும் — பரஸ்பர தொடர்பு வளர்முக நாடுகளுக்கான பொரு ளாதார வாய்ப்புக்களை மேம் படுத்த முடியும்.
3. பொது வேளாண்மை கொள்கை யின் தாராளமயமாக்கலானது, வளர்முக நாடுகளில் நன்கு ஸ்தா பிதமாகியுள்ள உணவுப் பொருள் ஏற்றுமதியாளர்களுக்கு அனுகூல மானதாக இருக்கும். அத்துடன் பொருட்களைக் கொட்டித்தீர்த்து விடுவது தொடர்பான உறுப்புரை 115ன் நீக்கம் அனைத்து ஏற்றுமதி யாளர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

**இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான ஐரோப்பிய சமூகத்தின் தாக்கம்**

மேற்கு ஐரோப்பா மற்றும் கிழக்கு ஐரோப்பா என்பவற்றுடன், இலங்கை, பொருளாதார, அரசியல் மற்றும் சமூக பிரிவுகளில் கொண்டுள்ள தொடர்பு அட்டவணை 1ல் காட்டப்பட் டுள்ளது. மேற்கு ஐரோப்பா இலங்கையை பொறுத்தவரையில், சர்வதேச வர்த்தகம் தொடர்பாக மட்டுமன்றி, ஏனைய துறைகள் தொடர்பாகவும் மிக முக்கிய மான ஒரு பிராந்தியமாக இருந்து வருகின்றது. எனினும், ஐரோப்பிய

சமூகத்தின் நோக்கில், சர்வதேச வர்த்தகப் பிரிவு தொடர்பாக இலங்கை அவ்வளவு தூரம் முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. உதாரணமாக, 1990ல் ஐரோப்பிய சமூகத்தின் இறக்குமதிகளில் இலங்கையின் பங்கு 0.04% ஆக மட்டுமே இருந்தது. விடயம் இவ்வாறிருந்த போதிலும், அட்டவணை 1 காட்டுவது போல இலங்கையை பொறுத்தவரையில், ஐரோப்பிய சமூகம் பல்வேறு வழிகளிலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

இலங்கையின் சர்வதேச வர்த்தகத்தில் ஐரோப்பிய சமூகத்தின் கேந்திர முக்கியத்துவம் அட்டவணை 2ல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. 1989 மற்றும் 1990 ஆகிய வருடங்களில் ஒரு வர்த்தக மிகை இருந்து வந்துள்ளதனை இந்த அட்டவணை காட்டுகிறது. ஆடைகள், புடவைகள், தேயிலை, தேங்காய்த் துருவல், இறப்பர் என்பவற்றிலிருந்து கிடைத்த உயர் அளவிலான ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் காரணமாக இந்த மிகை தோன்றியிருந்தது. ஐரோப்பிய சமூகத்துக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் 1986ல் 18.9% ஆக இருந்து, 1990ல் 25.9% ஆக அதிகரித்திருந்தன. ஐக்கிய அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இலங்கையின் ஏற்றுமதிகளை கொள்வனவு செய்யும் இரண்டாவது மிகப் பெரிய கொள்வனவாளராக ஐரோப்பிய சமூகம் இருந்து வருகின்றது. ஐரோப்பிய சமூகத்திலிருந்து வரும் (பிரதானமாக மின்சார இயந்திரங்கள், ஏனைய இயந்திரயங்கள் என்பவற்றைக் கொண்ட) இறக்குமதிகள் 1987ல் மொத்த இறக்குமதிகளில் 17.3% ஆக இருந்து, 1990ல் 14.7% ஆக வீழ்ச்சியடைந்திருந்தன.

ஐரோப்பிய சமூகத்திற்கான இலங்கையின் ஏற்றுமதிகளின் புவியியல் ரீதியான பரவலினை நோக்கும்பொழுது, ஜேர்மனியே இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதிச் சந்தையாக இருந்து வருவதனை காணமுடிகின்றது. ஐக்கிய இராச்சியம் அதற்கு அடுத்த இடத்தை வகிக்கின்றது. ஐரோப்பிய சமூகத்துக்கான ஆடை ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, அப்பிராந்தியங்கள் தொடர்பாக இலங்கையில் ஏற்பட்ட பெருக்கத்துக்கு பிரதான பங்களிப்பினை வழங்கியது. ஐரோப்பிய சமூகம் 1987ல் இலங்கையின் மொத்த ஆடை ஏற்றுமதிகளில் 25.5% ஐ கொள்வனவு செய்திருந்ததுடன், இது 1990ல் 26.6% ஆக அதிகரித்துக் காணப்பட்டது. இந்த வகையில், ஐரோப்பிய சமூகம் ஐக்கிய அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இலங்கையின் தயார்செய்யப்பட்ட ஆடை வகைகளை கொள்வனவு செய்யும் இரண்டாவது மிகப்பெரிய கொள்வனவாளராக இருந்து வருகின்றது.

ஐரோப்பிய சமூகத்துக்கான இலங்கையின் தயார்செய்யப்பட்ட ஆடை ஏற்றுமதிகள், 'GATT' அமைப்பின் பல்நார் உடன்படிக்கையின் கீழ் வரும் இருதரப்பு உடன்படிக்கை ஒன்றினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ், ஐரோப்பிய சமூகத்துக்கான ஏற்றுமதி கோட்டாக்கள் நான்கு வகையான ஆடைகள் தொடர்பாக கிடைக்கின்றன. ஆண்கள் மற்றும் பெண்கள் காற்சட்டைகள், பாவாடைகள், சேட்டுக்கள், குளிர் ஆடைகள் என்பனவே இந்த நான்கு வகைகளுமாகும். ஐரோப்பிய சமூகம் தொடர்பான இலங்கையின் கோட்டா, 1989-91 காலப்பிரிவில் கணிசமான அளவில் (33%) அதிகரித்துள்ளது. இதே காலப்பகுதியில், கோட்டா பயன்பாட்டு விகிதம் சுமார் 80% ஆக திருப்திகரமான மட்டத்தில் இருந்து வந்துள்ளது.

பல்நார் உடன்படிக்கையின் தலைவிதி உண்மையிலேயே 'GATT' அமைப்பின் உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலேயே தங்கியுள்ளது. இப்பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன. புடவைகள் மற்றும் ஆடைகள் என்பவற்றிலான வர்த்தகத்தினை 'GATT' அமைப்புக்குள் ஒருங்கிணைப்பதே மூலநோக்கமாக இருந்தது. ஆனால், ஐரோப்பிய சமூக நாடுகள் புடவை மற்றும் ஆடை வர்த்தகத்தினை பெருமளவுக்கு தாராளமயமாக்கியிருப்பதனால், 'GATT' விதிமுறைகளை பலப்படுத்தவேண்டிய தேவை உள்ளதென ஐரோப்பிய சமூகம் வலியுறுத்தி வருகின்றது. அதாவது, பாதுகாப்பு தர நிர்ணயங்கள் தொடர்பான ஒழுக்காறுகள், மானியப்படுத்தல் மற்றும் சமப்படுத்தும் வழிமுறைகள், ஐரோப்பிய சமூகத்தின் ஏற்றுமதிகளுக்காக வளர்முக நாடுகளின் சந்தைகளை திறந்துவிடுதல் போன்றவற்றையே இது குறிக்கின்றது. இன்றுள்ள நிலவரத்தின்படி, பல்நார் உடன்படிக்கை பத்தாண்டு காலத்தில் படிப்படியாக கட்டம் கட்டமாக முடிவுக்கு வந்துவிடும் என்றே தோன்றுகிறது. பல்நார் உடன்படிக்கை முற்றிலும் ஒழிக்கப்படும் பொழுது, இலங்கை அதனால் பெருமளவுக்கு நட்டமடையக்கூடிய வாய்ப்புள்ளது. அதிகளவுக்குக் கைத்தொழில்மயமாகியுள்ள ஹொங்கொங், தாய்வான், தென் கொரியா போன்ற நாடுகள் ஐரோப்பிய சந்தையில் இலங்கையிலும் பார்க்கக் கூடிய போட்டி அனுகூலத்தைக் கொண்டிருப்பதே இதற்கான காரணமாகும்.

தயார்செய்யப்பட்ட ஆடை ஏற்றுமதிகள் தொடர்பாக கோட்டா அல்லாத சந்தைகளில் தோன்றக்கூடிய சாத்தியமான அச்சுறுத்தல்கள் குறித்தும் இங்கு கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. ஐரோப்பிய சமூகத்தில், இலங்கை, (அ) ஊழியச் செலவு குறைந்த உறுப்பு அரசுகளான போர்த்துக்கல் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளிலிருந்து வரும் போட்டியையும், (ஆ) ஐரோப்பிய சமூகத்துடன் முன்னுரிமை உடன்படிக்கைகளை கொண்டிருக்கும் துருக்கி, மொரொக்கோ போன்ற மத்தியதரைக் கடல் நாடுகளிலிருந்து வரும் போட்டியையும், (இ) ஐரோப்பிய சமூகத்துடன் இணைந்து கொள்ளக்கூடிய அல்லது ஐரோப்பிய சமூகத்திடமிருந்து ஆகக் குறைந்தது முன்னுரிமைச் சலுகைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய நிலையிலிருந்து வரும் குறைந்த கூலி அமைப்புக்களைக் கொண்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து வரும் போட்டியையும், (ஈ) ஐரோப்பிய சமூகத்திடமிருந்து முன்னுரிமை பெற்றுக்கொள்ளும் ஆபிரிக்க, கரிபியன் மற்றும் பசுபிக் நாடுகளிலிருந்து வரும் போட்டியையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இலங்கையின் ஆடை ஏற்றுமதியாளர்கள் இந்தக் காரணிகளை மிகுந்த முக்கியத்துவத்துடன் கவனத்திலெடுக்க வேண்டியது அவசியமாகும்.

ஐரோப்பிய சமூகத்திலுள்ள புடவை மற்றும் ஆடை உற்பத்தியாளர்கள் ஒரு புதிய சந்தைப்படுத்தல் மற்றும் உற்பத்தி உபாயங்களின் தொகுதியொன்றினை மிகுந்த முனைப்புடன் பின்பற்றி வந்துள்ளனர். இந்த அம்சமும் கவனத்திலெடுக்கப்படுதல் வேண்டும். குறிப்பாக, ஐரோப்பிய சமூகத்தின் புடவைக் கைத்தொழிலில் ஏற்பட்டுவரும் ஊழியச் சிக்கனம் கொண்ட புதிய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் இலங்கையைப் போன்ற வளர்முக நாடுகள் மலிவான ஊழியத்தில் கொண்டுள்ள சார்புரீதியான அனுகூல நிலையினை இல்லாமல் செய்துவிடக்கூடும். சமீப காலத்தில் புடவை மற்றும் ஆடை உற்பத்தித்துறையில் பின்வரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன: (அ) புடவைகளை வெட்டும் நிகழ்வுப் போக்கில் லேசர் கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன; (ஆ) கம்பியூட்டரின் உதவியுடனான

வடிவமைப்பும் பொருட்களை தானியங்கும் முறையில் கையாளலும்; (இ) புதிய தானியங்கி தையல் செயற்பாடுகள்; (ஈ) அதிக செல்வச் செழிப்பு மிக்க சந்தைகளுக்கு வழங்கும் பொருட்டு பொதுவான உற்பத்திகளை பாரிய அளவில் உற்பத்தி செய்வதற்குப் பதிலாக, பிரத்தியேகமான உயர்தரம் வாய்ந்த பொருட்களை சிறிய அளவில் உற்பத்தி செய்தல்.

தயார் செய்யப்பட்ட ஆடைகள் தவிர தேங்காய் துருவல், ஷீட் மற்றும் கிரேப் இறப்பர், தொகை அளவில் தேயிலை, தேங்காய், தும்பு, தேங்காய் எண்ணெய் என்பன ஐரோப்பிய சமூகத்துக்கான இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களாக இருந்து வருகின்றன. இந்த ஏற்றுமதிகளில் பெரும்பாலானவை ஐரோப்பிய சமூகத்தின் சந்தைக்குள் தீர்வைகளற்ற விதத்திலேயே பிரவேசிக்கின்றன. ஐரோப்பிய சமூக நாடுகளிலிருந்து பெறப்படும் மொத்த அந்நியச் செலாவணி சம்பாத்தியங்களில் 45% ஐ இப்பொருட்கள் சாதாரணமாக பங்களிப்புச் செய்கின்றன.

தயார் செய்யப்பட்ட ஆடைகள் தவிர ஐரோப்பிய சமூகத்துக்கான இலங்கையின் எனைய எற்றுமதிகளில் பெரும்பாலானவை பாரம்பரிய பொருட்களாகவும், ஒருசில பொருட்கள் பாரம்பரியப் பொருட்களின் பாரம்பரியமற்ற வடிவங்களாகவும் இருந்து வருகின்றன என்பதனை மேலே தரப்பட்ட பட்டியலில் இருந்து காணமுடிகின்றது. இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதிப் பொருட்களில் பெரும்பாலானவை ஆசிய, கரிபிய மற்றும் ஆபிரிக்க நாடுகளிலிருந்து வரும் மிகக் கடுமையான போட்டியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதனை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். இலங்கை இந்தச் சவாலினை எதிர்கொள்ளும்பொருட்டு, அதன் தற்போதைய அடித்தளத்தை மேலும் பலப்படுத்திக்கொள்வதுடன், அதன் பாரம்பரிய எற்றுமதிகளை மேலும் விஸ்தரித்துக்கொள்ள வேண்டியுமுள்ளது. தேவைபான அளவுகளிலும், போட்டி விலைகளிலும் பாரம்பரிய எற்றுமதிகள் கிடைக்கக்கூடியதாக இருக்கும் தன்மை, ஏற்றுமதியாளர்களை, பாரம்பரிய பொருட்களிலிருந்தும் ஓரளவுக்குப் பதப்படுத்திய பாரம்பரியமற்ற பொருட்களிலிருந்தும் பொதிப்படுத்தப்பட்ட தேயிலை, தேயிலைப் பைகள், மணமூட்டப்பட்ட தேயிலை, நறுமண மூட்டப்பட்ட தேங்காய் எண்ணெய், தும்புப் பாய்கள், கையுறைகள், பாய்

அட்டவணை 4
**இலங்கையில் தயார் செய்யப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதி**
**(பெறுமதி விகிதம்)**

| நாடு | *1987* | *1988* | *1989* | *1990* |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 67.3 | 66.2 | 68.9 | 66.4 |
| ஐரோப்பிய சமூகம் | 25.5 | 27.1 | 23.9 | 26.6 |
| கனடா | 2.6 | 2.6 | 2.5 | 2.7 |
| ஸ்வீடன் | 1.0 | 0.6 | 0.7 | 0.8 |
| நோர்வே | 0.4 | 0.3 | 0.3 | 0.4 |
| ஜப்பான் | — | 0.6 | 1.3 | 1.0 |
| ஏனையன | 3.2 | 2.6 | 2.4 | 2.1 |

*ஆதாரம்:* இலங்கை சுங்கத்தரவுகளை அடிப்படையாக கொண்டு ஆசிரியரால் தயாரிக்கப்பட்டது.

கள், இயந்திரங்கள் மற்றும் பொம்மைகளுக்கான இறப்பர் உறுப்புக்கள் போன்ற இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு தூண்டுதல் அளிக்கும்.

செயற்கை மலர்கள், பெறுமதிமிக்க கற்கள், தோல் உற்பத்திப் பொருட்கள், குடைகள் போன்ற உற்பத்திகள் தீர்வையல்லாத தடங்கல்கள் காரணமாக ஊடுருவிச் செல்வது மிகக் கடினமாக இருக்கும் தனியொரு சந்தையை சென்றடைவது கஷ்டமாக இருக்கும். ஐரோப்பிய சமூகத்தின் வறிய உறுப்பு நாடுகளாக இருந்துவரும் போர்த்துக்கல், கிரீஸ், ஸ்பெயின், அயர்லாந்து, டென்மார்க் போன்ற நாடுகளுக்கு சலுகையுடன்கூடிய அந்தஸ்தினை வழங்கும் நோக்குடன், இந்த உற்பத்திப் பொருட்களுக்கும் புதிய மற்றும் பதப்படுத்தப்பட்ட பழவகைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படுவது போல் தோன்றுகின்றது. இலங்கை ஐரோப்பிய சமூகத்திலிருந்து பெறும் மொத்த ஏற்றுமதி சம்பாத்தியங் களில் சுமார் 30-35% ஐ இப்பொருட் கள் பெற்றுத் தருகின்றன. எனவே, இவற்றிலிருந்து வரக்கூடிய ஏற்றுமதி இழப்புக்களை, ஏற்கனவே ஸ்தாபிதமாகியுள்ள பொருட்களின் ஏற்றுமதியை அதிகரித்துக் கொள்வதன் மூலமும், சாத்தியமான புதிய ஏற்றுமதிகளைக் கண்டறிவதன் மூலமுமே ஈடுசெய்துகொள்ள வேண்டியுள்ளது.

சாத்தியமான புதிய உற்பத்திப் பொருட்கள் யாவை? ஏற்கனவே குறிப்பிடப்பட்ட பாரம்பரிய பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் பெறுமதி சேர்க்கப்படும் பொருட்கள் தவிர புதிய உற்பத்திப் பொருட்களை இனங்கண்டு கொள்வது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. மேலும், அத்தகைய உற்பத்திகள் ஒப்பீட்டு அனுகூல கோட்பாட்டுக்கு ஏற்பவே தோன்ற முடியும். எனினும், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகள், உடனடி எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்து மேம்படுத்துவதற்கென ஒருசில உற்பத்திப் பொருட்களை இனங்கண்டுள்ளன. மரமுந்திரிகை, புகையிலை, அத்தியாவசிய எண்ணெய் வகைகள், துடைப்பங்கள், தூரிகைகள், விலங்குத் தீவனம், இயற்கை நார் உற்பத்திப் பொருட்கள், மருத்துவ மூலிகைகள், மட்பாண்டங்கள், கடலுணவு, அலங்கார நகைகள் போன்ற உற்பத்திப் பொருட்களை ஐரோப்பிய சமூகத்தின் சந்தைகளில் இலங்கை ஊக்குவிக்க முடியும்.

## IV. இலங்கைக்கான கொள்கைத் தெரிவுகள்

ஐரோப்பிய சமூகம் முன்வைக்கும் அச்சுறுத்தல்களை தாக்கமான முறையில் எதிர்கொள்வதற்கும், ஐரோப்பிய சமூகத்தினால் முன்வைக்கப்படும் வாய்ப்புக்களிலிருந்து இலாபம் பெற்றுக் கொள்வதற்கும் இலங்கை பின்வரும் வழிமுறைகளை கவனத்தில் எடுப்பது அவசியமாகும்:

1. ஐரோப்பிய சமூகத்தில் அமைந்துள்ள கம்பனிகளில் ஆடைகளைத் தயார் செய்வதற்கெனவோ அல்லது மலர்களை வளர்ப்பதற்கெனவோ முதலீடுகளை மேற்கொள்ளக்கூடிய அளவுக்கு இலங்கையிடம் மூலவளங்கள் இல்லை. எனினும், அது ஒருசில வர்த்தக நிலையங்களையும் விநியோக மையங்களையும் ஸ்தாபித்துக்கொள்ள முடியும். பெரிய கம்பனிகள் அல்லது கூட்டு வாணிப அமைப்புக்கள், ஐரோப்பிய சமூகத்தின் இலக்கு நாடுகளில் விற்பனை மற்றும் விநியோக மையங்களை

(15 பக்கம் பார்க்க)

# கொள்கை ஆக்கமும் எதிர்காலமும்

கலா மகேஸ்வரன்

## 1. அறிமுகம்

பல்வேறு கொள்கைகளின் உருவாக்கம் மற்றும் அதனையடுத்த அமுலாக்கம், சட்டவாக்கம் என்பவற்றின் சிக்கலான தன்மை காரணமாக, பல்வேறு கொள்கைகளினதும் முக்கியத்துவத்தினைப் புரிந்து கொள்வதற்கான ஜரு கட்டுக்கோப்பு அவசியமாகவுள்ளது. கொள்கைகள் குறித்து வெளியிடப்பட்டுள்ள நூல்கள், கொள்கைகள் என்பவற்றை, பொதுக் கட்டமைப்பு வசதிகள், சந்தைகள் மற்றும் விலை என மூன்று பிரிவுகளாக வகுத்துள்ளன. சட்டங்கள், மசோதாக்கள் என்பவற்றுக்கூடாக செயற்படுத்தப்பட்டு வரும் ஒட்டுமொத்தமான கொள்கைகளின் ஒரு மதிப்பீடு இக்கொள்கைகள் பல்வேறு மட்டங்களை நோக்கி முன் வைக்கப்பட்டுள்ளன என்ற உண்மையை எடுத்துக் காட்டுகின்றது. எனினும், வெளியிடப்பட்டுள்ள நூல்கள், பொதுவாக கொள்கைகளின் சாராம்சத்தினையே எடுத்துக் காட்டுகின்றன. இக்கொள்கைகளின் மேலிருந்து கீழ் நோக்கிய ஒழுங்கு வரிசைப்படியான அமுலாக்கம் அதிகளவுக்கு வலியுறுத்தப்படுவதில்லை. இந்தக் காட்சியுண்மை, கொள்கைகளை அவற்றின் சரியான அமைவில் வைத்து பொருள் விளக்கம் தரும்பொழுது ஓரளவுக்கு குழப்ப நிலைமையை தோற்றுவிக்கின்றது. பொதுக் கட்டமைப்பு வசதிகள், சந்தை மற்றும் விலை என்பன தொடர்பான கொள்கைகள் தற்போதைய நிலைமையில் முன்வைக்கப்படும் பொழுது பல்வேறு மட்டங்களிலுமான அமுலாக்கத்தினை அது பிரதிநிதித்துவம் செய்கின்றது. இந்தச் சுருக்கமான கட்டுரையின் நோக்கம், ஒரு வித்தியாசமான கட்டுக்கோப்புக்குள் இந்தக் கொள்கைகள் குறித்துக் கலந்துரையாடுவதாகும். மேலும், தனிப்பட்ட கொள்கைகள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படும் சாத்தியமான மட்டங்களை அடையாளம் கண்டுகொள்வதற்கும் இது வாய்ப்பினை அளிக்கும். உத்தேசிக்கப்படும் இந்தக் கட்டமைப்பு மூன்று அடுக்குகளைக் கொண்டதாகவுள்ளது. பேரண்டப் பொருளியல் கொள்கை மட்டம்; பொருளாதாரச் சூழல் கொள்கை மட்டம், நிர்வாகக் கொள்கை மட்டம் என்பனவே இந்த மூன்று அடுக்குகளும் ஆகும். மேலே எடுத்துக் காட்டப்பட்ட பொதுக் கட்டமைப்பு வசதிகள், சந்தை மற்றும் விலை என்பவற்றைக் கொண்ட கொள்கைகள் இந்த ஒவ்வொரு பிரிவினையும் சேர்ந்த கொள்கைகளின் நோக்கத்தினையும் மட்டத்தினையும் புரிந்துகொள்ளும் பொருட்டு, பின்னைய வகைப்படுத்தல் கட்டமைப்பின் பின்புலத்தில் இங்கு பரிசீலனை செய்யப்படுகின்றன.

## 2. கொள்கையாக்கம்

வகுக்கப்படும் கொள்கைகளின் பல்வேறு மட்டங்களிலும் முன்வைக்கப்படும் பொருள் விளக்கங்களின் அடிப்படையில், எதிர்காலத்துக்கென கவனத்திலெடுக்கப்படக்கூடிய வகைப்படுத்தல் மாதிரியொன்றை பரிசீலனை செய்வதற்கான மாதிரி உருவொன்று இங்கு உத்தேசிக்கப்படுகின்றது. இந்த உத்தேச மாதிரி உரு மூன்று மட்டங்களைக் கொண்டதாகவுள்ளது: பேரண்டப் பொருளியல் கொள்கை மட்டம், பொருளாதார சூழல் மட்டம், நிர்வாக மட்டம்.

பேரண்டப் பொருளாதாரக் கொள்கை மட்டம் நீண்ட காலத்தன்மை வாய்ந்த அந்நியச் செலாவணி சேமிப்பு மற்றும் சம்பாத்தியம், வேலைவாய்ப்புக்களின் உருவாக்கம், அரிசி, சீனி போன்ற தெரிவு செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் தன்னிறைவு போன்ற குறிக்கோள்களைக் கொண்ட தற்போதைய கொள்கைக் கட்டுக்கோப்புக்குள் பிரயோகிக்கப்படுகின்றது. இந்த கொள்கை நிலைப்பாடுகள் பல்வேறு மசோதாக்கள், சட்டமூலங்கள், சட்டவாக்கங்கள் என்பவற்றுக்கூடாக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பதுடன், அரசாங்கக் கட்டமைப்பின் பல்வேறு மட்டங்களிலும் பல்வேறு அரச முகவர் நிலையங்களினாலும் பல்வேறு வடிவங்களுக்கூடாக அமுல் செய்யப்பட வேண்டியவையாக இருந்து வருகின்றன.

மட்டம் 2: பொருளாதார சூழல் கொள்கைகள், மாறிவரும் பொருளாதாரச் சூழல் மற்றும் பொதுவான சூழல் என்பவற்றினை சமாளிக்கும் நோக்கில் உருவாக்கப்படும் கொள்கைகளை உள்வாங்கிக் கொள்வதற்காக உத்தேசிக்கப்படுகின்றன. தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய பொருளாதார நிலைமைகள், திட்டங்கள், அணுகுமுறைகள். இந்தப் பல்வேறு கொள்கை நிலைப்பாடுகளிலும் அனுகூலம் பெறுவோர், பாவனையாளர் போன்ற பிரிவினரின் மாறிவரும் தேவைகளை நிறைவுசெய்து கொள்வதற்காக உருவாகும் மனப்பாங்குகள் என்பவற்றினால் நிர்ணயம் செய்யப்படும் முனைப்புமிகுந்த பொருளாதார மற்றும் சூழல் நிலைமைகளுக்கு உசிதமான விதத்திலேயே இந்த மட்டத்திலான கொள்கைகள் வகுக்கப்படுகின்றன. இக்கொள்கைகள் பொதுவாக குறுங்கால மற்றும்நடுத்தரகாலகுறிக்கோள்களைஉள்ளடக்கியவையாக இருந்து வருகின்றன.

மட்டம் 3: இது நிர்வாக நோக்கங்களுக்காக உருவாக்கப்படும் கொள்கைகள் சம்பந்தப்பட்டதாகும். இந்த மாதிரி உரு நிர்வாகக் கொள்கைகளாக கருதப்படுகின்றது. மேலே விவரிக்கப்பட்ட கொள்கை மட்டங்களில் இந்த மாதிரி உரு செயற்படும் விதத்தினை விளக்கும் பொருட்டு இது ஓர் உதாரணத்துடன் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது; பதப்படுத்தப்பட்ட பழங்களை ஏற்றுமதி செய்வதே கொள்கை நிலைப்பாடாகும். இந்தக் கொள்கை நிலைப்பாடு அந்நியச் செலாவணியைச் சம்பாதிப்பது தொடர்பாக பேரண்டப் பொருளியல் கொள்கை நிலைப்பாட்டு வகையின்கீழ் வந்தபோதிலும், பழங்களின் ஏற்றுமதி தொடர்பான உண்மையான கொள்கை நிலைப்பாடு, குறிப்பிட்ட ஒரு காலப்பிரிவில் காணப்படும் குறிப்பிட்ட ஒரு சந்தை நிலைமைக்கான எதிர்விளைவொன்றாகவே தோன்றுகின்றது. இந்தக் கொள்கை நிலைப்பாட்டினை அதன் உருவாக்கத்திலும் அமுலாக்கலிலும் இரண்டாவது மட்டத்தை சேர்ந்த மாதிரி உருவில் — அதாவது பொருளாதார சூழல் கொள்கைகள் மாதிரி உருவில் — வைத்து நோக்க முடியும். வெளிக்கள மட்டத்தில் இந்தக் கொள்கை நிலைப்பாட்டினை வேண்டப்படும் பெறுபேறுகளை எய்துவதற்காக அமுல்செய்ய வேண்டிய தேவை

பிறிதொரு தொகுதியைச் சேர்ந்த கொள்கைகளை அவசியப்படுத்துகின்றது. அதாவது இந்தக் கொள்கை நிலைப்பாட்டை செயலில் எடுத்துவருவதற்காக சம்பந்தப்பட்ட அரசாங்க முகவரகங்கள் வெளிக்களத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவற்றை ஒன்றுதிரட்டக் கூடிய கொள்கைகளின் தொகுதியொன்று அவசியமாகவுள்ளது.

முகவரகம் 'A'யில் உருவாக்கப்பட்ட கொள்கை அமுலில் விடப்படும்பொழுது, அது, முகவரகங்கள் A1, A2, A3, A4 என்பவற்றுக்கூடாக நகர்ந்து செல்கின்றது.

அமுலாக்கல் நோக்கங்களுக்கென முகவரகங்கள் A1 – A4 அனுகூலம் பெறுபவர்களுக்கான உள்ளீடுகளை வழங்குதல், பதப்படுத்தும் உபகரணங்களுக்கான சலுகைகள், மூலப்பொருள் கொள்வனவில் பாதுகாப்பு என்பவற்றுக்கென கொள்கைகளை உருவாக்கும். நிர்வாகம் தொடர்பான கொள்கைகளாக இருந்துவரும் இக்கொள்கைகள், தனிப்பட்ட முகவரகங்கள் நடவடிக்கைக்கான உத்திகளையும் திட்டங்களையும் வகுத்தல், பாவனையாளர்கள் மற்றும் பயன் பெறுவோர் என்போருடனான தொடர்பு என்பவற்றை அபிவிருத்தி செய்துகொள்வதற்கான அடித்தளமாக இருக்கும்.

**3. மாதிரி உரு ஒன்றுக்கான நோக்கம்**

முதலாவது பிரிவில் எடுத்துக்காட்டியதுபோல, அமுலாக்கலுக்கென உருவாக்கப்படும் தனிப்பட்ட கொள்கைகளை எந்த ஒழுங்கு வரிசையில் வைத்து மதிப்பிடப்பட முடியும் என்பதனையும், எந்த மட்டத்தில் அவற்றை இனங்காண முடியும் என்பதனையும் அறிந்துகொள்வதற்காகவே இந்த மாதிரி உரு உத்தேசிக்கப்படுகின்றது.

*(13 பக்கத் தொடர்ச்சி)*

ஸ்தாபித்துக்கொள்ளும் வகையில் அவற்றுக்கு ஊக்கமளிக்கப்படுதல் வேண்டும். ஐரோப்பிய சமூகத்துக்குள் விற்பனை மற்றும் விநியோக நிலையங்களை ஸ்தாபித்துக் கொள்ளும் விஷயத்தில் இலங்கை பெரும்பாலான ஆசிய நாடுகளிலும் பார்க்க பின்தங்கிய ஒரு நிலையிலேயே இருந்து வருகின்றது என்று கூறப்படுகிறது. இந்த விஷயம் குறித்து உடனடியாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இந்த நிலையங்களை ஸ்தாபிக்கும் பொழுது, செலவுத்தாக்கம் மிக்க செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு, அமைவிடங்களின் தெரிவு, கம்பனிகளின் தெரிவு, ஊக்குவிப்பதற்கான உற்பத்திப் பொருட்களின் தெரிவு போன்றன தொடர்பாக பொருத்தமான திட்டமிடல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். ஸ்தாபித செலவுகளும், சந்தை ஊக்குவிப்பும் அரசாங்கத்தினால் மானியப்படுத்தப்படுதல் வேண்டும். கோட்டாக்கள், தர நிர்ணயம் தொடர்பான விதிமுறைகள், ஏனைய ஆசிய நாடுகளின் ஒப்பீட்டு அனுகூலங்களில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் போட்டி போன்ற தீர்வையல்லாத வகையைச் சேர்ந்த தடங்கல்கள் மிக உன்னிப்பான முறையில் கண்காணிக்கப்பட்டு, ஐரோப்பிய சமூக நாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலயங்களினால் இலங்கைக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

2. ஐரோப்பிய சமூகத்திற்கான இலங்கையின் ஏற்றுமதிகளில் (தயார் செய்யப்பட்ட ஆடைகள் தவிர) கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் பங்கு, வேளாண்மை துறையுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது மிகச் சிறு அளவினதாகவே இருந்து வருகின்றது. தயார் செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்கள் போதிய தொகைகளிலும், போட்டி விலைகளிலும் கிடைக்கவில்லை என்பதனையே இது பிரதிபலிக்கின்றது. இதற்கான தீர்வு ஓரளவுக்கு தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் ஐரோப்பிய சமூகத்தின் தொழில்முயற்சிகளுடன் இணைந்து கூட்டுமுயற்சிகளைத் தொடங்குவதாகவே இருக்கும். இத்தகைய கூட்டு முயற்சிகளின் போது உற்பத்திப் பொருட்களைத் திரும்பக் கொள்வனவு செய்யும் ஏற்பாடுகளையும் செய்துகொள்ள முடியும். பாதுகாப்புவாத வேலிகளை மிகவும் தாக்கமான முறையில் வெற்றி கொள்வதற்கு இத்தகைய ஏற்பாடுகள் பொதுவில் உதவக்கூடியவையாக இருக்கும். இதற்கு எமது ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக் கொள்கைகள் தொடர்பான விரிவான ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதுடன், கூட்டுத் தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கு முனைப்பு மிகுந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

3. சுவை, பழக்கம், மொழி, கலாச்சாரம் மற்றும் வருமானம் என்பவற்றில் காணப்படும் வேறுபாடுகள் காரணமாக ஐரோப்பிய சமூகத்தின் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு நுகர்பொருட்களுக்குமான கேள்வியில் வேறுபாடுகள் நிலவி வருகின்றன. 1992 க்குப் பிற்பட்ட காலத்தில் வருமானங்கள் அதிகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதனால், நுகர்வோர் சுவைகளையும் தேவைகளையும் நிறைவு செய்வதற்கு அவசியமான பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் வகைகள் அதிகரிக்கப்படுதல் அவசியமாக இருக்கும். இலங்கை குறிப்பிட்ட சந்தைப் பிரிவுகளை இனங்கண்டு, அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதன்மூலம் இப்போக்குகளிலிருந்து அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

4. இலங்கையின் ஏற்றுமதி அக்கறைகளை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, இலங்கையை ஒத்த நிலையிலுள்ள ஏனைய நாடுகளுடன் இணைந்து உத்வேகமான ஒரு முயற்சியினை நாடு மேற்கொள்ள வேண்டியுள்ளது. உதாரணமாக, பதப்படுத்தப்பட்ட வேளாண்மை உற்பத்திப் பொருட்களைப் பொறுத்தவரையில், ஐரோப்பிய சமூகத்தின் தொழில் முயற்சிகள், விரிவடைந்த சந்தையில் அளவுச் சிக்கனத்தை பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஒன்றாக இணையும் வாய்ப்புள்ளது. இதன் விளைவாக, ஏற்படக்கூடிய கூட்டு இலங்கைக்குப் பிரதிகூலமானதாக இருக்க முடியும்.

5. தனியொரு சந்தைக்கான ஏற்றுமதிகள் தொடர்பாக தேவைப்படும் மாற்றங்களை எடுத்துவரும் பொருட்டு, விசேஷ கொள்கை வழிமுறைகள் பயன்படுத்தப்பட வேண்டிய துறைகளை இனங்காணல். உதாரணமாக, இனங்காணப்பட்ட துறைகளில் தொழில்நுட்பத்தை தரம் உயர்த்துவதும், தேவையான தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய விதத்தில் புதிய பொருளுற்பத்திப் பிரிவுகளை ஸ்தாபித்தலும்.

# வறுமை ஒழிப்பு: இலங்கையில் சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்பாடும் அதன் விளைவுகளும்

பட்ரிக் மெண்டிஸ்

**சுருக்கம்:**

இலங்கையில், 1977 ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக தாராளமயமாக்கத்தின் பின்னர் வருமானப் பகிர்வில் சமநிலையற்ற தன்மையும், வறுமைக்கோட்டின் கீழுள்ள மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது. 1989 ல் கொண்டுவரப்பட்ட சனசக்தி நிகழ்ச்சித்திட்டம், மிகவும் பரந்த அளவில் வறுமையினைக் குறைப்பதற்கும் வறுமையின் எல்லையிலுள்ள மக்களைப் பொருளாதாரத்தின் பிரதான ஓட்டத்தில் ஒன்றிணைப்பதற்கும் முயல்கிறது. உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய திறந்த பொருளாதாரக் கொள்கைகளை அரசாங்கம் பேணுகின்ற அதே சமயத்தில், வரவுசெலவுத் திட்டப் பிரச்சினை (தொடர்ச்சியான உணவு மானியச் செலவுகள்), அதிகரித்துவரும் வறுமை நிலைமை ஆகிய இரண்டு பிரச்சினைகளையும் தீர்க்கின்ற இருவழித் தீர்வாக சனசக்தி நிகழ்ச்சித்திட்டம் உருவாகியது.

## அறிமுகம்

வர்த்தகத் தாராளமயமாக்கல் கொள்கைகள், திறந்த பொருளாதாரக் கொள்கைகள் ஆகியன இலங்கையில் 1977 ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்பு, வருமானப் பகிர்வின் சமநிலையற்ற தன்மை இங்கு அதிகரித்தது *(பொருளியல் நோக்கு, 1988)*. இந்தக் காலப்பகுதியில், உயர்ந்த பொருளாதார வளர்ச்சி இருந்தபோதிலும், வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது (மெண்டிஸ், 1992). வறியோர் தங்கள் தரத்தினை மேலுயர்த்திக் கொள்வதற்கான நம்பிக்கையைப் பெற முன்னர், செல்வந்தர் மேலும் செல்வந்தர்களாக் கப்பட வேண்டும் என விபரிக்கின்றதும், சமூக ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட முடியாததுமான குஷ்னெட்ஸ் (Kuznets) வளைவு மேற்கோளினை நடைமுறையில் நிறுவுவதற்கு இச்சந்தைப் பொருளாதாரக் கொள்கைகள் தவறிவிட்டன என்று மெண்டிஸ் மேலும் தெரிவிக்கிறார். 1977 க்குப் பின்பு கொண்டுவரப்பட்ட கொள்கைகள், சோஷலிச ஆதரவு அரசாங்கங்களினால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட சமத்துவம் நோக்கிய கொள்கைகளிலிருந்தும் கணிசமான அளவு விலகிச் சென்றவையாக இருந்தன.

1989 ல் மீளத்தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் தனது தாராள சந்தைப் பொருளாதாரத்தின் தோல்வியை உணர்ந்து, மிகவும் குறைந்த வருமான மட்டத்திலுள்ள மக்களை உற்பத்திச் செயல்முறையின் பிரதான பிரவாகத்தில் ஒன்றிணைக்கக்கூடியவாறு, 'சனசத்தி' (சிங்களத்தில் 'ஜனசவிய' என்பதன் பொருள் மக்களின் பலம் என்பதாகும்) என்றழைக்கப்படும் பாரிய வறுமை ஒழிப்புத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது (மெண்டிஸ், 1991). சனசத்தி நிகழ்ச்சித் திட்டம் என்பது மேற்கு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு அபிவிருத்தித் திட்டம் அல்ல; அது உள்நாட்டு மக்களினால் கொண்டுவரப்பட்ட ஒரு திட்டமாகும். ஆகவே, வறியோரிலும் வறியோர்களை வலுவூட்டுவதற்கான உதவி, அரசாங்கத்தின் மிக உயர்ந்த மட்டத்திலிருந்து கிடைக்கிறது. 1990-91 வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டில் காட்டப்பட்டுள்ள முக்கியமான தேசிய முன்னுரிமைத் திட்டங்களில் சனசத்தி நிகழ்ச்சித்திட்டமும் (ரூபா 4900 கோடி) ஒன்றாகும். இத்திட்டம் இரட்டைக் குறிக்கோளொன்றை எய்துவதற்கு முயற்சிக்கிறது: சமத்துவத்துடன் கூடிய வளர்ச்சி.

## எண்ணக்கருவும் செயற்பாடும்

வறிய மக்களை பராமரிந்து வரும் நோக்குடன் அமுலாக்கப்பட்ட உணவு மானிய நிகழ்ச்சித்திட்டம் (1942-1978), உணவு முத்திரை நிகழ்ச்சித் திட்டம் (1979-1989) ஆகியவற்றோடு சனசத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை ஒப்பிடுகையில், இது, மானிய அடிப்படையில், உணவுப் பொருட்களை வழங்குவதற்கும் அப்பால் மேலதிகமாக பல உதவிகளை வழங்குவதற்கு முயல்கிறது என்பதை காணமுடிகிறது. நுகர்ச்சிக் கூறு, முதலீட்டுக்கூறு ஆகிய கூறுகளைக் கொண்டுள்ள சனசத்தி எண்ணக்கருவானது உத்தியோகபூர்வ வறுமைக்கோட்டின் கீழுள்ள 14 இலட்சம் குடும்பங்களுக்கு (ஏறக்குறைய குடித்தொகையின் அரைவாசிப் பேருக்கு) மாதம் ஒன்றுக்கு ரூபா 2,500 வீதம் (அண்ணளவாக 63 அமெரிக்க டொலர்) இரு வருட காலப்பகுதிக்கு வழங்குகிறது. இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளபடி, நாளொன்றுக்கு வேண்டிய ஆகக்குறைந்த 2,200 கலோரிப் பெறுமான அளவைப் பெற முடியாத குடும்பங்கள், வறுமைக் கோட்டின் கீழுள்ளவையாகக் கணிக்கப்படுகின்றன. வறுமைக் கோட்டின் கீழுள்ளவர்களின் பொருளாதார அடித்தளத்தினைச் சக்தியூட்டுவதற்கும், அவர்களை நச்சுச் சுழலிலிருந்து வெளிக்கொணர உதவுவதற்காகவுமே ஒவ்வொரு குடும்பத்துக்கும் மாதமொன்றுக்கு ரூபா 2,500 வீதம் வழங்கப்படுகிறது. சனசத்தி உதவித் தொகையில் சுமார் 50% ஆகவுள்ள நுகர்வுக் கொடுப்பனவானது, உணவு முத்திரைகள் வடிவில், உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை அந்தந்தப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படுகிறது (அட்டவணை 1). மீதித் தொகை சேமிப்புக் கணக்கில், தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் அல்லது உள்ளூர் தபால் அலுவலகங்களில் வைப்புச் செய்யப்படுகிறது. இரண்டு வருடகால முடிவின் பின்னர், ரூபா 25,000 க்கும் அதிகமாகச் சேருகின்ற இம்முதலீட்டினை, சிறு தொழில் முயற்சித் திட்டங்களுக்கு வேண்டிய கடனைப் பெறுவதற்கு கூட்டுப் பிணையாக (தனியாகவும் அல்லது கூட்டாகவும்) பயன்படுத்த முடியும்.

இத்திட்டம் 25 மாவட்டங்களிலுமுள்ள 272 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தற்போதுள்ள நிறுவன, நிர்வாக அமைப்பு முறைமையூடாக அமுல்படுத்தப்படுகிறது (வளர்முக நாடுகளிடையே, இலங்கை நிர்வாக சேவை திறமை வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. தற்போதிருக்கின்ற நிறுவன,

அட்டவணை 1

**சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கூறுகள் (ரூபாவில்)**

| காலம் | நுகர்வு (சனசக்தி முத்திரை) | சேமிப்பு (முதலீடு செய்யப்பட வேண்டியது) | மொத்தம் |
|---|---|---|---|
| மாதம் ஒன்றுக்கு | 1,458 | 1,042 | 2,500 |
| ஒரு வருடத்துக்கு | 17,496 | 12,504 | 30,000 |
| இரண்டு வருடங்களினதும் மொத்தம் | 34,992 | 25,008 | 60,000 |

நிர்வாக கட்டமைப்பானது, பிரித்தானிய காலனித்துவத்தின் மரபுரிமைகளில் ஒன்றாகக் காணப்படுகிறது). தெரிவு செய்யப்பட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள மிகவும் வறுமை நிலைமையிலுள்ள மக்களுக்கு முதலாவதாக முன்னுரிமை வழங்கப்பட்டு, பொருளாதாரத்தின் நகர, கிராமிய, தோட்டத் துறைகளை உள்ளடக்கக்கூடிய வகையில் 11 சுற்றுவட்டங்களுக்கு இத் திட்டம் தொடரும். அரச இயந்திரத்தின் ஆகக் குறைந்த பிரிவு மட்டத்தில் (கிராம சேவகர் பிரிவு) பணத்தை மாற்றம் செய்யக்கூடியவாறு தபால் அலுவலகச் சேமிப்பு வங்கிகள், கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் (அரசிற்குச் சொந்தமான மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி போன்ற ஏனைய முக்கிய வங்கிகளையும் உள்ளடக்கி) ஆகியவற்றைக் கொண்ட ஒரு வலைப் பின்னல் முறை நிறுவப்பட்டிருக்கிறது.

மனித ஆதாரத்தின் மீது முதலீடு செய்வதை இந்நிகழ்ச்சித்திட்டம் வலியுறுத்துவதோடு, சிறிய உற்பத்தியாளர்களை, பெரிய முதலீட்டாளர்களோடு தொடர்புபடுத்தவும் முனைகிறது. கிராமிய மட்டத்தில் அமைந்துள்ள சுயமாக இயங்கும் அமைப்புக்கள், சிறிய உற்பத்திப் பிரிவுகள் ஆகியன பாரிய நகரக் கைத்தொழில்களுடன் தொடர்பினை ஏற்படுத்துவதற்கான ஒரு வலைப் பின்னல் அமைப்பினை வழங்கக்கூடியன என்று கொள்கை வகுப்பாளர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய இணைப்புக்கள் உற்பத்தியினை அதிகரிக்கவும், மேலதிகச் செலவினங்களைக் குறைக்கவும், குறைந்த பணவீக்கத்தினைப் பேணவும், கிராமிய வறிய மக்களுக்கு உறுதியான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தவும் வல்லனவாகும். கிராமிய அடிப்படையிலான தற்சார்பு பொருளாதாரக் கொள்கைகள், பௌத்த, காந்திய, சர்வோதய இயக்கத் தத்துவங்களை ஒத்தவையாக இருக்கின்றன எனக்கருதப்படுகிறது. கைத்தொழில்மயமாக்கலே கிராமியத் துறையினை நவீனமயமாக்கக்கூடியது என்ற எண்ணக்கருவிலிருந்தே பாரிய நகரக் கைத்தொழிற்துறையிலுள்ள பெரிய முதலீட்டாளர்கள் பற்றிய கருத்து முன்வைக்கப்படுகிறது. சிறிய அளவிலான தொழில் முயற்சித் திட்டங்களை உருவாக்குவதிலும், அவற்றைப் பாரிய கைத்தொழில்களுடன் தொடர்புபடுத்துவதிலும் சனசக்தி முதலீட்டுப்பணம் முக்கிய பங்கு வகிக்கிறது. விவசாயத் துறையோடு மிகவும் நெருக்கமாக இணைந்துள்ள 70% க்கும் அதிகமான நாட்டு மக்களின் ''முறைசாராப் பொருளாதாரத்தினை'' மேம்படுத்துவதற்கு இத்தகைய அபிவிருத்தி உபாயமொன்று தேவைப்படுகிறது. கடந்த காலத்தில் கவனிப்பாரற்று விடப்பட்ட இம்முறைசாரா பொருளாதாரம் நேரியக் கணக்குகளில் பிரதிபலிக்கப்படவில்லையாயினும், அது மிகவும் இயக்க முனைப்புக் கொண்ட ஒரு பொருளாதாரத் துறையினைக் கொண்டிருக்கிறது. இங்கு, தேசிய அபிவிருத்திக்கு உண்மையாகப் பங்களிக்கின்ற பல்வேறு உற்பத்தி நடவடிக்கைகள் உள்ளன. ஆனால், இவை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கணிப்பீட்டில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. சனசக்தி நிகழ்ச்சித் திட்டம், அதன் முதலீட்டுக்கூறினூடாக இம்முறைசாராத் துறையினுள் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை விருத்தி செய்வதில் கவனம் செலுத்துகிறது. சனசக்தி உதவியைப் பெறுபவர்கள் தங்கள் சேமிப்புக்களை ஒரு தொழில் முயற்சித் திட்டத்தில் முதலீடு செய்து, உறுதியான வருமானத்தினைப் பெற்றுக் கொள்ளும் வரைக்கும் சனசக்தி நுகர்ச்சிக் கூறானது ஒரு பாதுகாப்பு அங்கமாகச் செயற்படுகிறது. கிராமங்களிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள் மூலம் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றது.

இதைப்போன்ற வெற்றிகரமான இரண்டு அநுபவங்கள் பங்களாதேஷ், கொரியக் குடியரசு ஆகிய நாடுகளிலிருந்து வருகின்றன. எவ்வித காணியுமற்ற, கல்வியறிவற்ற கிராம மக்களுக்கு சிறிய தொகைக் கடன்களை வழங்குவதற்காக சிறியகுழு அடிப்படையில் பங்களாதேஷ் கிராமீன் வங்கி அமைக்கப்பட்டது. இவ்வங்கி 10 வருடங்களுக்கிடையில், பத்து இலட்சத்துக்குமதிகமானவர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு மிகத்துரிதமாக வளர்ச்சி அடைந்தது. இத்தொகையில் 70% மானோர் பெண்களாக இருந்ததுடன், இவர்களின் கடன்மீளளிப்பு வீதம் 98% ஆகவும் இருந்தது. கொரியக் குடியரசில், அந்நாட்டு அரசாங்கம் ஏறக்குறைய 33,000 க்கும் அதிகமான ஒவ்வொரு கிராமியச் சமூகங்களுக்கும், 'ஸீமுல் அன்டோங்' என்றழைக்கப்படுகின்ற (புதிய கிராமிய இயக்கம்) அமைப்பினூடாக 300 பக்கெற் சீமெந்தினை அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிப்பதற்காக வழங்கியது. இன்று, அவை பல்கலைக்கழகத்தினையொத்த பயிற்சி நிறுவனங்களை நிர்மாணிக்கும் அளவிற்கு விருத்தி அடைந்துள்ளன.

சனசக்தி நிகழ்ச்சித்திட்டமானது, தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சி, விவசாய, விவசாயக் கைத்தொழில் ஆகியவற்றுக்கான விரிவாக்கற் சேவைகள், கடன்திட்டம், வீடமைப்புத் திட்டம், போஷாக்கு, முதனிலைச் சுகாதாரம், சிறுவர் அபிவிருத்தி போன்ற ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களுடன் ஒன்றிணைக்கப்பட்டிருக்கிறது. இவற்றுள் நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளின் மாணவர்களுக்கும் இலவச மதிய உணவுத்திட்டத்தினை வழங்குவதற்காக ஒரு நலன்புரித் திட்டம் மீள ஆரம்பிக்கப்பட்டதும் ஒன்றாகும். இத்திட்டத்தினை அமுல்படுத்துகின்ற மாகாண சபைகள், உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை இயலுமானவரை பயன்படுத்துகின்றன. இந்நடவடிக்கை, உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு ஊக்குவிப்பினை வழங்குவதோடு தங்களின் அடிப்படை வருமானத்தினை அதிகரிப்பதற்கும் வழிவகுக்கும். சுதந்திரத்திற்கு முன்பிருந்த இந்நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்திற்கு மீளவும் முக்கியத்துவம் வழங்குவதற்காக ''பெற்றோருக்கு வருமானம், அவர்களின் பிள்ளைகளுக்குப் போஷாக்கு'' போன்ற பிரசித்தி பெற்ற சுலோகங்கள் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## பேரண்டப் பொருளியல் தாக்கங்கள்

பங்களாதேஷ், கொரியக் குடியரசு போன்று, இத்திட்டத்தின் ஆரம்ப அமுலாக்கலுக்கு வெற்றி கிடைக்குமாயின், பேரண்டப் பொருளியலில் சனசக்தியின் தாக்கங்களை, உணவுப் பொருட்களின் விலைகள், நகர, கிராமிய, தோட்டத்துறைகளில் வேலை வாய்ப்பு, வருமான உருவாக்கம் ஆகிய பதங்களின் அடிப்படையில் சாராம்சப் படுத்திக் கூறலாம்.

இந்நுகர்ச்சிப் படியினால் உருவாகின்ற பாரிய கேள்வியின் நிமித்தம் உணவுப் பண்டங்களின் விலைகள் அதிகரிக்கக்கூடும். உள்ளூர் உணவுப் பண்டங்களின் உற்பத்தி மட்டமானது இப்புதிய கேள்வியைத் திருப்திப் படுத்தக்கூடிய அளவிற்கு உயரும்வரை ஒரு உயர்ந்த பணவீக்கம் தொடர்ந்து இருக்கும். எப்படியாயினும், தாராளமய மாக்கப்பட்ட இறக்குமதிக் கொள்கை யானது உள்ளூர் உணவுப் பண்டங்களின் விலைகளில் ஓர் நேரடியான விளை வினைக் கொண்டிருக்கலாம். உலக விலைகள், உள்ளூர் விலைகளைவிட உயர்வாக இருக்குமாயின் (அநேகமாக இந்நிலைமையே உள்ளது) இங்கு உள்ளூர் உற்பத்தியினை அதிகரிப் பதற்கு ஒரு ஊக்குவிப்பு காணப்படு கிறது. வேலைவாய்ப்பிலும், வருமான உருவாக்கத்திலும் எதிர்பார்க்கப்பட்ட மாற்றத்தின் அளவு, ஒவ்வொரு துறையைப் பொறுத்தும் வேறுபடலாம். ஆனால், இப்பாரிய கேள்வியின் காரணமாக, உள்நாட்டு உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்படுகின்றதாயின், அது பொதுவாகவே வருமானத்தையும், வேலை வாய்ப்பையும் அதிகரிக்கும். ஒவ்வொரு துறையிலுமுள்ள பலதரப் பட்ட உற்பத்தி முயற்சித் திட்டங்களுக்கு அவசியமான நிதிக்குப் பிணையாகப் பயன்படுத்தக்கூடிய சேமிப்புக்கள், இம்முதலீட்டுக் கூறினூடாக வேலை வாய்ப்புக்களையும், குடும்பங்களுக்கு அவசியமான வருமான உறுதித்தன்மையையும் அதிகரிக்கச் செய்யும்.

## பொது நிதிப்படுத்தல்

அபிலாஷைகள் மிகுந்த இந்நிகழ்ச்சித் சித் திட்டத்தின் சாத்தியமானது, பொது நிதிப்படுத்தலின் ஆற்றலில் தங்கியிருக் கிறது. இத்திட்டத்திற்கு வேண்டிய நிதியினை நாட்டிற்குள்ளிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ (அல்லது இரண்டு முறைகளாலுமோ) பெறவேண்டியுள்ளது. 1985-89 காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 12% ஆகவிருந்து 1990ல் 14.8%ற்கு உயர் வடைந்த தேசிய சேமிப்புக்களின் அளவானது, பொருளாதாரத்தின் மொத்த முதலீட்டில் 76%னை நிதிப் படுத்துவதற்கு மாத்திரமே போதுமானது. எனவே, சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு அவசியமான நிதியினை ஒன்றில் மூலதன முதலீட்டுச் செலவினங்களைக் குறைப்பதன் மூலமோ அல்லது வெளிநாட்டுதவியினைக் கவருவதன் மூலமோதான் பெறவேண்டும். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது சுற்று வட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட தேசிய வரவுசெலவுத்திட்ட நிதியின் அளவு போதியதாக இல்லாதிருப்பதனால் (ரூபா 120 கோடி குறைவு), வெளி நாட்டு நிதியுதவிகளைக் கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதை அட்டவணை 2 தெரிவிக்கிறது. ஆனால், இங்கு கிடைக்கக்கூடிய நிதியின் அளவு, நுகர்வுக்கூறான ரூபா 330.6 கோடியைச் செலவிடுவதற்கு போதுமானது; முதலீட்டுக் கூறினைப் பொறுத்த வரையில், இதற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு போதுமானதல்ல. இரண்டு வருட முடிவில் முதலீட்டு நடவடிக்கைகளுக்கு வேண்டிய நிதியினை வழங்கும்வரை, இந்தச் சேமிப்புக்கள் வங்கிகளுக்கிடையே சுழற்சிப்படுத்தப்படுவதால், முதலீட்டுக்கு வேண்டிய நிதி உடனடியாகத் தேவைப்படமாட்டா தென ஒருவர் விவாதிக்கலாம். எனவே, ஆகக் குறைந்தது இரு வருடங்களுக்காவது, நுகர்வுக் கூறில் ஏற்படுகின்ற செலவு மாத்திரமே இந்நிகழ்ச்சித் திட்டத்தின் செலவினமாக இருக்கும்.

முதலீட்டுக் கூறுக்கான நிதி வெளிவாரி மூலங்களிலிருந்தே வரவேண்டியுள்ளது. மூன்று வருட காலத்துக்கென 10 கோடி அமெரிக்க டொலர் (ரூபா 400 கோடி) உலக வங்கி உதவியின் மூலம் அமைக்கப்பட்டுள்ள சனசக்தி நம்பிக்கை நிதியம், மூன்று வெவ்வேறு பகுதிகளில், இன்றியமையாத நிதி சார்ந்த பங்கினை வகிக்கிறது:

1. பிணைச் சொத்தில்லாது வறிய மக்களுக்கு கடன் வழங்குதல்; இக்கடனை மிகவும் பயனுள்ள முறையில் உபயோகிப்பவர்கள் மேலதிகக் கடனை பிணையின்றி பெறுவதற்கு தகைமையுடையவர்களாக இருப்பார்கள்.
2. தமது கருத்திட்டங்களையும், நிகழ்ச் சித்திட்டங்களையும் திட்டமிட்டு முகாமைப்படுத்துவதற்காக தனிப் பட்டவர்களையும், நிறுவனங்களையும் பயிற்றுவித்தல்.
3. வீதிகள், பாலங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், பூங்காக்கள், நூல்நிலையங்கள் போன்ற பொது வசதிகளை நிர்மாணிப்பதிலும், அவற்றைப் பராமரிப்பதிலும் வறிய மக்கள் வேலை வாய்ப்பினை பெறக் கூடியவாறு பொதுமராமத்து வேலைகளுக்கு வேண்டிய நிதிகளை வழங்குதல்.

**உருவம் 1**

**சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் உணவுப் பொருட்களின் விலைகள், வேலைவாய்ப்பு, வருமான உருவாக்கம் என்பவற்றில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்கள்**

| சனசக்தி நிகழ்சசித் திட்டத்தின் கூறுகள் (முதல் இரு வருடங்கள்) | உணவுப் பண்டங்களின் விலைகள் | நகரத்திலுள்ள வறுமை மக்கள் | | | கிராமிய கமக்காரர் | | | தோட்டத் தொழிலாளர் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | வேலை வாய்ப்பு | வருமானம் | | வேலை வாய்ப்பு | வருமானம | | வேலை வாய்ப்பு | வருமானம் | |
| | | | N | R | | N | R | | N | R |
| நுகர்ச்சிப்படியின் பயன்பாடு | + | 0 | + | + | 0 | + | + | 0 | + | + |
| இறக்குமதி செய்யப் பட்ட பொருட்கள் | + | 0 | | | - | | | 0 | | |
| உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் | - | (+) | | | + | + | + | 0 | | |
| சேமிப்புக்கள் (சிறு முயற்சித் திட்டங்களில் அல்லது உற்பத்தி நடவடிக் கைகளில் முதலீடு) | 0/(-) | + | + | + | + | + | + | 0/(-) | + | + |

*குறிப்பு:*
0 = எவ்வித மாற்றமுமில்லை
+ = அதிகரிப்பு
− = குறைவு

N = பெயரளவிலானது
R = உண்மையானது
() = சிறிதளவு தாக்கம்

அட்டவணை 2

**25 மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட 188,000 குடும்பங்களுக்கான முதலாம் வருடச்செலவு விபரங்களும் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடும்**

**செலவினம்:**

**கூறுகள்**

(ரூபா 100 கோடியில்)

| | | |
|---|---|---|
| நுகர்வு | (ரூபா 17,496×188,000 = 3,289 | |
| சேமிப்பு | (ரூபா 12,504×188,000 = 2,351 | |
| | 5,640 | |
| வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு: | | |
| வறுமை ஒழிப்புத்திட்டத்திற்காக 1989/90ல் மொத்த ஒதுக்கீடு | = 4.9 | |
| (-) நிர்வாகம் | = .5 | |
| திட்டத்திற்கு அவசியமான நிதி | | 4.4 |
| பற்றாக்குறை | = 1.240 | |

*ஆதாரம்:* டயஸ் (1989 : ப 1).

*குறிப்பு:* ரூபா 720 கோடி அங்கீகரிக்கப்பட்டதாயினும் இத்திட்டத்திற்காக ஆரம்பத்தில் 490 கோடி மாத்திரமே செலவழிக்கப்படும்.

வெவ்வேறு பிரதேசங்களிலுமுள்ள அமைப்புக்கள், பங்காளி அமைப்புகளாக பணிபுரிவதற்குக்கூட இந்த நிதியம் வசதியளிக்கிறது. ஒரு பங்காளி அமைப்பானது அரசு சார்ந்ததாகவோ அல்லது அரசிற்குள்ளேயோ அல்லது அரசு சார் பற்றதாகவோ, வங்கிகள் அல்லது கிராமியக் குழுக்களைக் கொண்டதாகவோ அமைக்கப்படலாம். கருத்திட்டங்களிலும் பொது மராமத்து வேலை நிகழ்ச்சித் திட்டங்களிலும் முதலீடுகளைச் செய்வதற்கென வகுக்கப்பட்ட இந் நம்பிக்கை நிதியம் மூன்று வருட காலத்திற்கு ரூபா 400 கோடியை மட்டுமே வழங்குகிறது; ஆனால் இம்மூன்று வருட காலத்திற்கும் முதலீட்டுக் கூறுக்காக தற்போதைய மட்டத்தில் ரூபா 700 கோடிக்கும் அதிகமாக நிதி தேவைப்படும். பதினான்கு இலட்சம் குடும்பங்களை உள்ளடக்குகின்ற முழுத்திட்டத்திற்கும், நுகர்வுக்காக மாத்திரம் ரூபா 4,900 கோடி தேவைப்படும். ரூபா 3,500 கோடிக்கும் அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ள முதலீட்டுக் கூறினை 11 சுற்றுவட்டங்களிலும் பூரணமாகப் பூர்த்தியாக்குவதற்கு வேண்டிய நிதியினை நாட்டிற்குள்ளிருந்து பெற முடியாது. ஏனெனில், சேமிப்புக்களும், முதலீடும் மிகவும் தாழ்ந்த மட்டத்திலே இங்கு காணப்படுகின்றன. இதற்கு மேலாக, வருடாந்த வளர்ச்சி வீதம், சேமிப்பு வட்டிவீதம், பணவீக்க வீதம், அரசியல் சூழல் ஆகியவையும் சேமிப்புக்களையும், முதலீட்டுக் கூறினையும் கணிசமானளவு பாதிக்கலாம்.

சனசக்தி நிகழ்ச்சித்திட்டம் ஒரு குடும்பத்தின் தலாவீத வருமானத்தினை ரூபா 30,000 ற்கு (750 டொலர்) அதிகரிக்கச் செய்யும். இது சராசரி தலாவீத வருமானமான 420 டொலர்களை (1988 தரவு) ஒரு உயர்ந்த மட்டத்திற்கு அதிகரிப்பதற்கு உதவும். அரசாங்க உத்தியோகத்தர்களினது மனோ திட்டத்தையும், வினைத்திறனையும் பேணக்கூடிய வகையில், அவர்களின் ஆகக் குறைந்த மாதவேதனத்தை ரூபா 2500 என்ற அடிப்படைச் சம்பளத்திற்கு உயர்த்த வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு உள்ளது. இந் நடிவடிக்கை பொதுத் துறையின் வேதனத்தை அதிகரிக்கும். (சனசக்தித் திட்டம் பாராளுமன்றத்தில் அறிமுகப் படுத்தப்பட்டபோது, அரச ஊழியர்களின் வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன). சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிதி வழங்கல் காரணமாக, உயர்ந்த கொள்வனவு சக்திகொண்ட ஓர் உயர் வருமான மட்டம் இதற்குள்ளே உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக ஒரு குறுகிய காலத்திற்காகவாவது பணவீக்க வீதம் அதன் தற்போதைய அளவான 11% ஐ விட அதிகரிக்கலாம்.

உள்நாட்டு உணவுற்பத்தி குறைவாகவும், தாராளமயமாக்கப்பட்ட இறக்குமதி கிடைக்கக்கூடியதாகவும் இருக்கும்வரை இத்தகைய நிலைமை இருக்கும். இதனால் சென்மதி நிலுவையிலும், வரவுசெலவுத் திட்டக்குறைவிலும் இந்நாடு பல இடர்ப்பாடுகளை எதிர்நோக்க வேண்டியேற்படும். எனினும், முதலீட்டுக் கூறின் நிமித்தமாக உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்குமென்றும், அதே சமயத்தில் நுகர்வுப் பணம், உணவுப் பண்டங்களுக்காக பாரிய கேள்வியினை உருவாக்குமென்றும் அனுமானிக்கப்படுகிறது.

## சந்தைப் பிரச்சினைகளும் தொழில் முயற்சியும்

மொத்தக் கேள்வியின் அதிகரிப்பு, வேலை வாய்ப்பினையும், மெய் வருமானத்தையும் அதிகரிக்கும்; இதனால் பொருளாதாரமானது தற்போதைய வேலையில்லாத் திண்டாட்ட மட்டத்திலிருந்து, மூலவளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதை நோக்கி நகரும் என்ற கீனீசிய சிந்தனையில் இருந்து இந்த சனசக்தி நிகழ்ச்சித் திட்டம் உருவாக்கப்பட்டது போல் தெரிகிறது. இம்மொத்தக் கேள்வியானது, நுகர்வு முதலீடு ஆகிய இரண்டையும் உள்ளடக்கி இருப்பதால், இவைகளில் ஏற்படுகின்ற சுயமான அதிகரிப்பு, வேலை வாய்ப்புக்களையும், வருமான மூலங்களையும் அதிகரிக்கு மென எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதாரம் விரிவடைய ஆரம்பிக்கும் போது, ஒரு பெருக்க விளைவு உருவாகு மென எதிர்பார்க்கப்படுகிறது.

அபிவிருத்தியடைந்த சுதந்திர சந்தைப் பொருளாதாரங்களில் கீனிசிய தீர்வு செயற்படக்கூடும்; ஆனால், அது இலங்கையில் செயற்படக்கூடியதாக இல்லை. கட்டமைப்பின் இறுக்கமான இயல்புகள், பணக்கேள்வியினை அதிகரிப்பதற்கான உற்பத்தி மூலவளங்களின் தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதாக உள்ளன (இந்திரரத்ன, 1989: ப 12-13). சுதந்திரச் சந்தை நிலைமைகளுக்கு வசதி ஏற்படுத்துகின்ற ஒரு முகவர் அமைப்பு என்ற முறையில்

அட்டவணை 3

**14 இலட்சம் குடும்பங்களுக்கும் தேவையான மொத்த நிதி (ரூ. 100 கோடி)**

| *காலம்* | *நுகர்வு* | *முதலீடு* | *மொத்தம்* |
|---|---|---|---|
| மாதமொன்றுக்கு | 2.04 | 1.46 | 3.5 |
| வருடமொன்றுக்கு | 24.50 | 17.50 | 42.0 |
| இரண்டு வருட முடிவில் | 48.99 | 35.01 | 84.0 |

அரசாங்கத்தின் தலையீடு ஒவ்வொரு மட்டத்திலும் தேவைப்படுகிறது. உதாரணமாக ஒரு சிறிய அளவிலான உற்பத்தியினை உருவாக்கலாம்; ஆனால் இங்கு சந்தைப்படுத்துவதில் பிரச்சினைகளுள்ளன என்பதை 1991 ம் ஆண்டில் இடம்பெற்ற சனசக்திப் பொருட்காட்சி எடுத்துக் காட்டியுள்ளது. இத்தகைய உற்பத்திகளுக்குகந்த சந்தை வாய்ப்புக்கள் இலங்கையில் போதுமானவையாக இல்லை. போதிய சந்தைகள் இல்லாத சந்தர்ப்பத்தில், தனியே வருமான உருவாக்க செயற்பாடுகளைவிட, உள்ளூர் உணவுற்பத்திக்கே அதிக முன்னுரிமை வழங்கப்படவேண்டியது மிகவும் முக்கியமாகும்.

சனசக்தி கொடுப்பனவின் அதிகரிப்பினால் கிடைக்கின்ற உயர் வருமான மட்டம், ஒரு புதிய வகையான நுகர்வுத் தேவைகளை உருவாக்கலாம். இத்தேவைகளை, இறக்குமதிகளின் அதிகரிப்பினை மேற்கொள்ளுவதன் மூலமாகவோ (அநேகமாக திறந்த சந்தை நிலைமைகளுக்குட்பட்ட நிலைமையில்) உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிப்பதன் மூலமாகவோ ஈடுசெய்து கொள்ளலாம். உணவு நுகர்வுத் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியளவிற்கு உள்நாட்டு உற்பத்தி இல்லையாதலால், பொருட்களினதும், சேவைகளினதும் விலைகள், இத்திட்டத்தின் ஆரம்ப காலத்திலாவது உயர்வடையச் செய்யும். எப்படியாயினும், இவ்விலையுயர்வுகள், உற்பத்தியினை அதிகரிப்பதற்கான தாக்கத்தினை உடனடியாக ஏற்படுத்தமாட்டா. இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது, உள்நாட்டு உணவுற்பத்தியினை ஊக்கப்படுத்தும் முகமாக சுதந்திரச் சந்தை நிலைமைகளை அரசாங்கம் அனுமதித்த போதும், இத்தகைய அனுகூலமற்ற நிலைமை உருவாகி இருந்தது. கீனீசிய மாதிரியில் தெரிவிக்கப்பட்டவாறு, உற்பத்தி மட்டம் அதிகரித்தால் மாத்திரமே பணப்பெருக்கம் செயற்படும். விசேஷமாக விவசாயத்தோடு தொடர்புடைய துறைகளைப் பொறுத்த வரையில் கிடைக்கக்கூடிய உற்பத்தியின் மெய்ப்பெருக்க விளைவு செயற்படுவதற்கு பொதுவாக நீண்டகாலம் செல்கிறது. உற்பத்தி நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டு, அதிகரித்த கேள்வியினை ஈடுசெய்யக்கூடிய வகையில் உள்நாட்டு உற்பத்திச் சந்தைக்கு வருமளவும், சில விலை அதிகரிப்புக்களைத் தற்காலிகமாக எதிர்பார்க்கலாம். இதற்கிடையே, அரசாங்கம் விலை மட்டங்களை மேற்பார்வை செய்ய வேண்டும் என்பதோடு, விலை உறுதித்தன்மையைப் பேணும் வகையில், சந்தை நடவடிக்கைகளினதும், விநியோக நடவடிக்கைகளினதும் பலதரப்பட்ட வழிவகைகளை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். உற்பத்தி மட்டம் உயர்வடைகின்றபோது அல்லது உற்பத்தி மட்டம் உயர்வடையுமாயின் இந்நடவடிக்கைகள் தேவைப்படமாட்டா; அத்துடன் அரசாங்கம் சந்தையை விட்டுவிலகக் கூடியதாக இருக்கும் என்பதோடு சந்தை விலையினை சந்தையே தீர்மானிக்கக்கூடிய வகையில் அரசாங்கமும் சந்தையை விட்டுவிலக வேண்டும். இத்தகைய நிலைமை இடம்பெறுமாயின், நுகர்வு விலைகளின் மட்டம் நிதானமாகவாவது அதிகரிக்கும்; அப்படியில்லையாயின், அதிகரித்துவரும் விலைமட்டம், தளம்பலடைகின்ற பணவீக்க வீதத்தினை மேலும் அதிகரிக்கச் செய்யும்.

ஒரு தொழில் வாய்ப்புத்திட்டத்திற்கு நிதி வழங்கவேண்டியதற்கான அடிப்படைக் கொள்கை, மத்திய வங்கியின் ஆய்வறிக்கையிலிருந்து உருவாகிறது. இவ் ஆய்வின்படி, உற்பத்தியோடு தொடர்பான ஒரு வேலைவாய்ப்புக்கு ஆகக் குறைந்தது ரூபா 30,000 (1984 விலைகளில்) கடன் திட்டம் தேவைப்படுகிறது. முதலாம் வருட முடிவில், நான்கு அல்லது ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட சனசக்தி உதவி பெறுகின்ற ஒவ்வொரு குடும்பமும் தொழில் வாய்ப்பினைப் பெற்றுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது ஏறக்குறைய 150,000 வேலை வாய்ப்புக்களை ஒரு வருடத்தில் ஏற்படுத்தும் (இரண்டு வருடங்களில் 300,000). பல்பெருக்க விளைவினைக் கொண்டுவரக்கூடிய மேலதிக வருமான உருவாக்க நடவடிக்கைகளின் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் குறை வடையும் என்று அனுமானிக்கப்படுகிறது. உற்பத்தி ஊழியப் படையில் ஒவ்வொரு வருடமும் சேருகின்ற மக்களின் எண்ணிக்கையைப் (2% அடிப் படையில்) பொறுத்த வரையில், வேலையில்லாத் திண்டாட்டத்தின் அளவானது (இது ஏறக்குறைய ஊழியப் படையில் 12% ற்கும் அதிகமானதாகும்) மிக உயர்ந்ததாகக் காணப்படுகிறது. இதனை ஒரு சில வருடங்களில் குறைந்துவிடுவது சாத்தியமாக இருக்கமாட்டாது. விவசாயம், கால்நடை வளர்ப்பு, கோழிப்பண்ணை, ஏனைய முறைசாரா கைத்தொழில்கள் (உ+ம் கைத்தறி, கைப்பணி) போன்ற ஊழியச் செறிவு மிக்க சிறிய கைத்தொழில்கள், உறுதியான வேலைவாய்ப்பினை வழங்குகின்ற மூலமாக மாறுகின்ற சந்தர்ப்பங்களில், கீனீசியத் தீர்வு ஒரு நீண்டகால அடிப்படையில் நன்கு செயற்படக்கூடும்.

தற்போது, நாட்டின் முழு அபிவிருத்தி உபாயமும், விவசாய, கைத்தொழில், சேவைத்துறைகளின் சீர்திருத்தத்தினை வலியுறுத்துகின்ற சனசக்தித் திட்டத்தினை மையமாகக் கொண்டே அமைந்திருக்கிறது. உள்ளூர்த் தேவைகளைப் பூர்த்தியாக்கக்கூடியவாறு பசளை, விதை, மூலப்பொருள், இரசாயனப் பொருட்கள் ஏனைய உள்ளீடுகள் என்பவற்றில் பல்வேறு வசதிகள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன. விவசாயம், வீட்டுக் கைத்தொழில், கைத்தொழில் துறைகள் ஆகியவற்றுக்கான விரிவாக்கற் சேவைகளுக்கும், தொழில் முயற்சியாளருக்கு வேண்டிய பயிற்சிக் கல்வித் திட்டங்களுக்கும் உரிய இடங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. கடந்த காலத்தில், இலங்கை மிகவும் உயர்ந்த சமூக, கல்விச் சாதனைகளை அநுபவித்தது. ஆயினும், குறைந்த வருமானத்தினைப் பெறுகின்ற மக்கள் இரண்டு காரணங்களின் நிமித்தம் ஒரு தொழில்முயற்சியாளருக்கான உத்வேகத்துடன் விருத்தி அடையவில்லை. சிறு தொழில் முயற்சித்திட்டங்களுக்கு வேண்டிய நிதி வளங்களின்மை, சிநேகபூர்வமற்ற வர்த்தகச் சூழல் என்பனவே இக்காரணங்களாகும். முயற்சியாளர்களை அவர்களின் கடந்தகால சோம்பேறித்தனத்திலிருந்து விடுபடச் செய்வதற்கு சனசக்தி முதலீட்டுக் கூறும், சந்தை நோக்கங்கொண்ட தற்போதைய கொள்கைகளும் வழிவகுக்கின்றன. எனினும், 3 வருடங்களுக்கும் குறைவாகவே உள்ள இச் சனசக்தித் திட்டத்திலிருந்து கிடைக்கக் கூடிய விளைவுபற்றி எதிர்வு கூறுவது தற்போது இயலாததாகும்.

வரவுசெலவுத் திட்டப் பிரச்சினைக்கும், அதிகரித்துவரும் வறுமைப் பிரச்சினைக்கும் ஓர் இருவழித் தீர்வாக சனசக்தி நிகழ்ச்சித்திட்டம் உருவாகியது. சனசக்தித்திட்டம் முற்றுப்பெறும் வேளையில், உணவு முத்திரைகளுக்கான வரவுசெலவுத்திட்டச் செலவினத்தை ஒரு கிரமமான முறையில் கட்டம் கட்டமாக நீக்கிவிட முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், அடிப்படை கேள்வி தொடர்ந்தும் இருக்கிறது; இரண்டு வருட முடிவின் பின்னர்,

*(30 பக்கம் பார்க்க)*

# ஆசியாவில் ஜப்பானின் நேரடி முதலீடு

## இலங்கை மற்றும் தாய்லாந்து என்பன தொடர்பான ஓர் ஆய்வு

பியதாஸ ரத்னாயக
(பொருளியல் திணைக்களம், ஸாகா பல்கலைக்கழகம், ஜப்பான்)

*ஜப்பானின் ஹிரோஷிமா பொருளியல் பல்கலைக்கழகத்தில், "ஆசிய நாடுகளில் பொருளாதார அபிவிருத்தி" என்ற தலைப்பில் இடம்பெற்ற செயலமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை.*

### அறிமுகம்

ஆசிய வளர்முக நாடுகளில், கைத்தொழில்மயமாக்கல் நிகழ்வுப்போக்கில் அல்லது நவீனமயமாக்கல் நடவடிக்கைகளில் நேரடி வெளிநாட்டு முதலீடு வகித்துவரும் பங்கு, அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் ஐ. நா. அமைப்பு, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்ற பிரதான சர்வதேச நிறுவனங்களிடையே இரண்டாவது உலகமகா யுத்தத்தின் பின்னர் கணிசமான அளவில் கலந்துரையாடப்பட்டு வந்துள்ள ஓர் விடயமாகவுள்ளது. வளர்முகப் பொருளாதாரங்களுக்குள் நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்களை ஊக்குவிப்பது, அத்தகைய நாடுகள் எதிர்நோக்கியிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம், வர்த்தக மற்றும் சென்மதி நிலுவைப் பற்றாக்குறைகள், வெளிநாட்டுச் செலாவணி பற்றாக்குறை, மோசமான தொழில்நுட்ப ஆற்றல், தேர்ச்சிபெற்ற ஊழியம், மூலதனம் என்பவற்றின் குறைபாடு போன்ற மிக முக்கியமான சமூக, பொருளாதார பிரச்சினைகளுக்கான முக்கியமான தீர்வாக இருக்க முடியுமென்று பெரும்பாலானவர்கள் நம்பிவந்துள்ளனர்.

வெளிநாட்டு நேரடி முதலீடு (வெ. நே. மு.) தொடர்பான உட்பாய்ச்சல்களுக்கும் மெய் மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சிக்குமிடையில் நிலவிவரும் புள்ளிவிவர ரீதியான தொடர்பினை வலியுறுத்தும் வகையிலேயே மேற்சொன்ன கருத்து கலந்துரையாடப்பட்டு வந்துள்ளது. ஆசியாவின் புதிதாக தொழில் வளர்ச்சி கண்ட ஹொங்கொங், சிங்கப்பூர், தென்கொரியா, தாய்வான் போன்ற நாடுகளின் வெற்றிகரமான பொருளாதார செயலாற்றுகை இதற்கான சிறந்த உதாரணமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. எனினும், சில பொருளியலாளர்கள், வெளிநாட்டு மூலதனத்தினால், குறிப்பிட்டுக்கூறக்கூடியளவுக்கு தேசிய வருமான வளர்ச்சி தூண்டப்படுவதில்லையென வாதிட்டு வருகின்றனர். உதாரணமாக, இந்த சாதகமான தொடர்பு, வெளிநாட்டு நேரடி முதலீட்டு மாறி, வளர்ச்சி மாறியை நோக்கி செல்வதாகவும், தெளிவற்ற ஒரு விதத்தில் அபாயத்தை எடுத்து வருவதாகவும், 'முட்டை முந்தியதா கோழி முந்தியதா' என்ற கேள்வியை எழுப்புவதாகவும் லக்ஷ்மன் (1991) வாதிடுகிறார். நவீன உலக வரலாற்றில் — குறிப்பாக இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் — வெளிநாட்டு மூலதனத்தினால் தேசிய வருமான வளர்ச்சி கணிசமான அளவுக்கு தூண்டப்பட்டுள்ள சம்பவங்களை காண முடியுமா என்பது சந்தேகத்துக்கிடமானதாக இருந்து வருவதாகவும் அவர் மேலும் வலியுறுத்துகிறார். வெளிநாட்டு மூலதனத்தின் உட்பாய்ச்சலினால் தேசிய வருமான வளர்ச்சி தூண்டப்படும் விடயத்தை மட்டும் நாம் கவனத்தில் எடுத்தால், இந்த வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடியயொன்றாகவே உள்ளது. ஆனால், பெரும்பாலான ஆசிய நாடுகளில் — குறிப்பாக புதிதாக தொழில் வளர்ச்சி கண்ட ஆசிய நாடுகளிலும் ஏஷியன் அமைப்பின் உறுப்பு நாடுகளிலும் — தேசிய வருமான வளர்ச்சி விகிதத்தின் துரித கதி, வெளிநாட்டு முதலீட்டின் அதிகரிப்புக்கூடாக அல்லது கிடைக்கக் கூடியதாக இருந்த வெளிநாட்டு மூலனத்தின் அளவுக்கூடாக ஏற்பட்டுள்ளது என்பது சந்தேகத்துக்கிடமானதாகவே உள்ளது.

ஆசிய பிராந்தியத்துக்குள் வெளிநாட்டு முதலீட்டின் உட்பாய்ச்சலானது ஒரு புதிய காட்சியுண்மையாக இருக்கவில்லை. முக்கியமாக காலனித்துவ ஆட்சி நடைபெற்ற காலகட்டத்தின் போது இந்த நிகழ்வுப்போக்கு ஆரம்பமாகியது. ஆசியப் பிராந்தியத்தில் இவ்விதம் நீண்ட காலமாக நிலவிவரும் வெளிநாட்டு மூலதனத்தை, அவற்றின் தோற்றம் மற்றும் இயல்பு என்பவற்றின் அடிப்படையில் இரண்டு பிரதான பிரிவுகளாக பிரிக்க முடியும். இதில் முதலாவது வகை சுரங்கமகழ்தல், பெருந்தோட்டத்துறை நடவடிக்கைகள் மற்றும் பாரம்பரிய வகையைச் சேர்ந்த பல்தேசிய கூட்டுத்தாபனங்களின் உருவாக்கம் என்பவற்றிலான காலனித்துவ ஆட்சியாளர்களின் முதலீடுகளை உள்ளடக்கியதாக வுள்ளது. இரண்டாவது வகை, கூட்டுத் தொழில் முயற்சிகள் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு/ பதப்படுத்துதல் வலயங்கள் அல்லது சுதந்திர வர்த்தக வலயங்கள் என்பவற்றைக் கொண்ட ஓரளவுக்கு இடம் குறிக்கும் தன்மைகொண்ட முதலீடுகளாகும். முதல்வகையைச் சேர்ந்த (கொரியத் தீபகற்பம் மற்றும் தாய்வான் போன்ற இடங்களில் ஜப்பானின் காலனித்துவ முதலீடு தவிர்ந்த) வெளிநாட்டு முதலீடு முதலீட்டினைப் பெறும் நாட்டின் உள்நாட்டுப் பொருளாதாரத்திலிருந்து பெருமளவுக்கு தனிமைப்படுத்தப்பட்டதாக இருந்துவருகின்றது. ஊழியம், மூலதனம் மற்றும் தொழில்நுட்பம் போன்ற அத்தியாவசியமான உற்பத்தி உள்ளீடுகள் முதலீட்டினை பெற்றுக்கொள்ளும் நாட்டின் உள்நாட்டுப் பொருளாதாரத்துக்கு வெளியே வழங்கப்பட்டன. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஆசியாவின் தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் கரும்புப் பெருந்தோட்டங்கள் மீதான நேரடி வெளிநாட்டு முதலீடு, சம்பந்தப்பட்ட நாடுகளின் பொருளாதாரங்களில் பின்னணி அல்லது முன்னணி பிணைப்புகள் எவற்றையும் எடுத்துவரவில்லை. இதன் விளைவாக நேரடி வெளிநாட்டு முதலீட்டின் வளர்ச்சி அனுகூலங்கள் உள்நாட்டுப் பொருளாதாரத்துக்குள் போதியளவில் இடமாற்றம் செய்யப்படவில்லை.

இரண்டாவது வகையைச் சேர்ந்த முதலீடு முழு அளவுக்கு இடம்குறிக்கும் தன்மை கொண்ட கூறுகளை கணிசமான அளவுக்குக் கொண்டிருந்தபோதிலும், நவீன தொழில்நுட்ப அறிவினையும், வளர்ச்சி கண்ட முகாமைத்துவ முறை

களையும் இடமாற்றம் செய்து பரவச் செய்வதற்கூடாக, முதலீட்டினை பெற்றுக் கொள்ளும் நாட்டின் உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் விருத்தி செய்வதில் ஓரளவுக்கு பின்னணிச் செல்வாக்கினை கொண்டுள்ளது. ஆசியாவின் புதிதாக தொழில் வளர்ச்சி கண்ட நாடுகள் மற்றும் ஏஷியன் அமைப்பு நாடுகள் என்பவற்றின் வெற்றி கரமான பொருளாதார செயலாற்றுகை களுக்கு இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்த முதலீடுகள் பெருமளவுக்குப் பங்களிப்பினை வழங்கி வந்துள்ளன என்று கூறமுடியும். அண்மைய தசாப்தங் களில், ஆசியாவின் சோஷலிஸ நாடு களும் முதலாளித்துவ நாடுகளும் முக்கிய மான சில சீர்திருத்தங்களின் தொட ரொன்றினை அறிமுகம் செய்து வைத்தன. இந்தச் சீர்திருத்தங்கள், பல்வேறு இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப் பாடுகள் என்பவற்றை நீக்கியதன் மூலமும், ஓரளவுக்கு இடம் குறிக்கும் தன்மை கொண்ட முதலீடுகளுக்கு பல்வேறு ஊக்குவிப்புக்களை வழங் கியதன் மூலமும் இந்நாடுகளின் பொரு ளாதார வளர்ச்சியைத் தூண்டிவிட் டுள்ளன. மேலும், இதன் மூலம், கைத் தொழில்மயமாக்கலுக்கூடாக பொரு ளாதார அபிவிருத்தியை மேலுயர்த்து வதற்கு கணிசமான ஒரு பங்களிப்பும் வழங்கப்பட்டுள்ளது.

மொன்பூஷோ சர்வதேச விஞ்ஞான ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் உதவியின் கீழ் இடம்பெற்றுவரும் "ஆசியாவில் பொருளாதார வளர்ச்சி மற்றும் வெளிநாட்டு உதவி என்பவற்றின் மாதிரிப் போக்கு" என்ற தலைப்பிலான ஆராய்ச்சி செய்திட்டமொன்றின் மூன்றில் ஒரு பங்கு முயற்சியொன்றாகவே இந்த ஆராய்ச்சிக் கட்டுரையுள்ளது. என்னால் பொறுப்பேற்கப்பட்டுள்ள ஆய்வு, "இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் பொருளாதார அபி விருத்தியில் ஜப்பானின் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பங்கு" என்ற தலைப்பிலான மதிப்பீட்டு ஆய்வினையும் உள்ளடக்கியதாக உள்ளது. இந்த மதிப் பீட்டாய்வு மூன்றாண்டு காலத்துக்குள், மூன்று பிரதான கட்டங்களில் மேற் கொள்ளப்படுவதற்கு உத்தேசிக்கப்பட் டிருந்தது. ஆசியப் பொருளாதாரங்களில் – குறிப்பாக இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் பொருளாதாரங் களில்– ஜப்பானின் கடல்கடந்த முதலீட் டின் முக்கியத்துவமும், அந்நாட்டின் கடல்கடந்த முதலீட்டின் வளர்ச்சி மாதிரிப் போக்கும் இதில் முதலாவதான தாகும். இந்த இரு நாடுகளிலும், பேரண டப் பொருளியல் மட்டத்தில், பொரு ளாதார அபிவிருத்தியில் ஜப்பானின் முதலீடு வகித்துவரும் பங்கு இரண்டாவது படியாக இருந்தது. முதலீட்டினைப் பெற்றுக்கொள்ளும் நாடுகளின் உள்நாட்டுப் பொருளாதாரங்களின் பல்வேறு பொருளாதார நடவடிக்கை களுக்கும் ஜப்பானின் வெ. நே. மு. நுண் மட்டத்தில் அளித்துவரும் பங்களிப்பு இந்த மதிப்பீட்டாய்வின் மூன்றாவது கட்டத்தில் கவனத்திலெடுக்கப்பட வேண்டியிருந்தது. இந்த ஆய்வுக் கட்டுரை, இந்த மூன்று கட்டங்களிலும், முதலாவது கட்டத்தினை பகுப்பாய்வு செய்வதாக உள்ளது. கடந்த ஆண்டின் போது நடத்தப்பட்ட புள்ளிவிவர மற்றும் வெளியிடப்பட்டுள்ள ஆக்கங்கள் குறித்த மதிப்பீட்டாய்வினையே இது அடிப்படை யாகக் கொண்டுள்ளது. பொருள் வழங்குனர் என்ற முறையில் ஜப்பானின் வெ. நே. மு. ன் வளர்ச்சி மாதிரியைக் கண்டறிவதும், கேள்வியை எடுத்து வருபவர் என்ற முறையில் ஆசியாவுக்குள் அது பெற்றுள்ள சார்பு ரீதியான முக்கி யத்துவத்தை கண்டறிவதும் இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். இந்த இரு நாடுகளினதும் மொத்த வெளிநாட்டு முதலீடு தொடர்பாக ஜப்பான் வெ. நே. மு. ன் உள்ளடக்கம் மற்றும் கட்டமைப்பு என்பன குறித்த பொதுவான குணாம்சங்களைப் பரிசீலனை செய்வ தற்கு இங்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப் படும். என்வாறெனினும், ஜப்பானின் காலனித்துவ முதலீடுகள் மற்றும் பூரண மான இடம் குறிக்கும் தன்மைகொண்ட நேரடி வெளிநாட்டு முதலீடுகள் என்பன இங்கு சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

## ஜப்பானின் கடல்கடந்த வெ. நே. மு.

உலகின் பல்வேறு நாடுகளுக்குமான ஜப்பானிய முதலீடுகளின் உட்பாய்ச்சல் 1950 களின் நடுப்பகுதியில் ஆரம்ப மாகி, சிறு அளவு மூலதனங்களாக சென்றுகொண்டிருந்தது. இது கடந்த நான்கு தசாப்த காலத்தின்போது – குறிப்பாக 1970 களிலும் 1980 களிலும் – மிகப் பிரமாண்டமான அளவில் அதி கரித்துச் சென்றது. உள்நாட்டில் உள்நாட்டு முலதனத்தின் படிப்படியான அபிவிருத்தி, சர்வதேச வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு மூலவளங்கள் என்பவற்றில் அது அதிகரித்த அளவுக்குத் தங்கியிருந் தமை என்பவற்றின் விளைவாக ஜப்பா னின் மூலதனத்தின் இக்கடல் கடந்த நகர்வு ஏற்படத்தொடங்கியது. முக்கிய மாக கடந்த இரண்டு தசாப்த காலத் தின்போது ஆசிய நாடுகளில் ஜப்பானின் மூலதன முதலீடுகள் செங்குத்தாக அதிகரித்துச் சென்றுள்ளன. இது ஆசியா வில் பொருளாதார அபிவிருத்தி குறித்த கலந்துரையாடலில் முக்கியமான ஓர் அரசியல் பிரச்சினையாக எழுச்சி யடைந்து வந்துள்ளது மட்டுமன்றி, ஜப்பானிலும் அதேபோல உதவிபெறும் நாடுகளிலுமுள்ள கல்விமான்களிடையே கலந்துரையாடப்படும் விடயமொன்றாக வும் படிப்படியாக மாற்றம் கண்டுள்ளது. இது தொடர்பான ஜப்பானின் ஆய்வு நடவடிக்கை முயற்சிகள், நடு 1970 களிலும் 1970 களின் பிற்பகுதியிலும் தோன்றின. இந்த ஆய்வு நடவடிக்கை கள், தவிர்க்க முடியாத வகையில், அந்தத் தசாப்தத்தின் குறித்துரைக்கப் பட்ட குணாம்சங்களை பிரதிபலிப்பன வாக இருந்தன. இந்தத் தசாப்தத்தின் போது இடம்பெற்ற ஜப்பானின் வெ. நே. மு. மூலவளங்களைப் பிரித்தெடுத்தல், முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளும் நாடு களின் இறக்குமதிப் பிரதியீட்டுப் பொருள் உற்பத்தி, ஜப்பானின் முதன்மை உற்பத்தியாளர்களுக்கு அவசியமான துணை உறுப்புக்களையும் கூறுகளையும் தயார் செய்தல் என்பவற்றிலேயே பெருமளவுக்குக் கவனம் செலுத்தியது. ஆனால், 1980 களின்போது ஜப் பானிய முதலீட்டின் இந்தக் குணாம்சங் கள் அளவிலும் இயல்பிலும் பாரிய மாற்றங்களைக் கண்டன. அந்தக் காலத் தில் ஏற்றுமதி நோக்கிலான நிறுவனங் களின் கை ஓங்கத் தொடங்கியது. அதே வேளையில், உதவிபெறும் நாடுகளைப் பொறுத்தவரையில், ஜப்பானின் வெ. நே. முதலீட்டுக்கும் உதவிபெறும் நாட்டின் பொருளாதாரத்துக்கும் இடையே காணப்படும் முன்னணி மற்றும் பின்னணி பிணைப்புக்கள் குறித்துப் பகுப்பாய்வு செய்வதில் பல பொருளிய லாளர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொண் டனர். இவர்கள் ஆசியாவின் புதிதாக தொழில் வளர்ச்சி கண்ட நாடுகள் மற்றும் ஏஷியன் அமைப்பைச் சேர்ந்த நாடுகள் என்பவற்றின் பொருளாதாரங்களின் அனுபவங்கள் மீது அதிகளவுக்குக் கவனம் செலுத்தினர்.

ஆசியப் பிராந்தியத்துக்கான ஜப் பானின் வெ. நே. மு. ன் உட்பாய்ச்சல் இரண்டு முக்கிய காரணிகளின் மாறி வரும் தன்மைக்கேற்ப இடம்பெற்று வந்துள்ளது. முதலீட்டினை வேண்டி நிற்கும் நாட்டின் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை, மனித மற்றும் பொருள்சார் மூலவளங்களின் கிடைக்கும் தன்மை, உள்நாட்டு

முதலாளித்துவத் துறையின் நிலை, வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான பொருளாதாரக் கொள்கை, வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்புக்கான அளவு என்பன இதில் முதலாவது காரணியாக உள்ளது. ஜப்பானின் வழங்கல் பக்கத்தின் பொருளாதாரச் சூழ்நிலையின் இயல்பு இரண்டாவது காரணியாகும். வழங்கல் பக்கத்தை பொறுத்தவரையில் ஆசிய பிராந்தியத்தில் ஜப்பானிய முதலீட்டை மூன்று முக்கியமான காரணங்கள் தூண்டிவிட்டுள்ளன: (அ) உள்நாட்டில் ஏற்கனவே ஒன்று திரட்டிக் கொள்ளப்பட்டிருந்த கைத்தொழில் மூலதனத்தை மேலும் ஒன்று திரட்டுவதில் காணப்பட்ட இடையூறுகள், மேலும் பொருட்குவிப்புக்கென வெளிநாட்டு அமைவிடங்களை அவசியப்படுத்தின. மூலப்பொருட்களின் பற்றாக்குறை, கூடிய உற்பத்திச் செலவு – குறிப்பாக ஊழியச் செலவின் அதிகரிப்பு–சுற்றுச் சூழல் தொடர்பான கடுமையான விதிமுறைகள் மற்றும் இரு எண்ணெய் அதிர்ச்சிகள் என்பவற்றின் காரணமாக உள்நாட்டில் ஜப்பானின் தயார் செய்யப்பட்ட பொருட்களுக்கான போட்டி அனுகூலம் படிப்படியாக இழக்கப்பட்டுக் கொண்டு வந்ததெனக் கூறப்பட்டது. (ஆ) ஜப்பானியப் பொருளாதாரத்தின் நிதி நிலைமையின் நிலைமாற்றம், யென்னின் பெறுமதியேற்றம், மூலதன வெளிப்பாய்ச்சல்களின் தாராளமயமாக்கல், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சமூகம் என்பவற்றுடனான வர்த்தக மோதல்கள் அல்லது ஜப்பானுக்கெதிராக வளர்ச்சி கண்ட நாடுகளினால் விதிக்கப்பட்ட தீர்வைகள், கோட்டாக்கள் என்பன தொடர்பான கட்டுப்பாடுகள் என்பனவாகும். யென்னின் பெறுமதியேற்றம், அதன் விளைவான விலை அதிகரிப்பு காரணமாக சர்வதேச சந்தைகளில் ஜப்பானியப் பொருட்களுக்கான கேள்வியைக் குறைத்துவிட்டது. இங்கும் கூட ஜப்பானிலேயே உற்பத்தி செய்யப்பட்ட ஜப்பானிய உற்பத்திப் பொருட்கள் தொடர்பான ஒப்பீட்டு அனுகூலம் குறைந்தளவுக்கே காணப்பட்டது. (இ) ஜப்பானிப் பொருளாதாரத்திலேற்பட்ட கட்டமைப்பு ரீதியான மாற்றம்; கைத்தொழில்கள் ஊழியச் செறிவுமிக்கவையாக இருந்து மூலதனச் செறிவுமிக்கவையாக மாற்றமடைந்ததுடன் இணைந்த வகையில் இந்தக் கட்டமைப்பு மாற்றம் ஏற்பட்டது.

உலகின் பிரதான பிராந்தியங்களில் கடந்த நான்கு தசாப்த காலத்தின்போது ஏற்பட்டு வந்துள்ள ஜப்பானின் வெ. நே. மு. ன் வளர்ச்சி மாதிரி அட்டவணை 1ல் தரப்பட்டுள்ளது. ஜப்பானின் கடல் கடந்த முதலீடு படிப்படியாக அதிகரித்து வந்துள்ளதனை இத்தரவுகள் காட்டுகின்றன. ஜப்பானியப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட அமைப்பு ரீதியான மாற்றம் மற்றும் முன்னர் எடுத்துக்காட்டப்பட்ட பிரதான காரணிகள் என்பவற்றுடன் இவை மிக நெருக்கமாக சம்பந்தப்பட்டுள்ளன. 1951–70 இரு தசாப்த காலத்துக்கான ஜப்பானின் கூட்டு வெ. நே. மு. 339.3 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது. இது 1971–80 தசாப்தத்தின்போது சரியாகப் பத்து மடங்கினால் பெருகியிருந்தது. மீண்டும் 1981–90 தசாப்தத்தின் போது இது மேலும் எட்டு மடங்கினால் பெருகியிருந்தது. எனினும், 1990ல், ஜப்பானின் கடல்கடந்த முதலீடு தொடர்பான இந்த ஏறுமுகப்போக்கு மொத்த மூலதன அசைவுகளின் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்பொழுது 16 சதவீதமாக வீழ்ச்சி கண்டிருந்தது மட்டுமன்றி, செய்திட்டங்களின் எண்ணிக்கையை பொருத்தவரையிலும் 11 சதவீத வீழ்ச்சி இடம்பெற்றிருந்தது. இது, கடந்த தசாப்தத்தின் போது ஏற்பட்ட ஜப்பானின் வெ. நே. மு. உட்பாய்ச்சல்கள் தொடர்பாக வழமைக்கு மாறான ஓர் அம்சமாகவுள்ளது.

ஆசியப் பொருளாதாரங்களுக்குள் துரிதமாகப் பாய்ச்சப்பட்டுவரும் ஜப்பானின் வெ. நே. மு. குறித்து நாங்கள் இங்கு அதிகளவுக்கு வலியுறுத்திக் கூறியுள்ள போதிலும், இது மொத்த நிதிப்பாய்ச்சலில் 12 சதவீதமாக மட்டுமே இருந்து வருகின்றது என்பதனை இங்கு சுட்டிக் காட்டுதல் வேண்டும். மேலும், அது இப்பொழுது ஓர் இறங்குமுகமான போக்கினையும் காட்டிக் கொண்டிருக்கின்றது. உதாரணமாக, 1981 வரையில் ஆசியா மீதான ஜப்பானின் வெ. நே. மு. 40 சதவீதமாக மட்டுமே இருந்து

அட்டவணை 1

முக்கியமான பிராந்தியங்களில் ஜப்பானின் நேரடி வெளிநாட்டு முதலீடு 1951–1990 (அலகு அ. டொலர் 10 இலட்சம் %)

| | 1951–60 | 1961–70 | 1971–80 | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வட அமெரிக்கா: | | | | | | | | | | | | | |
| தொகை | 88 | 824 | 8886 | 2522 | 2905 | 2701 | 3544 | 5495 | 10441 | 15357 | 22328 | 33902 | 27192 |
| பங்கு | 39 | 26 | 27 | 28 | 38 | 33 | 35 | 45 | 47 | 46 | 48 | 50 | 48 |
| மத்திய, தென் அமெரிக்கா | | | | | | | | | | | | | |
| தொகை | 85 | 481 | 5601 | 1181 | 1503 | 1878 | 2290 | 2616 | 4737 | 4816 | 6428 | 5238 | 3628 |
| பங்கு | 37 | 15 | 17 | 13 | 20 | 23 | 23 | 21 | 21 | 14 | 14 | 8 | 6 |
| மத்திய கிழக்கு | | | | | | | | | | | | | |
| தொகை | 1 | 150 | 1925 | 96 | 124 | 175 | 273 | 45 | 44 | 62 | 259 | 66 | 27 |
| பங்கு | 0.4 | 5 | 6 | 1 | 2 | 2 | 3 | 0.4 | 0.2 | 0.2 | 1 | 0.1 | 0.0 |
| ஐரோப்பா | | | | | | | | | | | | | |
| தொகை | 3 | 636 | 3831 | 798 | 676 | 990 | 1937 | 1930 | 3469 | 6576 | 9116 | 14808 | 14294 |
| பங்கு | 1 | 20 | 12 | 9 | 9 | 12 | 19 | 16 | 16 | 20 | 20 | 22 | 25 |
| ஆசியா | | | | | | | | | | | | | |
| தொகை | 49 | 703 | 9081 | 3338 | 1384 | 1847 | 1628 | 1435 | 2327 | 4868 | 5569 | 8238 | 7054 |
| பங்கு | 22 | 22 | 28 | 38 | 18 | 23 | 16 | 12 | 10 | 15 | 12 | 12 | 12 |
| ஆபிரிக்கா | | | | | | | | | | | | | |
| தொகை | 1 | 91 | 1352 | 573 | 489 | 364 | 326 | 172 | 309 | 272 | 653 | 671 | 531 |
| பங்கு | 0.4 | 3 | 4 | 6 | 6 | 5 | 3 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 |
| ஓஷானியா | | | | | | | | | | | | | |
| தொகை | 2 | 279 | 2276 | 424 | 421 | 191 | 157 | 525 | 992 | 1413 | 2669 | 4618 | 4166 |
| பங்கு | 1 | 9 | 7 | 5 | 6 | 2 | 2 | 4 | 4 | 4 | 6 | 7 | 7 |
| மொத்தம் | 228 | 3165 | 32919 | 8931 | 7703 | 8145 | 10155 | 12217 | 22320 | 33364 | 47022 | 67540 | 56911 |

வந்தது. கடந்த ஐந்தாண்டு காலத்தின் போது இது வீழ்ச்சியடையத் தொடங்கி, சுமார் 12 சதவீதத்தில் நிலைத்து வந்துள்ளது. எனினும், ஆசியா மீதான ஜப்பானின் 1951–90 காலப் பிரிவுக்கான கூட்டுமொத்த முதலீட்டினை நாம் கவனத்திலெடுக்கும் பொழுது, அது மொத்தக் கடல்கடந்த மூலதனம் மற்றும் நிறுவனங்கள் என்பன தொடர்பாக முறையே 15 சதவிகிதமாகவும் 30 சதவிகிதமாகவும் இருந்து வந்துள்ளதைக் காணமுடிகின்றது. பெரும் எண்ணிக்கையிலான நிறுவனங்கள் (18,634) ஆசியப் பிராந்தியத்தில் சார்புரீதியில் குறைந்த மூலதனத்துடன் செயற்பட்டு வருகின்றன என்பதனையே இது காட்டுகின்றது.

தற்பொழுது ஜப்பானின் மொத்த வெ.நே.மு. ல் சுமார் 75 சதவிகிதம் வடஅமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் பாய்ச்சப்பட்டு வருகின்றது. இது 1960 களிலும் 1970 களிலும் முறையே 46 சதவிகிதமாகவும், 39 சதவிகிதமாகவும் இருந்தது. இது, ஜப்பானிய முதலீட்டாளர்கள் முதலீட்டு நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளைத் தெரிவுசெய்து கொள்ளும்பொழுது, குறிப்பிட்ட நாட்டின் குறைந்த கூலி விகிதங்கள் மற்றும் கிடைக்கக்கூடியதாக இருக்கும் ஊக்குவிப்புக்கள் என்பவற்றிலும் பார்க்க, இன்னமும், பிரஸ்தாப நாட்டின் பொருளாதார நிலைமைகளையே கவனத்தில் எடுத்துவருகிறார்கள் என்பதனை காட்டுகிறது. இதற்கான பிரதான காரணம், பெருமளவுக்கு உள்நாட்டு மூலதனம் காணப்படும் நாடுகளில் கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஜப்பானிய நிறுவனங்கள் விருப்பம் கொண்டிருப்பதாகும். இந்த வகையில் வட அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய பிராந்தியங்கள் அதிகளவுக்கு வளர்ச்சி கண்டவையாக இருந்து வருவது மட்டுமன்றி, கணிசமான அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ள கைத்தொழில் சூழல் ஒன்றையும் கொண்டுள்ளன. அதாவது, இப்பிராந்தியங்களில் மனித மற்றும் பொருள் சார் மூலவளங்கள் சமூக பொதுக்கட்டமைப்பு வசதிகள் என்பன காணப்படுவதுடன், உள்நாட்டுச் சந்தையும் பெருமளவுக்கு அபிவிருத்தியடைந்துள்ளது. ஜப்பானிய முதலீட்டாளர்களுக்கு பெருமளவுக்கு அனுகூலமான இக்காரணிகள் ஆசிய வளர்முக நாடுகளில் போதிய ளவுக்குக் காணப்படவில்லை.

ஜப்பானின் வெ.நே.மு. குறித்த மற்றொரு அம்சம், நடவடிக்கைவாரியாக கடந்த நான்கு தசாப்தகாலத்தின்போது அது எத்தகைய கணிசமான மாற்றங்களையும் காட்டவில்லையென்பதாகும். எவ்வாறிருப்பினும், 1971–80 கால கட்டத்தின் போது வடஅமெரிக்காவிலும் ஆசியாவிலும் பொருள் உற்பத்தி சார்ந்த நடவடிக்கைகளும், பொருள் உற்பத்தி சாரா நடவடிக்கைகளும் கணசமான அளவுக்கு அதிகரித்திருந்தன. ஆசியாவில் பொருள் உற்பத்தித்துறை மீதான முதலீட்டின் பங்கு 1971-80 காலப்பிரிவில் 13 சதவிகிதமாக இருந்து, 1981-90 காலப்பகுதியில் 5 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தபோதிலும், முதலீடுகளின் அளவு மூன்று மடங்குக்கும் அதிகமாக பெருகியிருந்தது.

## ஆசியாவில் ஜப்பானின் வெ.நே.மு. ன் வளர்ச்சி மாதிரி

ஆசிய நாடுகளில் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் ஜப்பானிய முதலீடு, உள்நாட்டு முதலீட்டின் இன்னமும் ஒரு சிறு பாகத்தினையே கொண்டிருந்த போதிலும் (சிங்கப்பூர் மட்டும் இதற்கு விதிவிலக்காகும்) 1980 களில் ஆசியாவில்—குறிப்பாக ஏஷியன் அமைப்பு நாடுகளில்-அபிவிருத்திக் கொள்கைகளில் ஜப்பானின் வெ.நே.மு. மிக முக்கியமான அரசியல் பிரச்சினையொன்றாக தலையெடுத்தது. இந்நாடுகளில் ஜப்பானிய முதலீடுகள் அதிகரித்துச் சென்றதுடன் இணைந்த வகையில், மேலைத்தேய நாடுகளின் – குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் – முதலீடு படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. ஜப்பானின் நிறுவனங்கள் அண்மைக் காலத்தில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, ஏற்றுமதி நோக்கிலான பொருள் உற்பத்தித் துறைகளை முடுக்கிவிட்டிருப்பதனால், தமது கைத்தொழில்மயமாக்கல் நடவடிக்கைகளில் ஜப்பானின் வெ.நே.மு. மிக முக்கியமான ஒரு பங்கினை வகித்துவர முடியுமென்று பல ஆசிய நாடுகள் கருதுகின்றன.

அட்டவணை 3, ஆசிய நாடுகளில் ஜப்பானிய வெ.நே.மு. ன் பகிர்வினை, ஆசியக் கண்டத்தில் முதலீடு செய்யப்பட்ட ஜப்பானிய மூலதனத்தின் வளர்ச்சிப் போக்கினை விளங்கிக் கொள்வதற்கு வசதி செய்யும் வகையில், நாடு வாரியாகவும் பிராந்திய வாரியாகவும் வெவ்வேறாக எடுத்துக்காட்டுகிறது. 'நான்கு வேங்கைகள்' என்றழைக்கப்படும் ஆசியாவின் புதிதாக தொழில் வளர்ச்சி கண்ட நாடுகளிலும் ஏஷியன் அமைப்பு நாடுகளிலும் 1950-90 (1987 தவிர) காலப்பிரிவின் போது ஜப்பானின் வெ.நே.மு. ன் 90 சதவிகிதத்துக்கும் கூடிய பகுதி திரண்டிருந்தது. இந்த வகையில், தென்னாசியாவும் ஏனைய நாடுகளும் மிக அற்பமான ஒரு நிலையிலேயே இருந்து வந்தன. தென்னாசியாவின் நான்கு பிரதான நாடுகளான பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளுக்கு 1980 களில் (1983 தவிர) வழிப்படுத்தப்பட்ட ஜப்பானிய மூலதனத்தின் பங்கு இரண்டு சதவிகிதத்துக்கும் குறைவானதாகவே இருந்தது. ஆசியப் பிராந்தியத்தை

அட்டவணை 2

ஜப்பானின் நேரடி வெளிநாட்டு முதலீடு – துறைவாரியாக (அலகு: அ.டொ. பத். இலட். %)

| | பொருளுற்பத்தி | | | | | | பொருளுற்பத்தி அல்லாதவை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1951-70 | | 1971-80 | | 1981-90 | | 1951-70 | | 1971-80 | | 1981-90 | |
| | தொகை | பங்கு | தொகை | பங்கு | தொகை | பங்கு | தொகை | பங்கு | தொகை | பங்கு | தொகை | பங்கு |
| வட அமெரிக்கா | 217 | 6.1 | 2,212 | 6.7 | 37,893 | 14.1 | 694 | 19.4 | 6,676 | 20.3 | 86,921 | 32.4 |
| மத்., தென் அமெரிக்கா | 275 | 7.7 | 2,505 | 7.6 | 3,491 | 1.3 | 292 | 8.2 | 3,097 | 9.4 | 30,743 | 11.5 |
| ஆசியா | 320 | 9.0 | 4,248 | 12.9 | 14,091 | 5.3 | 430 | 12.0 | 4,830 | 14.7 | 22,814 | 8.5 |
| ஐரோப்பா | 36 | 1.0 | 808 | 2.5 | 11,696 | 4.4 | 803 | 16.9 | 3,024 | 9.2 | 41,061 | 15.3 |
| ஏனையன | 82 | 2.3 | 1,867 | 5.7 | 1,861 | 0.7 | 626 | 17.5 | 3,653 | 11.1 | 17,672 | 6.6 |
| மொத்தம் | 930 | 26.1 | 11,640 | 35.4 | 69,032 | 25.8 | 2,645 | 74.0 | 21,280 | 64.6 | 199,211 | 74.3 |

ஆதாரம்: லக்ஷ்மன், டப்.டி., சமூக விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த வெளியீடு, மார்ச் 1991, ருயுகோகு பல்கலைக்கழகம், ஜப்பான்.

நோக்கிய ஜப்பானிய மூலதனத்தின் சமச்சீரற்ற இந்தப் பாய்ச்சல்கள், அவை முதலீட்டினைப் பெறும் நாட்டின் மூலவள ஆற்றல் மற்றும் பொருளாதார நிலைமை என்பவற்றை குறிப்பாக, பின்பற்றிச் செல்வதையும், அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் ஏனைய காரணிகள் என்பவற்றை பொதுவில் கவனத்திலெடுத்து வருவ தனையும் காட்டுகிறது. உதாரணமாக, ஏஷியன் அமைப்பு நாடுகள் மீதான — குறிப்பாக இந்தோனேஷியா மீதான — மொத்த ஜப்பானிய முதலீட்டின் பெரும் பகுதி மூலவளங்களை அடிப்படையாகக் கொண்ட செய்திட்டங்களிலோ அல்லது மூலவளங்களைப் பிரித்தெடுக்கும் செய் திட்டங்களிலோ ஒன்றுதிரண்டிருந்தன. 1985 வரையில் ஜப்பானிய மூலதனத் தைப் பெற்றுக் கொண்ட ஏஷியன் அமைப்பு நாடுகளில் இந்தோனேஷி யாவே மிக முக்கியமான நாடுகளில் ஒன்றாக இருந்து வந்தது. இந்நாடு பல்வேறு மூலவளங்கள் தொடர்பாகவும் வளமார்ந்த ஒரு நாடு என்பது நன்கு அறியப்பட்டுள்ளது. எனவே, ஜப்பானிய நிறுவனங்கள் பெரும்பாலான சந்தர்ப்பங் களில், சார்பு ரீதியில் அபிவிருத்தி யடைந்துள்ள ஆசிய நாடுகளை நோக் கியே நகர்ந்து செல்கின்றன. குறைந்த பொருளாதார செயற்பாட்டு மட்டத் தினையும், மூலவளப் பற்றாக்குறையை யும் கொண்டுள்ள பிலிப்பைன்ஸ் மற்றும் தென்னாசியா ஆகிய பிராந்தியங்களில் ஜப்பானிய முதலீடுகள் குறைந்த மட்டத் தில் நிலவிவருவதற்கு இதுவே காரண மாகும். எனவே பெரும்பாலான ஜப்பா னிய நிறுவனங்கள், முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளும் நாட்டின் நிபந்தனை யற்ற பொருளாதார அனுகூலங்கள் போன்ற வெளிநாட்டு முதலீட்டினை நோக்கிய பொருளாதாரக் கொள்கை களிலும் பார்க்க, அந்நாடுகளின் பொரு ளாதார நிலைமைகளையே பெருமள வுக்குக் கவனத்திலெடுத்து வருகின்றன என்பது தெரிகிறது. உதாரணமாக, கடந்த மூன்றாண்டு காலத்தில் (1988—90) தாய்லாந்தை நோக்கி நகர்ந்து செல்லும் ஜப்பானிய மூலதனத் தின் பங்கு அதிகரித்து வந்துள்ளது என்பதனை லக்ஷ்மன் (1991) வலி யுறுத்தியுள்ளார். ஏஷியன் பிராந்தியத் தில் தாய்லாந்து ஆகக்கூடிய வளர்ச்சி விகிதத்தைக் கொண்டிருந்தது என்பதே இதற்கான காரணமாகும். 1990 ல் தாய்லாந்தில் ஜப்பானிய மூலதனத்தின் பங்கு ஆக உயர்ந்த மட்டத்தில் நிலவி வந்ததுடன், அது ஹொங்கொங்கின் மட்டத்திற்கு மட்டுமே இரண்டாவதான தாக இருந்தது. இது தவிர கூட்டுமுயற்சி களுக்காக உள்நாட்டு மூலதனம் கிடைக்கக் கூடியதாக இருந்தமை, தாய்லாந்தில் ஜப்பானிய மூலதனத்தின் மிகத்துரித அளவிலான பெருக்கத்துக்கு வழி கோலியது. பொதுவாக பெரும்பாலான ஜப்பானிய நிறுவனங்கள் முற்றிலும் உரித்துக் கொண்ட துணை நிறுவனங் களிலும் பார்க்க கூட்டுமுயற்சிகளையே அதிகளவுக்கு விரும்புகின்றன. மிகச் சிறு அளவிலான கூட்டுமுயற்சிகளைக் கூட அவை விரும்புகின்றன. இந்த நாடுகள் உள்நாட்டு முதலாளித்துவ பிரிவினை கணிசமான அளவுக்கு அபி விருத்தி செய்து கொண்டிருந்தமையால் ஜப்பானிய நிறுவனங்களுக்கு உசிதமான தேவைப்பாடுகள் கிடைக்கக்கூடியவை யாக இருந்து வந்திருக்க முடியும்.

ஜப்பானிய நிறுவனங்கள் மற்றும் முதலீட்டினைப் பெற்றுக்கொள்ளும் நிறுவனங்கள் என்பவற்றின் நடவடிக்கை களின் இயல்பினை விளங்கிக் கொள்வ தற்கும், ஜப்பானிய உற்பத்திப் பொருட் களின் சர்வதேச ஒப்பீட்டு அனுகூலத்தின் மாறிவரும் போக்குகளை விளங்கிக் கொள்வதற்கும் கடந்த நான்கு தசாப்த காலத்தில் ஜப்பானிய வெ.நே.மு. ன் கைத்தொழில் அடிப்படையிலான பகிர் வினையும், அதில் ஏற்பட்டுவந்துள்ள மாற்றங்களையும் அறிந்து கொள்வது முக்கியமாகும். அட்டவணை 4. கைத் தொழில் அடிப்படையில் ஜப்பானின் வெ.நே.மு. ன் பகிர்வு தொடர்பான தரவுகளைத் தருகின்றது. முதல் இரண்டு தசாப்த காலகட்டங்களின்போது (1951-70) ஆசியப் பொருள் உற்பத்தித் துறைமீது முடக்கப்பட்ட மொத்த ஜப்பானிய முதலீட்டில் புடவை வகைகள், மின்சார/இலத்திரனியல் உப கரணங்கள், இரும்பு மற்றும் உருக்கு என்பன 58 சதவீதமான பங்கினைப் பெற்றிருந்தன. ஆனால், 1970 களில் இந்த முதல் இரு வகைகளும் செங்குத்தாக வீழ்ச்சியடைந்ததுடன், இரும்பு உருக்கு மற்றும் உலோகங்கள் என்பன முக்கிய

அட்டவணை 3

ஆசிய நாடுகள் மீதான ஜப்பானின் மொத்த முதலீடு: சதவீத பகிர்வு 1951—1990

| பிராந்தியம் | 1951-70 | 1971-80 | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கிழக்காசியா: | 19.5 | 27.0 | 13.7 | 41.5 | 43.2 | 42.9 | 33.1 | 62.5 | 68.1 | 50.6 | 41.7 | 40.5 |
| சீனா | – | – | – | 1.3 | 0.2 | 7.0 | 6.9 | 9.7 | 25.2 | 5.3 | 5.3 | 4.9 |
| ஹொங்கொங் | 3.8 | 11.7 | 9.9 | 28.8 | 30.4 | 25.3 | 9.0 | 21.6 | 22.1 | 29.9 | 23.0 | 25.3 |
| கொரியக் குடியரசு | 4.4 | 12.2 | 2.2 | 7.4 | 7.0 | 6.6 | 9.3 | 18.7 | 13.3 | 8.7 | 7.4 | 4.0 |
| தாய்வான் | 11.3 | 3.1 | 1.6 | 4.0 | 5.6 | 4.0 | 7.9 | 12.5 | 7.5 | 6.7 | 6.0 | 6.3 |
| தென்கிழக்காசியா: | 76.5 | 72.1 | 85.0 | 57.8 | 52.8 | 55.8 | 84.7 | 36.8 | 31.3 | 48.7 | 57.0 | 58.0 |
| இந்தோனேஷியா | 31.9 | 46.0 | 72.9 | 29.6 | 20.2 | 22.9 | 28.2 | 10.7 | 11.2 | 10.5 | 7.7 | 15.7 |
| மலேசியா | 6.5 | 6.6 | 0.9 | 6.0 | 7.8 | 8.7 | 5.5 | 6.8 | 3.3 | 7.0 | 8.2 | 10.3 |
| பிலிப்பைன்ஸ் | 9.8 | 6.0 | 2.2 | 2.5 | 3.5 | 2.8 | 4.2 | 0.9 | 1.5 | 2.4 | 2.5 | 3.7 |
| சிங்கப்பூர் | 5.0 | 10.0 | 8.0 | 13.0 | 17.4 | 13.8 | 23.4 | 13.0 | 10.2 | 13.4 | 23.1 | 11.9 |
| தாய்லாந்து | 12.0 | 3.4 | 0.9 | 6.8 | 3.9 | 7.3 | 3.3 | 5.3 | 5.1 | 15.4 | 15.5 | 16.4 |
| புருணை | 11.3 | 0.1 | 0.1 | – | 0.1 | 0.3 | 0.1 | 0.1 | – | – | – | – |
| தென்னாசியா: | 4.0 | 0.9 | 1.3 | 0.7 | 4.1 | 1.3 | 2.3 | 0.7 | 0.6 | 0.7 | 1.4 | 1.5 |
| இந்தியா | 1.8 | 0.3 | 0.5 | 0.2 | – | – | 0.9 | 0.5 | 0.4 | 0.4 | 0.2 | 0.4 |
| ஏனையன | 2.2 | 0.6 | 0.8 | 0.5 | 4.1 | 1.3 | 1.4 | 0.2 | 0.2 | 0.3 | 1.2 | 1.1 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| ஏஷியன் (a) | 65.2 | 72.0 | 84.9 | 57.9 | 52.8 | 55.5 | 64.6 | 36.7 | 31.3 | 48.7 | 57.0 | 58.0 |
| பு.தொ.வ.நா. (b) | 24.5 | 37.0 | 21.7 | 53.2 | 60.4 | 49.7 | 49.6 | 65.8 | 53.1 | 58.7 | 59.5 | 47.5 |

குறிப்பு:

(a) இந்தோனேஷியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து

(b) ஹொங்கொங், தென் கொரியா, சிங்கப்பூர், தாய்வான்.

அட்டவணை 4

ஆசியாவின் பொருளுற்பத்தித்துறையில் ஜப்பானிய வெ. நே. மு. ன் பகிர்வு மாதிரி (%)

| நடவடிக்கை | 1951-70 | 1971-80 | 1981-90 |
|---|---|---|---|
| உணவு | 7.2 | 2.9 | 7.2 |
| புடவை | 33.4 | 19.1 | 6.7 |
| பலகையும் மரக்கூழும் | 4.7 | 3.0 | 2.7 |
| இரசாயனப் பொருட்கள் | 5.9 | 16.5 | 13.6 |
| இரும்பு/ உருக்கு | 10.6 | 23.5 | 12.6 |
| இயந்திரம் | 4.7 | 6.1 | 9.8 |
| மின்சார/ இலத்திரனியல் உபகரணங்கள் | 14.1 | 11.7 | 25.8 |
| போக்குவரத்து உப கரணங்கள் | 4.4 | 5.9 | 10.2 |
| ஏனையன | 15.0 | 11.2 | 11.4 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 |

மான கைத்தொழில் துறையாக எழுச்சியடைந்தது. இவை மொத்த முதலீட்டில் காற்பகுதிக்கு பங்களிப்புச் செய்தன. இந்த மாற்றங்கள் — குறிப்பாக பிரதான உற்பத்திப் பொருளாக இரசாயனப் பொருட்கள் முன்னணிக்கு வந்தமையும் வேறுசில உற்பத்திப் பொருட்களின் பங்கில் ஏற்பட்ட வீழ்ச்சியும்—ஜப்பானிய நிறுவனங்கள் 1970 களில் உள்நாட்டிலும் சர்வதேச சந்தையிலும் எதிர் கொண்டுவந்த பிரச்சினைகளை எடுத்துக் காட்டுவனவாக உள்ளன. ஜப்பானின் கனரக கைத்தொழில்கள், பிரதானமாக மூலப்பொருட் செலவு அதிரிப்பினையும், ஆசியாவின் புதிதாக தொழில் வளர்ச்சி கண்டுவந்த நாடுகளிலிருந்து வந்த போட்டியையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆசியாவின் புதிதாக தொழில் வளர்ச்சி கண்ட நாடுகள், இத்தகைய பொருட்களை, சர்வதேச சந்தைக்கென குறைந்த உற்பத்திச் செலவு மட்டத்தில் உற்பத்தி செய்துகொண்டிருந்தன. இந்த இரு காரணிகளும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஜப்பானியப் பொருட்கள் பெற்றிருந்த ஒப்பீட்டு அனுகூல நிலை வீழ்ச்சியடைவதற்கு வழிகோலி, அதன்மூலம் உற்பத்திக் கட்டமைப்பினை மாற்றியமைத்தன. எவ்வாறிருப்பினும், ஜப்பானிய நிறுவனங்கள், வலுவினைச் சேமிக்கக்கூடிய புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்தியதன் மூலமும், அரசு துறையினாலும் தனியார் துறையினாலும் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி, அபிவிருத்தி முயற்சியின் கீழ் புதிய உற்பத்திப் பொருட்களை விருத்தி செய்துகொண்டதன் மூலமும் இப்பிரச்சினைகளை வெற்றிகொண்டன.

கடந்த தசாப்தத்தில் (1981-90) மின்சார/இலத்திரனியல் உபகரண உற்பத்தித்துறை முன்னணி உற்பத்திப் பிரிவாக எழுச்சி கண்டது. இந்தத்துறை மொத்த உற்பத்திகளின் நான்கில் ஒரு பகுதிக்கும் கூடுதலானதாக இருந்தது.

அதேவேளையில், போக்குவரத்து உபகரணம் மற்றும் இயந்திரங்கள் என்பவற்றின் பங்கு கணிசமான அளவுக்கு அதிகரித்ததுடன், புடவைகளின் பங்கில் மிகத்துரிதமான வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. இரசாயனப் பொருட்கள், இரும்பு மற்றும் உருக்கு/உலோகப் பொருட்கள், இயந்திரங்கள், மின்சார/இலத்திரனியல் உபகரணங்கள் ஆகிய ஐந்து உற்பத்திப் பொருட்களும் மொத்தப் பொருள் உற்பத்தித் துறையின் 72 சதவிகிதத்துக்குப் பொறுப்பாக இருந்தன. இந்த மாற்றங்கள் ஜப்பானிய நிறுவனங்கள் 1970 களில் எதிர்கொண்ட இதேமாதிரியிலான பிரச்சினைகளை எடுத்துக் காட்டுகின்றன. குறிப்பாக, யென் நாணயத்தின் பெறுமதி ஏற்றமும் ஊழியச் செலவின் அதிகரிப்பும் ஒப்பீட்டு அனுகூலத்தினை மிகத் தீவிரமாக இழந்து செல்லும் ஒரு நிலையை 1980 களின் போது எடுத்து வந்தன. இதன் விளைவாக ஜப்பானிய நிறுவனங்கள் தமது உற்பத்தி பிரிவுகளை மின்சார/இலத்திரனியல் உபகரணங்கள், இயந்திரங்கள், இரசாயனப் பொருட்கள் மற்றும் போக்குவரத்து உபகரணங்கள் போன்ற பிரிவுகளை நோக்கி நகர்த்திச் சென்றன. இந்த உற்பத்திப் பொருட்களில் ஜப்பான் அதன் ஒப்பீட்டு அனுகூலத்தினை இன்னமும் தக்கவைத்துக் கொண்டிருந்தது. இத்தகைய பொருட்களின் உற்பத்தி நிகழ்வுப்போக்குக்கு உயர்ந்த மட்டத்திலான தொழில்நுட்பத் தேர்ச்சி அவசியமாகும். ஆசியாவின் புதிதாக தொழில் வளர்ச்சி கண்ட நாடுகள் மற்றும் ஏஷியன் அமைப்பைச் சேர்ந்த நாடுகள் என்பவற்றின் நிறுவனங்களிடையே இந்த தொழில்நுட்பத்தேர்ச்சி மிகவும் குறைந்த மட்டங்களிலேயே நிலவிவந்தது. இது ஜப்பானிய நிறுவனங்கள் இப்பொருட்களின் உற்பத்தியை தொடர்ந்து மேற்கொண்டு வருவதற்கு உதவியாக இருந்ததுடன், அது பாரிய அளவில் ஒப்பீட்டு அனுகூல நிலையொன்றையும் அனுபவிப்பதற்கு வாய்ப்பளித்தது. எனினும், இரண்டாவதாக குறிப்பிடப்பட்ட இரு பிரிவு நாடுகளும் வெகுவிரைவில் ஜப்பானின் தொழில்நுட்பத்தரத்தினை எட்டிப் பிடிக்க இருப்பதனால் இந்த நிலைமை நீண்ட காலத்துக்கு மாற்றம் எதுவுமின்றி இருந்துவர முடியுமென்று கூறமுடியாது.

## இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் வெ. நே. மு.


கைத்தொழில் துறையில்—குறிப்பாக ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில் துறையில்—வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவிப்பது, இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் கைத்தொழில் துறையின் அபிவிருத்தியை நிதிப்படுத்துவதில் மிக முக்கியமான கொள்கைப் பிரச்சினையொன்றாக 1960 களின் தொடக்கம் இருந்து வந்துள்ளது. இந்தப் பின்னணியிலான கொள்கைத் தெரிவுகள், பிரதானமாக இறக்குமதிப் பதிலீட்டுக்கைத்தொழில்மயமாக்கல் மற்றும் ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில் மயமாக்கல் என்பவற்றைக் கொண்ட கட்டமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த முயற்சியின் போது, இந்த இரு நாடுகளும் எதிர்கொண்டிருந்த குறிப்பிட்ட சில சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் விஷயத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகள் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் மயமாக்கல் கொள்கையின் கீழ், (வெளிநாட்டு முதலீட்டினையும் உள்ளடக்கிய) முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான கட்டுக்கோப்பொன்றினை பிந்திய 1970 களிலும் 1980 ன் தொடக்கத்திலும் முறையே ஸ்தாபித்துக் கொண்டன. பொருளாதார அபிவிருத்தியை எடுத்து வருவதற்கான வழிமுறையொன்றாக உடனடியாக வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவிக்கும் அவசரத் தேவையை இந்த இரு நாடுகளும் ஒருபோதும் உணரவில்லை. எவ்வாறிருப்பினும், இந்த இரு நாடுகளும் உள்நாட்டு நிறுவனங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அவசியமான குறித்துரைக்கப்பட்ட சில ஒழுங்கு விதிகள் அல்லது வரையறைகள் என்பவற்றின்கீழ், வெளிநாட்டு நேரடி முதலீட்டினை ஊக்குவிப்பதற்கென பல்வேறுவகையான வசதிகளையும் சலுகைகளையும் வழங்கின. 1970 களின்

இறுதிப்பகுதியில் பாரிய கடன்சுமை, பேரளவிலான வர்த்தகப் பற்றாக்குறை மற்றும் ஏனைய சமூக-பொருளாதார நெருக்கடிகள் என்பவற்றை இவ்விரு நாடுகளும் எதிர்கொண்டிருந்தன. சார்பு ரீதியாக திறந்துவிடப்பட்டிருக்கும் பொருளாதார கட்டமைப்பொன்றின் கீழ் வெ. நே. முதலீட்டினை கவர்வதற்கென ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில் மயமாக்கல் கொள்கையின் அடிப்படையில் பல்வேறு ஊக்குவிப்புக்களையும் வசதிகளையும் இவை அறிமுகப்படுத்தின. முன்னைய கொள்கையின் கீழ் வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் எதிர்கொள்ளப்பட்டிருந்த கட்டுப்பாட்டு வரையறைகள் இந்த நிகழ்வுப்போக்கின் போது ஒழிக்கப்பட்டன. தற்பொழுது, வெளிநாட்டு முதலீடு தொடர்பாக திறந்த கதவுக் கொள்கையொன்றின் கீழ் பல்வேறு ஊக்குவிப்புக்களையும் வழங்குவதற்கூடாக இலங்கையும் தாய்லாந்தும் சார்புரீதியில் ஒத்த தன்மை கொண்ட கொள்கையொன்றைப் பின்பற்றி வருகின்றன.

இது தவிர, இந்த இரு நாடுகளும் வெளிநாட்டு முதலீட்டுக்கு உசிதமான குறித்துரைக்கப்பட்ட நிர்வாக வசதி வகைகள் சிலவற்றை அறிமுகம்செய்து வைத்துள்ளன. வெளிநாட்டு நேரடி முதலீடு தொடர்பான நிர்வாக முடிவுகளை எடுக்கும் நிகழ்வுப்போக்கினை மத்தியமயமாக்கும் நோக்குடனேயே இந்த மாற்றங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன. வெளிநாட்டு மூலதனம் தொடர்பான நிர்வாக அடிப்படையிலான சிவப்பு நாடாத்தாமதங்களை இது முடியுமான அளவுக்கு குறைத்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு மற்றும் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழு, தாய்லாந்தின் முதலீட்டு சபை என்பன வெளிநாட்டு முதலீட்டின் சம்பந்தப்பட்ட ஊக்குவிப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான முக்கியமான நிர்வாக அமைப்புக்களாக உள்ளன. தாய்லாந்தின் முதலீட்டுச் சபை, வெளிநாட்டு முதலீட்டின் அமைவிடம் மற்றும் நடவடிக்கைகள் என்பவற்றைக் கவனத்திலெடுக்காது வெளிநாட்டு முதலீடு தொடர்பான நிர்வாக விடயங்களைக் கையாண்டு வருகின்றது. எனினும், பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு

வரைபடம் 1
வெளிநாட்டு நேரடி முதலீடு தொடர்பான
சென்மதி நிலுவை தரவுகள்
(அலகு: ரூ. பத்து இலட்சம்)




ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி, ஆண்டறிக்கைகள்

வும் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவும் இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களுக்குள்ளும் அவற்றுக்கு வெள்யேயும் செயற்படுவரும் வெ. நே. மு. செய்திட்டங்கள் தொடர்பான ஊக்குவிப்பு மற்றும் நிர்வாக வேலைகளில் முறையே வெவ்வேறாக ஈடுபட்டு வருகின்றன. எனினும், பா. கொ. பொ. ஆ. குழு 1990 ஜனவரியில் வெ. நா. மு. ம. குழுவுடன் இணைந்து கொண்டதன் பின்னர் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குச் சேவைகளை வழங்கும் தனியொரு நிலையமாக மாற்றமடைந்தது. தற்பொழுது பா. கொ. பொ. ஆ. முதலீடுகளின் அமைவிடம் மற்றும் நடவடிக்கை வகை என்பவற்றை கவனத்திலெடுக்காது அனைத்து வெளிநாட்டு முதலீடுகளையும் கையாண்டு வருகின்றது.

## இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டின் போக்கு

இலங்கையை நோக்கிய உள்நோக்கிய வெளிநாட்டு முதலீட்டின் தோற்றம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்ட திட்டங்களுக்கென 19ம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இடம்பெற்றிருந்தபோதிலும் இந்த ஆய்வுக்கட்டுரை இக்கால கட்டத்தை உள்ளடக்கவில்லை. சுதந்திரத்துக்குப் பின்னர் (1948) இலங்கைக்குள் வந்த வெ. நே. மு. உட்பாய்ச்சல்களையே அது கவனத்திலெடுக்கின்றது. சுதந்திரத்தை யடுத்து வந்த இரண்டு தசாப்த காலத்தில் 1950 களிலும் 1960 களிலும் அரசாங்கம் வெளிநாட்டு முதலீடு தொடர்பாக சாதகமான ஒரு கொள்கையை பின்பற்றி வந்தமைக்கு மத்தியிலும்கூட வெளிநாட்டு முதலீடு தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துகொண்டே வந்தது. வரைபடம் 1, 1950 களிலும் 1960 களிலும் இலங்கையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகள் மிகத்துரிதமாக விலக்கிக் கொள்ளப்பட்ட விதத்தினை எடுத்துக் காட்டுகிறது. முதலீட்டு வெளிப்பாய்ச்சல் பிரதானமாக தேயிலை, இறப்பர் பெருந் தோட்டங்கள் தொடர்பாகவே இடம்பெற்று வந்தது. இது, சுதந்திரத்தினை அடுத்து வந்த 20 வருட காலத்தில் பொருளாதாரத்தின் ஏனைய துறைகளுக்கான முதலீட்டு உட்பாய்ச்சல்கள் மூலம் பிரதியீடு செய்யப்படவில்லை. முதலீடுகள்

இவ்விதம் மிகப் பிரமாண்டமான அளவில் விலக்கிக் கொள்ளப்பட்டமைக் கான காரணங்களை இனங்கண்டு கொள்வது கடினமானதாக உள்ளது. எனினும், பல்வேறு பொருளியலாளர் களும் இது தொடர்பாக வேறுபட்ட பல கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இதற்கு நான்கு பிரதான காரணங்கள் பொறுப்பாக இருந்தன என்று லக்ஷ்மன் சுட்டிக்காட்டியுள்ளார். (அ) இலங்கை யில் முதலீடு செய்யப்பட்டிருந்த வெளி நாட்டு பெருந்தோட்ட மூலதனத்துக்காக ஏனைய பிராந்தியங்களின் நாடுகளி லிருந்து வந்த தாக்கமான போட்டி, (ஆ) வெ.நே.மு. தொடர்பாக இலங்கை யின் கொள்கையில் காணப்பட்ட சில முரண்பாடுகள் (பொதுவாக வெ.நே. முதலீட்டினை ஊக்குவித்துவந்த அதே வேளையில் வெளிநாட்டு வர்த்தகத்தை உள்நாட்டுமயமாக்கிய கொள்கை); (இ) பல்வேறு தொழிலாளர் சட்டங்கள் போன்ற சமூக சட்டவாக்கங்கள் அதிகரித்த அளவுக்கு இடம்பெற்று வந்தமை; இச்சட்டவாக்கங்கள் முதலீட்டின் இலாபமீட்டும் தன்மையில் தாக்கங்களை எடுத்து வந்தன; (ஈ) வெளி நாட்டுச் சொத்துக்களை தேசியமயமாக்கு வதை ஆதரித்துப் பேசிவந்த இடதுசாரி அரசியல் இயக்கங்கள் பரவலாகக் காணப்பட்டமை.

நாட்டிலிருந்து இவ்விதமாக பாரிய அளவில் வெளிநாட்டு மூலதனம் விலக் கிக் கொள்ளப்பட்டதுடன் இணைந்த வகையில், ஒருசில முதலீட்டாளர்கள் 1950 களிலும் 1960 களிலும் நாட்டின் இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில் களில் பிரவேசித்தனர். உள்நாட்டுச் சந்தையில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு இணை யான பொருட்கள் மீது இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை, செலாவணிக் கட்டுப்பாடுகள் மற்றும் தீர்வை ஊக்குவிப்புக்கள் என்பவற்றைக் கொண்ட அரசாங்கத்தின் வெளிநாட்டு மூலதன ஊக்குவிப்புக் கொள்கையின் விளைவாகவே இவ்விதம் இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில்கள் ஆரம்பிக் கப்பட்டன. 1950 களிலும் 1960 களிலும் நாட்டில் வெளிநாட்டு கூட்டு முயற்சியுடனான 9 நிறுவனங்களும், இரசாயனம், இயந்திர உபகரணங்கள், உணவு மற்றும் பானம் என்பவற்றை உற்பத்தி செய்யும் 40 நிறுவனங்களும் முறையே இருந்து வந்ததாக அத்துகோரல குறிப்பிடுகிறார்.

சென்மதி நிலுவை தொடர்பான தரவு களின் பிரகாரம் 1970 க்கும் 1977 க்குமிடையில் நாட்டுக்குள் வந்த தேறிய வெளிநாட்டு முதலீடுகளின் உட்பாய்ச் சலில் கணிசமான அளவிலான ஒரு விருத்தி நிலைமை காணப்பட்டது. அதன் திரண்ட தேறிய உட்பாய்ச்சல் 380 கோடி ரூபாவாக இருந்தது. எவ்வாறிருப் பினும், இக்காலப் பிரிவில் நேரடி வெளிநாட்டு முதலீட்டில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு வீழ்ச்சி காணப்பட்ட தென அத்துகோரல (1984) குறிப்பிட் டுள்ளார். 1970 க்கும் 1977 க்கு மிடையே வெளிநாட்டு முலதனத்துடன் உருவாக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 20 ஆகும். வெ.நே.மு. ல் ஏற்பட்ட துரித வீழ்ச்சிக்கான விளக்கங்களாக பல்வேறு பொருளிய லாளர்களும் பல சந்தர்ப்பங்களில் பின்வரும் காரணிகளைச் சுட்டிக்காட்டி யுள்ளனர்: (அ) தேசியமயமாக்கல் முயற்சி யின் மூலம் வெ.நே.மு. தொடர்பாக உருவாக்கப்பட்ட சாதகமற்ற சூழ்நிலை; (ஆ) சம்பந்தப்பட்ட சட்டவாக்கங்கள் (பிரதானமாக 1971ம் ஆண்டின் வியா பார முயற்சிகளை கையேற்கும் சட்ட மூலம்); (இ) முதலீடுகளுக்கு ஒப்புதல் வழங்குவதில் பின்பற்றப்பட்ட கண்டிப் பான விதிமுறைகள்; (ஈ) பொருளாதாரத் தில் இறக்குமதிப் பிரதியீட்டு பொருள் உற்பத்தி வாய்ப்புக்கள் படிப்படியாக அருகிச் சென்றமை. இந்த முக்கியமான இடையூறுகளுக்கு மத்தியிலும்கூட, இறக்குமதிப் பிரதியீட்டுக் கட்டமைப்பின் கீழ் தயார் செய்யப்பட்ட ஏற்றுமதிகளை

அட்டவணை 5

**இலங்கை வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு மற்றும் மா.கொ.பொ. ஆணைக்குழு என்பவற்றின் ஒப்புதல் பெற்ற வெளிநாட்டு முதலீடுகள்**

| வருடம் | வெ.மு.ம.கு. ஒப்புதல் (ரூ. பத். இலட்.) (a) | | | மா.கொ.பொ.ஆ. ஒப்புதல் (ரூ. பத். இல..) (b) | | | மொத்த முதலீடு (ரூ. பத். இலட்.) | | | வெளிநாட்டு முதலீட்டு வீதம் | செய்திட்டமொன்றுக்கான சராசரி வெளிநாட்டு முதலீடு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | செய்திட்டங்களின் எண்ணிக்கை | வெளிநாட்டு முதலீடு | உள்நாட்டு முதலீடு | செய்திட்டங்களின் எண்ணிக்கை | வெளிநாட்டு முதலீடு | உள்நாட்டு முதலீடு | செய்திட்டங்களின் எண்ணிக்கை | வெளிநாட்டு முதலீடு | உள்நாட்டு முதலீடு | | வெ.மு.ம.கு. | மா.கொ.பொ.ஆ. |
| 1977 | 11 | 13 | 53 | – | – | – | 11 | 13 | 53 | 20 | 1.2 | – |
| 1978 | 15 | 53 | 32 | 53 | 938 | 413 | 68 | 991 | 445 | 69 | 3.5 | 17.7 |
| 1979 | 85 | 800 | 661 | 40 | 813 | 257 | 105 | 1613 | 918 | 64 | 12.3 | 20.3 |
| 1980 | 75 | 3043 | 1285 | 44 | 2698 | 566 | 119 | 5741 | 1851 | 78 | 40.6 | 81.3 |
| 1981 | 82 | 3497 | 2280 | 18 | 981 | 882 | 100 | 4478 | 2962 | 60 | 42.6 | 54.5 |
| 1982 | 70 | 986 | 754 | 16 | 1171 | 429 | 86 | 2157 | 1183 | 65 | 14.1 | 73.2 |
| 1983 | 92 | 5275 | 2042 | 13 | 190 | 94 | 105 | 5465 | 2136 | 72 | 57.3 | 14.6 |
| 1984 | 67 | 623 | 1115 | 15 | 436 | 242 | 82 | 1059 | 1357 | 44 | 9.3 | 29.1 |
| 1985 | 48 | 274 | 376 | 13 | 182 | 104 | 61 | 456 | 480 | 49 | 5.7 | 14.0 |
| 1986 | 87 | 405 | 787 | 10 | 138 | 50 | 97 | 543 | 837 | 39 | 4.7 | 13.8 |
| 1987 | 68 | 382 | 895 | 31 | 592 | 220 | 99 | 974 | 1115 | 47 | 5.6 | 19.1 |
| 1988 | 82 | 526 | 1385 | 31 | 1106 | 607 | 113 | 1632 | 1992 | 45 | 6.4 | 35.7 |
| 1989 | 57 | 1621 | 2878 | 23 | 1608 | 382 | 80 | 3229 | 3260 | 50 | 28.4 | 69.9 |
| 1990 | 74 | 389 | 1118 | 40 | 2235 | 484 | 114 | 2624 | 1602 | 62 | 5.3 | 55.9 |
| 1991* | 52 | 1132 | 846 | 39 | 3491 | 627 | 91 | 4623 | 1473 | 76 | 21.8 | 89.5 |
| Total | 945 | 19019 | 16507 | 386 | 16579 | 5157 | 1331 | 35598 | 21664 | – | 20.1 | 43.0 |
| இரத்துச் செய்யப்பட்ட ஒப்புதல்கள்* | 129 | 949 | 976 | 49 | 1740 | 255 | 178 | 2689 | 1231 | – | – | – |
| செயலில் உள்ள ஒப்பந்தங்கள்* | 817 | 18069 | 15533 | 174 | 8483 | 2899 | 991 | 26552 | 18432 | – | – | – |

குறிப்பு:
(a) மா.கொ.பொ.ஆ. சட்டத்தின் 17ன் கீழான சலுகைகள் இல்லாமல் ஒப்புதல் வழங்கப்பட்ட செய்திட்டங்கள் (வெ.மு.ம.கு. வகை செய்திட்டங்கள்).
(b) பிரிவு 17ன் சலுகைகளுடன் ஒப்புதல் பெற்றவை.
(c) செப்டம்பர் 1991ல் உள்ளவாறு.

ஆதாரம்: இலங்கையில் நேரடி வெ.மு. தொடர்பான உத்தியோகபூர்வ ஆவணங்கள். டோக்கியோ.

அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் மேற்கொண்டு வந்த முயற்சி ஒருவேளை இறக்குமதி பிரதியீட்டு கைத்தொழில்மய மாக்கலுக்கும் ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில்மயமாக்கல் நடவடிக்கை களுக்குமிடையே ஒரு முரண்பாட்டினை எடுத்துவந்திருக்க முடியும். இக்கால கட்டத்தில், வெளிநாட்டு முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட பெரும்பாலான செய் திட்டங்கள் இறக்குமதிப் பிரதியீட்டிலும் பார்க்க பெருமளவுக்கு ஏற்றுமதி நோக்கி லான நடவடிக்கைகளிலேயே திரண் டிருந்தன.

இலங்கையில் 1977ன் பின்னர் வெ. நே. மு. உட்பாய்ச்சலில் பேரளவி லான ஓர் எழுச்சி காணப்பட்டது. இலங்கையை பொறுத்தவரையில், இந்த வருடம் கொள்கை சீர்திருத்தங்களில் பெரு மாற்றங்களை எடுத்துவந்த வருட மொன்றாகக் கருதப்படுகிறது. வெளி நாட்டு முதலீடு மற்றும் ஏற்றுமதி/இறக்கு மதி நடவடிக்கைகள் என்பன தொடர் பான பெரும்பாலான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதுடன், சார்புரீதியில் திறந்த வர்த்தகக் கொள்கையொன்றின் கீழ் வெ. நே. முதலீட்டைக் கவர்ந்துகொள்ளும் பொருட்டு பிரமிப்பூட்டும் விதத்தில் பல ஊக்குவிப்புச் சலுகைகள் அளிக்கப் பட்டன. 1977 க்குப் பிற்பட்ட காலத் தில் வெ. மு. ம. குழுவுக்குக்கூடாகவும் பா. கொ. பொ. ஆ. குழுவுக்கூடாகவும் நாட்டுக்குள் வந்த வெ. நே. மு. உட் பாய்ச்சல் அட்டவணை 5ல் காட்டப்பட் டுள்ளது. இந்த அட்டவணையில் உள்ள தரவுகள் பா. கொ. பொ. ஆ. குழு வகையை சேர்ந்த செய்திட்டங்களிலும் பார்க்க வெ. நா. மு. ம. குழு வகையை சேர்ந்த செய்திட்டங்களில் வெ. நே. மு. பொதுவில் செங்குத்தாக அதிகரித்து வந்துள்ளதைக் காட்டுகின்றன. பொருள் உற்பத்தி கைத்தொழில் தொடர்பான செய்திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கு வதில் பா. கொ. பொ. ஆ. குழு சில வரையறைகளைக் கொண்டிருந்தது இதற்கு ஒருவேளை காரணமாக இருந் திருக்க முடியும். எனினும், வெ. மு. ம. குழு எந்த ஒரு குறித்துரைக்கப்பட்ட பிராந்தியத்துக்கெனவும் வரையறைகளை வழங்காது பொருள் உற்பத்தித்துறை சார்ந்த, பொருள் உற்பத்தித்துறை சாராத அனைத்து முதலீடுகளுக்கும் ஒப்புதல் அளித்தது. இதன் காரணமாக நாட்டுக்குள் இடம்பெற்ற பல்வேறு வகைப்பட்ட பொருளாதார நடவடிக்கை களிலும் வெ. மு. ம. குழு வகையைச் சேர்ந்த செய்திட்டங்கள் பெருகிக் காணப்பட்டன.

ஒப்புதல் அளிக்கப்பட்டு செயற்படுத் தப்பட்டு வந்த செய்திட்டங்களின் எண்ணிக்கையை பொறுத்தவரையில், வெ. மு. ம. குழு ஒப்புதல் அளித்த செய் திட்டங்களில் 95 சதவிகிதமானவை செயற்படுத்தப்பட்டு வந்தன. ஆனால், பா. கொ. ஆ. குழுவைப் பொறுத்தவரை யில் இது 51 சதவிகிதமாக இருந்தது. பா. கொ. பொ. ஆ. குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட செய்திட்டங்கள் செயற் படுத்தப்பட்ட மட்டம் குறைவாக இருந்த மைக்கான பிரதான காரணம், வெ. நே. மு. தொடர்பாக இந்த முகவர கத்தில் காணப்படும் நிர்வாக வகையைச் சேர்ந்த இடையூறுகளாகவேயுள்ளன.

பொதுவில் இலங்கையின் உள் நோக்கிய வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சலின் போக்கினை மூன்று உபகாலப் பிரிவுகளின் அடிப்படையில் நோக்க முடியும். அந்தந்த காலப்பிரி வில் நாடு எதிர்கொண்டிருந்த சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுடன் இவை பெருமளவுக்குச் சம்பந்தப்பட் டிருந்தன. முதலாவது உபகாலப்பிரிவு 1979-83 ஆகும்; 1984-87 காலப் பிரிவு இரண்டாவதாகவும் 1988 தொடக்கம் இன்றுவரையுள்ள காலப் பிரிவு மூன்றாவது காலப்பிரிவாகவும் உள்ளது. முதலாவது காலகட்டத்தின் போது நாட்டுக்குள் வந்த வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் பாரியளவின தாக இருந்ததுடன், இக்கால கட்டத்தி லேயே இது தொடர்பான ஆகக்கூடிய செழிப்புக் காணப்பட்ட வருடங்களையும் (1980, 1983) காணமுடிந்தது. இக் காலகட்டத்தின் போது நாட்டில் நிலவி வந்த கணிசமான அளவிலான அரசியல் ஸ்திரநிலை இந்த உயர்ச்சிப்போக்குக் கான பிரதான காரணமமாக இருந்திருக்க முடியும். இரண்டாவது காலப்பிரிவின் போது இலங்கைக்கான வெ. நே. மு. ன் உட்பாய்ச்சல் சாதாரணமான ஒரு நிலை யில் காணப்பட்டது. இந்தக் காலகட்டம், சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலப்பிரி வின் இலங்கையின் பொருளாதாரம் கண்ட மிக மோசமான காலகட்டமாக இருந்துள்ளது என்பதனை அனைவரும் அறிவார்கள். இனக்கலவரங்களும் சிங்கள மற்றும் தமிழ் கிளர்ச்சிகளும் இடம்பெற்று, அவை நாட்டில் அரசியல் கொந்தளிப்பு நிலை தோன்றுவதற்கு வழிகோலியிருந்தன. அதன் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் பலவீன முற்றது. மேலும், தயார் செய்யப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதிகளைப் பொறுத்த வரையில், வளர்ச்சியடைந்த நாடுகள் பல்வேறு வகையான பாதுகாப்புவாத வழிமுறைகளை இக்காலகட்டத்தின் போது அறிமுகம் செய்து வைத்தன. இலங்கையின் வெ. நே. மு. ன் பெரும் பகுதி இந்தத் துறையிலேயே திரண் டிருந்தது. இந்த நிலையில், தயார் செய்யப்பட்ட ஆடைக் கைத்தொழில் துறை செய்திட்டங்களுக்கு மேலும் ஒப்புதல் அளிக்கும் விஷயத்தில் உற்சாகம் காட்டப்படவில்லை. இக்காரணிகளின் நிமித்தம் இக்கால கட்டத்தின் போது இலங்கைக்கான வெ. நே. மு. ன் உட் பாய்ச்சல் குறைவடையத் தொடங்கியது. தமிழ் தீவிரவாதிகளின் கிளர்ச்சி நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து நிலவிவந்த போதிலும் 1988ம் ஆண்டு தொடக்கம் வெ. நே. மு. மீண்டும் ஒருங்கிணைக்கப்படத் தொடங் கியது. இந்த மேல் நோக்கிய போக்கு நீண்ட காலத்தில் நிலைத்து நிற்குமா என்பதனை இன்னமும் நிச்சயமாகக் கூற முடியாதுள்ளது. இதற்குக் காரணம், பிரதான வளர்ச்சியடைந்த நாடுகளின் பல்தேசிய கூட்டுத்தாபனங்களினால் முதலீடுகளை மேற்கொள்ளக்கூடிய முன்னுரிமைப் பிரதேசமொன்றாக இலங்கை இன்னமும் உருவாகவில்லை யென்பதாகும்.

செப்டம்பர் 1991 வரையிலான 15 வருட காலத்தில் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவினாலும் பா. கொ. பொ. ஆ. குழுவினாலும் ஒப்புதல் அளிக்கப் பட்ட / ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட 628 செய்திட்டங்களில் நான்கில் ஒரு பங்குக்கு மேற்பட்டவை (எண்ணிக்கை யிலும் முதலீட்டின் பெறுமதியிலும்) புடவைகள் மற்றும் ஆடைகள் என்ப வற்றைக் கொண்ட துறையை சார்ந்தவை யாகவே இருந்தன. 1974-77 கால கட்டத்தின் போது கூட்டுமுயற்சிகளைக் கொண்ட 3 தொழிற்சாலைகள் காணப்- பட்டன. இவற்றில் 9 தொழிற்சாலைகள் (69%) ஆடை தயாரிப்புத் தொழிற்- சாலைகளாகவே இருந்தன. புடவை மற்றும் ஆடைகள் தயரிப்புத் துறையில் இவ்விதம் முதலீடுகள் பெருகிக் காணப்- பட்டமைக்கான காரணம், ஆசியாவின் புதிதாக தொழில்வளர்ச்சி கண்ட நாடு- களைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் தமது கோட்டாக்களை பூர்த்திசெய்து கொண்- டிருந்த ஒரு நிலையில், இலங்கை (நடு 1980 கள் வரையில்) கவர்ச்சி கரமான ஐக்கிய அமெரிக்க மற்றும் ஐரோப்பிய சமூக சந்தைகளில் வர்த்தகத்தடைகளை எதிர்கொண்டிருக்கவில்லை என்ற உண்மையை கண்டறிந்து கொண்டமை யாகும். அண்மைக்காலத்தில் வெ. மு. ம. குழுவும் பா. கொ. பொ. ஆ. குழுவும்

இந்தத் துறைக்கான நேரடி முதலீட்டு உட்பாய்ச்சலினை உற்சாக மிழக்கச் செய்துள்ளபோதிலும், ஐக்கிய அமெரிக்காவினால் தயார் செய்யப்பட்ட ஆடைகள் இறக்குமதிகள் தொடர்பாக பல்வேறுவிதமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள ஒரு சூழ்நிலையிலும் இலங்கையில் முடக்கப்பட்டுள்ள வெளிநாட்டு முதலீடுகளை பொறுத்தவரையில், இந்தத் துறையே முக்கியமான கைத்தொழில் துறையாக இன்னமும் இருந்து வருகின்றது. இந்நாட்டின் நேரடி வெளிநாட்டு முதலீடு தொடர்பாகக் காணப்படும் மற்றொரு குணாம்சம், பெரும்பாலான செய்திட்டங்கள், ஊழியச் செறிவு மிக்க, பொருட்களை ஒன்று கூட்டித் தயாரிக்கும் செயற்பாடுகளும், குறைந்த தொழில்நுட்ப மட்டங்களைக் கொண்ட எளிமையாக பதப்படுத்தும் நடவடிக்கைகளையும் கவரும் ஒரு போக்கினைக் காட்டிவருவதாகும். எனவே, இலங்கைக்கான உள்நோக்கிய வெ. நே. மு. ன் பாய்ச்சலில், தொழில்நுட்ப ரீதியாக வளர்ச்சி கண்ட நவீன உற்பத்தி மாதிரிகள் அரிதாகவே காணப்படுகின்றன என்பதனை இங்கு சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

அக்டோபர் 1989ல் முடிவடைந்த 19 வருட காலத்தில், இலங்கையில் நாடு வாரியாக முடக்கப்பட்ட முதலீட்டு நிலை, செய்திட்டங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், முதலீட்டின் பெறுமதியின் அடிப்படையிலும் மிகத் தீவிரமான முறையில் மாற்றமடைந்து வந்துள்ளது. ஆசியாவின் புதிதாக தொழில் வளர்ச்சி கண்ட நாடுகளும் தென்னாசிய நாடுகளும் மேற்கொண்ட மொத்தப் பங்கு மூலதன முதலீடு 1971ல் 3.7 சதவிகிதமாக இருந்து, 1977-89 காலப்பிரிவின்போது 25.9 சதவிகிதமாக அதிகரித்திருந்தது. அதே வேளையில் ஐக்கிய இராச்சியம் வகித்து வந்த முதன்மையான பங்கு 82 சதவிகிதத்திலிருந்து 18.4 சதவிகிதமாக செங்குத்தாக வீழ்ச்சியடைந்திருந்தது. அதே வேளையில், 1977 தொடக்கம் அக்டோபர் 1989 வரையிலான காலகட்டம் தொடர்பான ஜப்பானின் சார்புரீதியான நிலை, அதனை முதன்யைான முதலீட்டாளர் என்ற நிலைக்கு எடுத்து வந்தது. செய்திட்டங்களின் எண்ணிக்கையை பொறுத்தவரையில், ஆசிய முதலீட்டாளர்கள் மிக உயர்ந்த ஸ்தானத்தில் இருந்தார்கள். ஐக்கிய அமெரிக்கா, (ஐக்கிய இராச்சியம் தவிர்ந்த) ஐரோப்பா என்பவற்றின் சார்புரீதியான நிலை செய்திட்டங்களின் எண்ணிக்கையை பொறுத்தவரையில் கணிசமான அளவுக்கு விருத்தியடைந்திருந்தது.

(மிகுதி அடுத்த இதழில்)

(20 பக்கத் தொடர்ச்சி)

உற்பத்திப் பொருளாதார ஓட்டத்திற்குள் போதியளவு ஒன்றிணைக்கப்பட முடியாத சனசக்தி உதவி பெற்றோரின் நிலை என்ன என்பதே அக்கேள்வியாகும்.

இதை நியாயப்படுத்தக்கூடிய சுதந்திரமான மதிப்பீடு எதுவுமில்லை. ஆனால், மே 1991 ல் இடம்பெற்ற முதலாம் சுற்றுவட்ட மதிப்பாய்வினை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட அரசாங்கத்தின் தரவின்படி, சனசக்திக் குடும்பங்களில் ஏறக்குறைய 57% க்கும் அதிகமானோர் ரூபா 1500 க்கும் அதிகமான வருமான மட்டத்தினை அடைந்து விட்டார்களென்றும், 27% னர் ரூபா 1000-1500 இடைப்பட்ட வருமானத்தினை அடைந்துள்ளாரென்றும் அறியப்படுகின்றது. மிகுதி 17% மானோரினதும் வருமானம் ரூபா 1000 ற்கும் குறைவாக இருந்ததோடு, இவர்கள் எளிதில் பாதிப்புறக்கூடிய கூட்டமாகவே இன்னமும் கருதப்படுகிறார்கள். இவ்விதம் இத்திட்டத்தில் மிகவும் குறைவான வருமான எல்லையில் இருக்கும் மக்கள் அவ் எல்லையினைக் கடந்து மேல்செல்வதற்கு மேலதிக பாதுகாப்பு உதவி அவர்களுக்கு தேவையாக உள்ளது. குடும்பங்கள் ஒரு உறுதியான வருமானத்தினை அடைந்திருந்தாலும் கூட, பொருளாதாரத்தின் குறைந்து செல்கின்ற கொள்வனவுச் சக்தி காரணமாக வறுமை இன்னும் தொடர்ந்திருக்குமென (அல்லது அதிகரிக்குமென) ஒருவர் கடுமையாக விவாதிக்கலாம். வறுமைக் குறைப்பு என்பது ஒரு தொடர்ச்சியான படிமுறையாதலால், சனசக்தி நிகழ்ச்சித் திட்டமானது, வருமானத்தினைக் குறைவாகப் பெறும் மக்களை மீண்டும் இனங்கண்டு, ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் அவர்களுக்குதவுவதில் கவனம் செலுத்த வேண்டியதாகவுள்ளது.

## முடிவுரை

கீழ்க் குறிப்பிடப்படும் அம்சங்களை விருத்தி செய்வதன் மூலம் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் எதிர்கால வெற்றியைப் பெறக்கூடியதாக இருக்கும்:

1. சந்தை-நட்பு வியாபாரச் சூழலுக்கு உதவுகின்ற உள்ளகக் கட்டமைப்பினை வழங்கும் ஏனைய முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களைக் குறைக்காதபடியும் உள்ளக (உ+ம் பணத்தை அச்சிடுதல்), வெளிவாரி நிதிப்படுத்தல் முறைகளின் விளைவாக பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற பணவீக்கத்தாக்கத்தினைத் தவிர்ப்பதன்மூலமாகவும், இத்திட்டத்திற்கு அவசியமான நிதிப்படுத்தலை மேற்கொள்ளக் கூடிய ஆற்றல்.
2. குறிப்பாக; அரசியல் நோக்கம் கொண்ட எதிர்ப்புச் சக்திகள் இந் நிகழ்ச்சித்திட்டத்தினைத் தடுக்கக் கூடிய கீழ்மட்டங்களில், நிறுவக முறைமையினைப் பலப்படுத்துதலும், நிர்வாகப் பொறிமுறையின் வினைத்திறனை மேம்படுத்துதலும்.
3. குறிப்பாக மிகவும் சிறிய மட்டங்களில், கைத்தொழில், விவசாய உற்பத்தியினை அதிகரிக்கும் முகமாக தொழில்முயற்சியாளர் திறன்களையும், முகாமைத்துவத் திறன்களையும் விருத்தி செய்கின்ற வழிவகைகளை அதிகரித்தல்.
4. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் ஏனைய விநியோக ஊடகங்களையும் பலப்படுத்துவதன் மூலமாக சந்தைப்படுத்தும் செயல் முறையினையும், பயனுள்ள விநியோக வலைப்பின்னல் அமைப்பினையும் விருத்தி செய்தல்.

எதிர்பார்க்கப்பட்டதுபோல சில ஆரம்பக் கஷ்டங்கள் இருந்தபோதிலும், சனசக்தி நிகழ்ச்சித்திட்டம் வறிய மக்களிடையே பல்வேறு அனுகூலமான மாற்றங்களை இதுவரை காட்டியுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டம் வெற்றியடையுமாயின் கடந்த 5 தசாப்தங்களாக பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் சுமையாகவிருந்த உணவு மானிய/முத்திரைத் திட்டங்கள் முற்றாக நீக்கப்படுவதன் மூலமாகவும், பொருளாதார வறுமையிலுள்ள மக்கள் உயர்ந்த வருமானத்தினை பெறுகின்ற குழுக்களைப் போல தொழில் முயற்சியுடையவர்களாகவும், திறமையுள்ளவர்களாகவும் இருக்க முடியும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமாகவும் இத்திட்டம் சமூக-பொருளாதார தோற்றப்பாட்டில் ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடும். வறுமை என்பது வறியோர், செல்வந்தர் ஆகிய இரு குழுவினருக்கும் அசௌகரியமான ஒன்றாகும். எனவே, இரு தரப்பினரதும் முன்னேற்றம் கருதி இது குறைக்கப்பட்டாக வேண்டும்.

# புவியியல் தகவல் தொகுதிகளின் அபிவிருத்தி

கலாநிதி சுமித் பத்திரன

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

நிலப்பரப்பல்லாத காரணித் தரவுகளையும் கையாள்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன. எனினும், புவியியல் தகவல் முறைமையின் மென்கலமானது, Dbase, Oracle, Rbase, Paradox, Foxbase போன்ற RDBM மென்கலத்தோடு சேர்ந்து வருவதில்லை. அநேகமான சந்தர்ப்பங்களில் புவியியல் தகவல் முறைமையினது மென்கலத்திற்கும், RDBM மென்கலத்திற்குமிடையில் மாறி மாறி தரவுகளை அனுப்ப வேண்டியுள்ளது. தரவு அடிப்படை அபிவிருத்திக்கு உகந்த dbase முறைமையினைத் தெரிவு செய்யும்போது, தற்போதுள்ள மென்கலங்களின் பயன்படுந்தன்மை அல்லது ஏதாவது ஸ்பிரட்ஷீட் அமைப்பு போன்ற பிரசித்திபெற்ற மென்கலங்களிடையே இடைநிலை ஆற்றல்கள் ஆகியன ஆராயப்பட வேண்டியது முக்கியமாகும்.

நியமமாக்கப்பட்ட நிலப்பரப்புத் தகவலானது தரவுகளை மாற்றீடு செய்யவும், தரவினைக் குறியீட்டு முறையில் பிரதிபண்ணலிலுள்ள செலவினைக் குறைக்கவும், நிலப்பரப்புத்தரவு, நிலப்பரப்பினோடு தொடர்பில்லாத தரவு என்பவற்றின் தரம், நம்பகத்தன்மை, செம்மை ஆகியவற்றினை விருத்திசெய்யவும் ஏதுவாக இருக்கிறது. எப்படியாயினும், தரவு நியமமாக்கல், ஒருங்கிணைத்தல் ஆகியன கைத்தொழில்மயமாக்கப்பட்ட நாடுகளில்கூட இன்னும் பிரச்சினைக்குரிய விடயங்களாகவே இருக்கின்றன. ஒரே பொருள் வெவ்வேறு விதமாக பாகுபடுத்தக்கூடியவாறு, வெவ்வேறு நிறுவனங்களும், நாடுகளும் வெவ்வேறு பாகுபாட்டுத் திட்டங்களைப் பயன்படுத்துகின்றன. குறிப்பிட்ட சில பிரயோகங்களுக்கு வேண்டிய தரவு அடிப்படைகளை விருத்தி செய்வதற்கான நிதிவசதிகள் வளர்முக நாடுகளில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருப்பதால், தரவினைப் பயன்படுத்த முடியாமையின் தாக்கம் பாரதூரமானதாக இருக்கிறது. தரவு மாற்றீட்டினை மட்டுப்படுத்துகின்ற இன்னொரு காரணி, தரவுப் பாதுகாப்பும், அதிகாரமுமாகும். சில நிறுவனங்கள் தாங்கள் வைத்திருக்கின்ற தரவுகளை பகிர்ந்துகொள்ள மிகவும் தயக்கம் காட்டுவதோடு, தகவலை இக்காலத்துக்கேற்றவாறு அமைத்துக் கொள்ள விரும்புவதில்லை. இதற்கு காரணம், சில தரவுகள் அவற்றின் இரகசியத் தன்மை காரணமாக பாதுகாக்கப்பட வேண்டியவையாக இருக்கலாம். ஆனால், எத்தகைய தரவுகள் இரகசியமாகப் பேணப்பட வேண்டும்? அல்லது தரவுப் பகிர்வானது எவ்வாறு முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்? என்பவைபற்றி இதுவரை எவ்வித தெளிவான வழிகாட்டிகளும் இல்லை.

வளர்முக நாடுகளின் தரவு அடிப்படை அபிவிருத்தியில் சில தொழில்நுட்பப் பிரச்சினைகளும் இருக்கின்றன. வளர்முக நாடுகளுக்கு புவியியல் தகவல் முறைமையினை அறிமுகம் செய்தபோது ஒரு தொழில்நுட்பச் சூழலுக்குள் இது மேற்கொள்ளப்பட்டதோடு, ஆரம்ப எதிர்பார்க்கையும் மிகவும் உயர்வாக இருந்தது. அநேகமான சந்தர்ப்பங்களில், தொழில்நுட்பப் பிரச்சினைகளின் நிமித்தம், குறிக்கோள்கள் எய்தப்படவில்லை. ஒரு புவியியல் தகவல் முறைமையானது தரவு, கம்ப்யூட்டர்கள், மென்கல நிகழ்ச்சித் திட்டங்கள், தரவு அடிப்படைக் கட்டமைப்புக்கள், பயன்படுத்துவோரின் திறன் ஆகியவற்றினை ஒன்றிணைப்பதால், எந்த ஒரு மட்டத்திலாவது இப் பிரச்சினைகள் ஏற்படலாம். மென்கலங்களின் இடைநிலை, தரவு அமைப்பின் பயன்படாததன்மை அல்லது வன்கலப் பிரச்சினைகள் போன்றவற்றினை இத் தொழில்நுட்ப பிரச்சினைகளோடு தொடர்புபடுத்தலாம். இத்தகைய பிரச்சினைகள் ஒரு வளர்முக நாட்டில் தரவு அடிப்படையினது அபிவிருத்தியினையும், புவியியல் தகவல் முறைமையின் அமுலாக்கத்தினையும் பல மாதங்களுக்குத் தாமதப்படுத்தக்கூடும்.

வளர்முக நாடுகளில் புவியியல் தகவல் முறைமைகள் அறிமுகப்படுத்தப்படும்போது, தரவு அடிப்படையின் வடிவமைப்பு பற்றியும், அடிப்படை வரைபட உருவாக்கம் பற்றியும் போதிய வழிகாட்டிகள் இன்மையால் அநேக பிரச்சினைகள் எழுந்துள்ளன. நியமமாக்கப்பட்ட புவியியல் குறியீட்டு முறைமையின்மையால் அடிப்படை வரைபட உருவாக்கம்கூட பாதிக்கப்படுகிறது. பொதுவாக, தகுந்த விடய ஆய்வுகளும், அவைபற்றிய விளக்கவுரைகளும் கிடைப்பது மிக அரிதாகும். ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்கு மென்கலத்தினைப் பிரயோகிப்பதில் மென்கலக் கைநூல்கள் பாவனையாளருக்கு உதவவில்லை. அநேகமான மென்கலங்கள், அவற்றைப் பயன்படுத்துவோருக்கு உதவுகின்றவையாக இருக்கவில்லை. போதிய தொழில்நுட்ப அறிவின்றி இக்கைநூல்களைக் கிரகிப்பதும் கடினமாக இருக்கின்றது.

புவியியல் தகவல் முறைமையினது அபிவிருத்தியோடு தொடர்புள்ள பிரச்சினைகள், முகாமைத்துவப் பிரச்சினைகளோடு ஒத்திணைகின்றவையாக இருக்கின்றன. போதிய ஆளணியின்மை போதிய முகாமைத்துவ ஆதரவின்மை, போதிய பயிற்சியின்மை ஆகியவற்றை முகாமைத்துவப் பிரச்சினைகளாக யோஹ் (1991) இனங்கண்டுள்ளார். முகாமைத்துவத்தினது எல்லாமட்டங்களினதும் ஆதரவின்றி மேற்கொள்ளப்படும் தரவு அடிப்படையின் அபிவிருத்தி, சில வேளை புவியியல் தகவல் முறைமையின் முழுக்கருத்திட்டத்தையும் அச்சுறுத்தலாம்.

வளர்முக நாடுகளின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் புவியியல் தகவல் முறைமைகள் விடையாக அமையமாட்டா. ஆனால், அவை முறையாக பயன்படுத்தப்பட்டால், தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உதவுகின்ற ஒரு சிறந்த கருவியாக அமையலாம். கம்ப்யூட்டர்களின் விலைகள் வளர்முக நாடுகளில் குறைந்துவருவதால் இங்கு புவியியல் தகவல் முறைமையினை அமைக்க ஏதுவாக இருக்கிறது. தொழில்நுட்பத்தினை இடமாற்றம் செய்வதற்காக ஐ. நா. முகவரங்கள், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்கள் நிதியுதவியையும், தொழில்நுட்ப ஆலோசனையையும் வழங்குகின்றன. ஆனால், புவியியல் தகவல் முறைமையும், தரவு அடிப்படை அபிவிருத்தியும் வெளிவாரியான உதவிகளில் தங்கியிராது, எய்தப்பட வேண்டியுள்ளது. இத்தொழில்நுட்பத்தினை அறிமுகம் செய்வதில் சர்வதேச நிறுவனங்களும், நிபுணத்துவமும் முக்கிய பங்கு வகிக்கின் றன. ஆனால், இத்தொழில்நுட்பத்தினை ஆதரிக்கும் சூழலானது, அச்சமூகத்திற்குள்ளேயே விருத்தியாக்கப்பட வேண்டும். புவியியல் தகவல் முறைமைத் திட்டத்தின் வெற்றிக்கு உள்நாட்டு தொழில்நுட்ப நிபுணத்துவம், பயிற்சி, ஆராய்ச்சி, பயன்படுத்துவோரின் இடைநிலை அபிவிருத்தி, பயன்படுத்துவோரின் கல்வி, தரவு முகாமைத்துவ உபாயம், சமூக பொருளாதார முன்னுரிமைகளுக்குள் புவியியல்

தகவல் முறைமையின் பிரயோக வாய்ப்புக்கள் கிடைக்கக்கூடிய தன்மை ஆகிய அம்சங்கள் தேவையாக இருக்கின்றன.

முதலில் இத்தொழில்நுட்பத்தினை ஏற்றுக்கொள்ளும்போது, புவியியல் தகவல் முறைமையையும், தரவு அடிப்படை அபிவிருத்தியையும் ஒரு தொழில்நுட்ப அறிமுகமாக நோக்கக்கூடாது. புவியியல் தகவல் முறைமை, வளர்முக நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு மிகவும் பொருத்தமான கருவியாகும். இதற்கு, தரவுகளைச் சேகரித்து, செம்மையான தகவலை வழங்குவதில் ஏற்படக்கூடிய செலவினைக் கணிசமான அளவு குறைக்கவும், தீர்மானம் எடுப்பதற்கு வழிகாட்டவும் முடியும். தரவு அடிப்படையினை வடிவமைப்பதற்கு முன்பாக, புவியியல் தகவல் முறைமையினை பிரயோகிக்கக்கூடிய பகுதிகள், கருத்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டதும் எதிர்பார்க்கப்படுகின்ற வெளியீட்டின் வகை, இத்தகவலைப் பயன்படுத்துவோர் ஆகிய விடயங்களைப்பற்றி தெளிவான விளக்கம் இருக்க வேண்டியது அவசியமாகும். உதாரணமாக, நிலத்தின் கீழுள்ள நீரமுத்தம், மேய்ச்சற் தரை, குறைந்து கொண்டுவரும் தாவரப்பயிர்வகை, அரிப்பு மாதிரியுரு, உவர்த்தன்மை ஆய்வுகள், நகர விரிவாக்கம், குடியிருப்பு மேற்பார்வை, விவசாயப் பயிர்களுக்கேற்ப பகுப்பாய்வுகள் என்பவற்றினை ஆய்வு செய்வதற்கு பிரதேச உள்ளூர்த் திட்டமிடல் கூட்டுக்கோப்புக்குள் புவியியல் தகவல் முறைமையினைப் பிரயோகிக்கலாம். இதற்கேற்றவாறு, தரவு அடிப்படை அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு, எதிர்பார்க்கைகள் எய்தப்படக்கூடியவையாகவும் இருக்க வேண்டும். ஒரு தரவு அடிப்படை நிறுவப்பட்டதும், அவற்றின் முழு அளவிலான வாய்ப்புகளைப் பெறுவதற்கு ஏறக்குறைய 9-12 மாதங்களாவது பொறுத்திருக்க வேண்டியது நியாயமானதாகும். நிலப்பரப்புப் பகுப்பாய்வினை வேண்டிநிற்கும் எந்தவொரு கருத்திட்டத்தினையும் மேற்கொள்ளமுதல், சில விடயதான வரைபடங்களை உருவாக்குவதற்கு புவியியல் தகவல் முறைமையையும், தரவு அடிப்படையினையும் பிரயோகிப்பது பொருத்தமானதாக இருக்கும்.

தரவு அடிப்படை அபிவிருத்தியினதும், அடிப்படை வரைபட உருவாக்கத்தினதும் ஆரம்பக் கட்டங்களுக்கு நிபுணத்துவ உதவி தேவையாக இருக்கலாம். எனினும், நிலப்பரப்புத் தரவின் தன்மை அவற்றோடு தொடர்புள்ள காரணித்தரவு ஆகியன சமூகத்தின் சமூக-பொருளாதார கட்டமைப்பிற்கு பொருத்தமற்றதாக இருக்குமிடத்து, இதன் பிரயோகம் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும்.

தற்போது கிடைக்கக்கூடிய வரைபடங்கள் (மிகவும் குறைவான செம்மையானது), வான் புகைப்படங்களிலிருந்து பெற்ற தகவல்கள் (குறைந்த செலவுள்ள நுணுக்குக்கருவியினைப் பயன்படுத்தலாம்) ,அல்லது தற்போதுள்ள சில எண்வடிவிலான (remote sensing) தரவுகள் அல்லது நில அளவைத்தரவுகள் (மிகுந்த செம்மையானது) ஆகியவற்றைப் பயன்படுத்தி அடிப்படை வரைபட அபிவிருத்தியினை மேற்கொள்ளலாம்.

தரவு அடிப்படையின் வடிவமைப்பு தொடர்ச்சியான செயன்முறைகளைக் கொண்டது. தற்போதுள்ள தகவல்களை இன்றைக்கேற்றவாறு அமைத்துக்கொள்வதும், புதிய தகவல்களை அல்லது காரணித் தரவுகளைச் சேர்த்துக்கொள்வதும் தரவு அடிப்படையின் எதிர்கால விரிவாக்கத்திற்கு இன்றியமையாதவையாகும். விரிவாக்கச் செயன்முறையின் போது, மென்கலங்களும், வன்கலங்களும் மாற்றப்பட வேண்டியுள்ளன. இதற்கமைய தரவுகளிலும் சில சீராக்கல்களை மேற்கொள்ளவேண்டி ஏற்படும். அநேகமான மென்கலங்கள் தரவுகளை வெவ்வேறு அமைப்புருக்களில் செயற்படுத்தக்கூடியதாக இருப்பினும், ஒரு புதிய புவியியல் தகவல் முறைமை நிறுவப்படுகின்றபோது, அவை விரக்கியினைத் தருகின்ற செயன்முறைகளாக அமையலாம். ஒரு சாதாரண புவியியல் தகவல் முறைமையினை அமுலாக்குவதற்கு விலையுயர்ந்த, மிக நுட்பம் வாய்ந்த மென்கலங்களையோ அல்லது வன்கலங்களையோ வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. மாநாட்டுக் காட்சியமைப்புக்கள், மென்கல மீளாய்வுக் கட்டுரைகள், மென்கல உற்பத்தியாளர்களினால் அளிக்கப்படுகின்ற செய்துகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை ஆய்வு செய்தல், அல்லது புவியியல் தகவல் முறைமை பற்றி கல்வியூட்டுகின்ற/பிரயோகிக்கின்ற சமூகத்தினரிடமிருந்து ஆலோசனை பெறுதல், அல்லது இலத்திரனியல் முறைமைகளோடு தொடர்புள்ள நிலப்பரப்புத்தரவுகள் சிலவற்றைத் தொடர்புபடுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் மூலமாக பயன்படுத்துவோருக்கு உதவக்கூடிய மென்கலங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தரவு அடிப்படையின் ஆரம்பமானது, தற்போதுள்ள மூலவளங்களைப் பயன்படுத்தமுடியாத அளவுத் திட்டத்தோடு தொடங்கக்கூடாது. ஒரு முன்னோடிக் கருத்திட்டத்தோடு இதனை ஆரம்பிப்பது சிறந்ததாகும். இந்த அநுபவத்தினூடாக, எமக்கு வேண்டிய பிரயோகங்களுக்கு இதனை நீடிக்கலாம். தரவு அடிப்படை அபிவிருத்தி, புவியியல் தகவல் முறைமை ஆகிய இரண்டும் ஒரு தொடர்ச்சியான, உறுதியான உபாயத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டும். பிரதான கைத்தொழில் நாடுகளைப் போலல்லாது, வளர்முக நாடுகளில் சஞ்சிகைக் கட்டுரைகள், மாநாடுகள், கல்வி ஒளிப்பதிவு நாடாக்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் ஆகியன கிடைக்கக்கூடிய வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே இருக்கின்றமையால், தரவு அடிப்படையின் சிறந்த அபிவிருத்திக்கும், புவியியல் தகவல் முறைமையின் அமுலாக்கத்திற்கும் தேவையான திறன்களை விருத்தி செய்வதற்கான ஆளணியினரின் ஆற்றலையும், புதிதாகப் பயன்படுத்துவோருக்கான கல்வியூட்டுதலையும், வற்புறுத்தி நிற்கின்றன. ஆகவே, புவியியல் தகவல் முறைமையினை வளர்முக நாடுகளில் அறிமுகப்படுத்துவதற்கு ஒத்துழைக்கின்ற சர்வதேச நிறுவனங்களும், நாடுகளும் இவற்றைப் பயன்படுத்துவோர்களின் திறன்களையும், புரிந்து கொள்ளும் அறிவினையும் விருத்தி செய்யக்கூடிய வகையில் தேவையான உதவிகளை அளிக்க வேண்டியது மிக அவசியமாகும். சமூக-பொருளாதார முன்னுரிமைகளுக்கு, மட்டுப்படுத்தப்பட்ட அந்நியச் செலாவணி தேவையாக இருக்கும் சமயத்தில், துரதிர்ஷ்டவசமாக சஞ்சிகைகளின் சந்தாக்கள், மாநாட்டுப் பதிவுகள், பிரயாணங்கள் ஆகியவற்றுக்கான செலவு மிகவும் அதிகமாக இருப்பதுடன், அவற்றினைப் பெறுவதிலும் கஷ்டங்கள் இருக்கின்றன.

தற்போதுள்ள முகாமைத்துவப் பணிகளைத் தன்னியக்கமாக்குவதும், புவியியல் தகவல் முறைமையினை அமுலாக்குவதும் ஒரு நிறுவனத்தின் நிர்வாக, முகாமைத்துவக் கட்டமைப்புக்களில்

மாற்றத்தினை உண்டாக்கலாம். பூகோளத் தகவல் முறைமையினைப் பெற்று, தரவு அடிப்படையினை அமுலாக்கும்போது, அதன் ஆரம்பத்திலேயே தரவுப் பாதுகாப்பு, அதிகாரம், பராமரிப்புப் பொறுப்புக்கள் ஆகிய அம்சங்களைப் பற்றி தீர்மானிக்கப்பட வேண்டும். புவியியல் தகவல் முறைமையின் சிறப்பான, நீண்டகால செயலாற்றத்திற்காக, ஒரு நிறுவனத்திற்கு கிடைக்கக்கூடிய புவியியல் தகவல் முறைமையினதும், தரவு அடிப்படை அபிவிருத்தியினதும் வாய்ப்புகளும், அதன் முகாமைத்துவத்தினைக் கல்வி ஊட்டுவதும் மிக முக்கியமானவையாகும். எனவே, புவியியல் தகவல் பகிர்வு/முகாமை என்பவற்றையும் மேற்பார்வை செய்வதற்கென ஒரு மத்திய அதிகாரசபை இருக்கவேண்டியது அவசியமாகும். தற்போதுள்ள பணிகளின் வினைத்திறமையினை விருத்தி செய்வதன்மூலம், ஒரு நிறுவனத்தின் நிறுவக அமைப்பினை புவியியல் தகவல் முறைமையானது மாற்றம் செய்யலாம். தரவு அடிப்படையின் அபிவிருத்தி, புவியியல் தகவல் முறைமையின் அறிமுகம் ஆகியன, தீர்மானம் எடுப்பதற்கு உதவுகின்ற ஒரு கருவியாகவே கருதப்பட வேண்டும். முழுச் சமூகத்தினதும் நலன்களை விருத்திசெய்வதற்கு புவியியல் தகவல் முறைமையினை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஒரு தொடர்ச்சியான, உறுதியான கட்டமைப்பிற்குள் புவியியல் தகவல் முறைமையினை ஆதரிக்கின்ற ஒரு சூழலை அபிவிருத்தி செய்வதற்காக, முகாமைத்துவத்தினையும், பயன்படுத்துவோரையும் கல்வியூட்டுவதில் பல்கலைக் கழகங்களும் ஆராய்ச்சி நிறுவனங்களும் முக்கிய பங்கினை வகிக்கலாம். புவியியல் தகவல் முறைமை என்றால் என்ன? அவற்றின் வரையறைகள் யாவை? போன்ற விடயங்களை முகாமைத்துவத்தின் எல்லா மட்டங்களும் விளங்கியிருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். பிரதேச இயல்புகள், மென்கல, வன்கலக் கூறுகள்பற்றிய அடிப்படை அறிமுகம், தரவு அடிப்படை அபிவிருத்திகளுக்கான வழிகாட்டிகள் ஆகிய விடயங்களைப் பற்றியும், நிலப்பரப்போடு தொடர்புள்ள ஒரு பிரச்சினையை ஒரு புவியியல் தகவல் முறைமைக் கண்ணோட்டத்திற்குள் எவ்வாறு உள்ளீடு செய்யலாம் என்பதுபற்றியும் செயலமர்வுகளும், பயிற்சித் திட்டங்களும் கவனஞ் செலுத்தப்பட வேண்டும். கம்ப்யூட்டர் நிகழ்ச்சியாக்கல் முறை, தரவு அடிப்படை வடிவமைப்பு, அபிவிருத்தி போன்ற விடயங்களில் கவனம் செலுத்துகின்ற பயிற்சித் திட்டங்களின் மூலம் அநுபவம் வாய்ந்த சில பாவனையாளர்கள் நன்மை அடையக்கூடும். இந்தத் திறன்கள், மிக அவசியமற்றவையாயினும், புவியியல் தகவல் முறைமையின் முன்னேற்றத்தினை வேகப்படுத்தும். புவியியல் தகவல் முறைமை செயற்படுகின்றபோது பாவனையாளரின் இடைநிலைகள், அளவுத் திட்ட மாற்றங்கள், எறிய மாற்றங்கள், பூகோளரீதியாக தொடர்புபடுத்தல், ராஸ்ரர் (raster) முறைமைகள், காவிமுறைகள் போன்ற ஏனைய முக்கிய விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

எண்வடிவிலான தரவுகள் புள்ளிகளாகவும், கோடுகளாகவும், பரப்புகள்/பலகோண உருவங்களாகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. ஒரு நிலத்தின் மேற்பரப்பு/பாவனை பற்றிய தரவு, புவியியல் தகவல் முறைமையின் எண்வடிவிலான அமைப்பிற்கு மாற்றப்படும்போது, இக்காரணித்தரவானது, தகவலைத் தருகின்ற ஒரு அடுக்கில் காரணித்தரவு பற்றிய நிலப்பரப்புத் தகவலும், நிலப்பரப்போடு தொடர்பில்லாத தகவலும் ஒருங்கிணைக்கப்படுகின்றன. புதிய தகவல்கள் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களில், விடயதான வரைபடங்களையும் நிலப்பரப்புப் பகுப்பாய்வுகளையும் பெறுவதற்காக நிலப்பரப்புத் தரவுகளைப் பிரயோகிக்கும்போது, அளவுத் திட்டங்களை மாற்றவேண்டுவதும், தரவுகளை வெவ்வேறு விதமாக அமைக்க வேண்டுவதும், எறியங்களை மாற்றவேண்டுவதும், பிரதேச ரீதியிலான வழுக்களைத் திருத்த வேண்டுவதும், தரவுகளைச் சீரியதாகப் பேண வேண்டியதும் அவசியமாகும். தொழில்நுட்பத் தன்மைவாய்ந்த இத்தகைய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் அச்சமூகத்திற்குள்ளேயே கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

பொதுவாக தொழில்நுட்ப அல்லது பிரயோகத் தன்மையுள்ள பிரச்சினை உருவாகும்போது, குறிப்பிட்ட நிறுவனங்கள் சர்வதேச நிபுணர்களிடம் தங்கியிருக்க வேண்டியுள்ளது. அநேகமான சந்தர்ப்பங்களில் தீர்வுகளுக்கு வெவ்வேறு நிபுணர்களை அணுகுவதால், அவை இப்பிரச்சினைகளுக்கு தீர்வாக அமைவதில்லை. புவியியல் தகவல் முறைமை/தரவு அடிப்படையின் அபிவிருத்தி பற்றிய பரந்த அநுபவத்தினையும், அறிவையும் கொண்டுள்ள சமூகத்திற்கு வெளியே, ஒரு வலையமைப்பினை அபிவிருத்தி செய்வதே மிகவும் சாத்தியமான முறையாகும். வளர்முக நாட்டிலுள்ள ஒரு பாவனையாளர், ஏனைய பாவனையாளர்களுடனான தொடர்பினை அபிவிருத்தி செய்வதற்கு இலத்திரனியல் முறைமயே (E-Mail) சிறந்ததும் விலை குறைந்ததுமான ஊடகமாக இருக்கிறது. தொழில்நுட்ப, பிரயோகப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பாவனையாளர் தொகுதிகளிடமிருந்து ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடியதாக பல்வேறு பாவனையாளர் தொகுதிகள் இருக்கின்றன. உதாரணமாக GIS-L, Computer Info Systems, GIS, SCI, Mage Processing, AAGMSG, Geograph போன்ற இலக்ரோனிக் பாவனையாளர் தொகுதிகள் நிலப்பரப்போடு தொடர்புள்ள தரவுப் பிரயோகங்களைப்பற்றி கவனம் செலுத்துகின்றன. அதே சமயம் வேறுசில எலக்ரோனிக் செயல்முறைகள், மென்கல உற்பத்தியாளர்களினால் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய முறைகளோடு தொடர்பினை ஏற்படுத்துவதன் மூலமாக பாவனையாளர் ஒருவர் தனக்கேற்ற மென்கலம், வன்கலம் பற்றிய தகவலையும், அவைபற்றிய வினாக்களுக்கான ஆலோசனைகளையும் பெற முடியும்; அல்லது அவை தொடர்பான உரையாடல்களில் ஈடுபடமுடியும்.

## முடிவுரை

புவியியல் தகவல் முறைமைத் தொழில்நுட்பமானது, வளர்முக நாடுகளிலுள்ள இயற்கை வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கும், அவற்றின் பொருளாதார அபிவிருத்திக்கும் ஒரு பெறுமதி வாய்ந்த கருவியாகும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. எனினும், ஒரு தொடர்ச்சியான, உறுதியான தொழில்நுட்ப அபிவிருத்தியினை எய்தினால் மாத்திரமே இத்தொழில்நுட்பத்தின் முழு அளவிலான பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும். அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும், வளர்முக நாடுகளிலும் இம்முறைமையினை அறிமுகப்படுத்துகின்ற நிறுவனங்களினது ஒத்துழைப்பினூடாகவும், புவியியல் தகவல் முறைமைச் சமூகத்தினது ஒத்துழைப்பினூடாகவும் இதனைச் செயற்படுத்தலாம்.

இலங்கை அஞ்சல் திணைக்களத்தில் செய்திப்பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண்: QD/57/News/93

போர், பொருளாதார தடை மற்றும் சில அரசியல் தவறுகள் என்பவற்றினால் உருவாக்கப்பட்டிருந்த கஷ்ட நிலைமைகளையடுத்து, 1990ல் பெரும்பான்மையான வாக்காளர்கள் சார்டினிஸ்டுகளை தண்டித்துள்ளார்கள் என்பது உண்மையாகும். ஆனால், புரட்சிகர நிகழ்வுப் போக்கு சமூகத்தின் மீது ஆழமான தாக்கங்களை எடுத்து வந்துள்ளது. வெறும் ஆணைகளின் மூலம் அதனை ஒழித்துவிட முடியாது.

பிராங்கோயிஸ் ஹௌடார்ட்

பிரதி விலை: ரூ. 10/-
வருட சந்தா: ரூ. 120/-

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பிரிவு வெளியீடு

உரிய முறையில் 'பொருளியல் நோக்கின்' பெயரை
குறிப்பிட்டு, அதில் இடம்பெறும் கட்டுரைகளை மேற்கோள்
காட்டவோ மீளப் பிரசுரிக்கவோ முடியும்.

---

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், இலங்கை